கல்வெட்டுச் சொல்லகராதி

EPIGRAPHICAL GLOSSARY

ஆசிரியர்
தி.நா. சுப்பிரமணியன்

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்,** இ.ஆ.ப.,

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008.
2011 - திருவள்ளுவர் ஆண்டு 2042

கல்வெட்டுச் சொல்லகராதி

EPIGRAPHICAL GLOSSARY

ஆசிரியர்
தி. நா. சுப்பிரமணியன்

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் **தி. ஸ்ரீ. ஸ்ரீதர்,** இஆப,

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008
2011-திருவள்ளுவர் ஆண்டு 2042

BIBLIOGAPHY

Title	:	KALVETTUCH CHOLLAGARADHI
Author	:	T. N. SUBRAMANIYAN
General Editor	:	Principal Secretary & Commissioner
Copy right	:	Tamil Nadu State Dept. of Archaeology
Subject	:	Epigraphy
Language	:	Tamil & English
Edition	:	First
Publication No	:	230
No of Copies	:	500
Year of Pub.	:	2011 - Tiruvalluvar Aandu 2042
No. of Pages	:	216
Paper used	:	80 GSM Maplitho
Printer	:	Royapettah Stationary and Printing Industrial Co.op Society. 26, Koya Arunagri 1st Street, Royapettah, Chennai-14.
Publisher	:	Tamil Nadu State Department of Archaeology Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai-600 008
Price	:	**Rs. 109/-**

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டிலுள்ள கல்வெட்டுகளைப் படியெடுத்து நூலாக வெளியிடும் பணியினை முதன்மைப் பணியாக மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள சுமார் 25,000 கல்வெட்டுகளில் 23,500 கல்வெட்டுகள் இதுவரை படியெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் கல்வெட்டு முனைப்புத் திட்டத்தின்கீழ் 2004-ஆம் ஆண்டு முதல் டிசம்பர் 2010-ஆம் ஆண்டு வரை சுமார் 14,500 கல்வெட்டுகள் படியெடுக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுவரை படியெடுத்துள்ள 23,500 கல்வெட்டுகளில் 5600 கல்வெட்டுகள் 36 தொகுதிகளாக வெளிவந்துள்ளன.

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையின் கட்டுபாட்டில் இயங்கி வரும் அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையம், திரு. தி. நா. சுப்பிரமணியன் அவர்கள் எழுதி 1957-இல் வெளியிட்ட "தென்னிந்திய கோயிற் சாசனங்கள்" பாகம்-3 பகுதி-2 என்னும் நூலில் கல்வெட்டுச் சொற்களுக்கு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பொருள் கூறப்பட்டுள்ளன. அக்கல்வெட்டுச் சொல்லகராதி பகுதியினை தனியாக எடுத்து நூலாக தற்போது வெளியிடப்படுகிறது.

இச்சொல்லகராதியினை தொகுத்து வெளியிட்ட திரு. தி. நா. சுப்பிரமணியன் அவர்களின் சீரியப் பணி போற்றுதலுக்குரியதாகும். மறைந்த திரு. தி. நா. சுப்பிரமணியன் அவர்களுக்குச் சிறப்புச் செய்யும் வண்ணம் இந்நூலை வெளியிடுவதில் தொல்லியல் துறை பெருமையடைகிறது.

இந்நூலின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி.சு. சம்பத், திரு. இரா. சிவானந்தம் ஆகிய இருவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

இந்நூல் சிறப்பாக வெளியிட நிதியுதவி அளித்துள்ள தமிழ்நாடு அரசுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.

வரலாறு, தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் துறை மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், ஆர்வலர்களிடையே பெருவரவேற்பினைப் பெற்ற 'தென்னிந்திய கோயிற் சாசனங்கள்' என்னும் நூல் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விட்டன. மாணவர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் ஆகியோரின் வேண்டுகோளுக் கிணங்க கல்வெட்டுகளில் உள்ள சொற்களுக்கு உரிய பொருளினை அனைவரும் அறிந்திடும் வகையில் 'கல்வெட்டுச் சொல்லகராதி' என்னும் இந்நூல் வெளியிடப்படுகிறது. இந்நூலினை அனைவரும் படித்து பயனுறக் கேட்டுக்கொள்கிறேன்.

நாள் : 27-1-2011 **தி.ஸ்ரீ. ஸ்ரீதர்**

சென்னை-600 008 முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

உயிரெழுத்துக்கள்
V O W E L S



மெய் எழுத்துக்கள்
CONSONENTS



கல்வெட்டுச் சொல்லகராதி

கல்வெட்டுச் சொல்லகராதி

அக்கசாலை : நாணய சாலை

அக்கசாலை வரி : [நாணயங்களை அச்சிடுவதற்காக] நாணய சாலைக்கு இறுக்கும் வரி

அக்கம் : முன்னாளிலே வழங்கிவந்த ஒரு நாணயம் ; நாணய சாலையையும் குறிக்கும்

அக்கன் : தமக்கையைக் குறிக்கும் மரியாதைச் சொல்

அக்காரவடிசில் : சர்க்கரைப் பொங்கல்

அக்காளி, அக்காளிப் பிரசாதம் : கோயில் பிரசாத வகை; அக்காரவடிசிலே போலும்

அக்கிரசாலை : பிராமணர்களுக்குச் சோறுபோடும் இடம்

அக்கிரம் : கோயிலில் மூர்த்திக்கு நிவேதனப் பொருள் ; அக்காரவடிசிலே இவ்விதம் குறிக்கப்படுகிறது போலும்

அக்கினிஷ்டை : விறகு

அக்ரமகாதேவி : பட்டமகிஷிகளுள் மூத்தவள்

அக்ரமண்டபம் : கோயிலில் முன் மண்டபம் ; முக மண்டபம்

அகச்சுற்று : கோயிலின் உட்பிராகாரம்

அககாழிகையார்: கோயில் கர்ப்பகிருகத்தை நிர்வகிப்பவர்

அகப்பரிவாரம் : அரண்மனையிலே பணி செய்யும் பரிவாரம்

அகம்படி : குடும்பம்; குடும்பத்தைச்சேர்ந்தது; உள் துறை; அந்தப்புரம்

அகம்படி உடையான் : குடி, குடிமக்கள் அல்லது குடும்பி

அகம்படிமுதலிகள் : அரண்மனை அந்தப்புரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் (அகம்படி மற முதலிகள்........மூவேந்த வேளார்)

அகம்படிப்பேண்டுகள் : அரண்மனை அந்தப்புரத்தில் பணிபுரியும் பெண்கள்

அகமார்க்கம் : முக்குணம்பற்றி வரும் மெய்க்கூத்து ; கோயில்களில் ஆடப்பெறும் நாட்டிய வகை; தெய்வ சம்பந்தம் கொண்டது போலும்

அகரப்பற்று : பிராமணர்களுக்கு இறையிலியாக வழங்கப்பெற்ற நிலம்; அகரத்துக்குச் சொந்தமான நிலங்கள்

அகரப் பிரம்மதேயம் : பிராமணர் குடியிருப்புக்காகப் பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பெற்ற கிராமம்; அவ்வூர்ச் சபையையும் குறிக்கும்

அகரம் : அக்கிரகாரம் என்பதன் வேறு வடிவம்; அகரப்பிரம்மதேயம் பார்க்க.

அகவிலை : இடையூறு

அகழி : சிறு பள்ளம்

அகழிதிருத்துதல் : சிறு பள்ளங்களைத் தூர்த்துச் சமமாக்குதல் (புஞ்சைத்திடல் கல்லி அகழி திருத்தி)

அகிதம் : கேடு ; இடையூறு ; தீமை ; தீங்கு; சில சமயங்களில் அகுதம் எனவும் காணப்படும்

அகை வாய்க்கால் : கிராமங்களில் நிலங்களுக்குத் தண்ணீர் பாயும் சிறு கால்

அகோவனம் : பாழ்பூமி ; தரிசுநிலம்

அங்கசாலை : நடனசாலை

அங்கதேவதை : பரிவார தேவதை

அங்கமணி : மணப் பெண்ணுக்குக் கொடுக்கும் சீதனப் பொருள்

அங்கமணி திரவியம் : சீதனப் பணம்

அங்கரங்க வைபவம், அங்கரங்க வைபோகம் : சகல உபசாரங்களும் கூடிய பூசை ; சோடச உபசார பூசை ; ராஜோபசாரம்

அங்கரக்ஷகன் : மெய்காவலன்

அங்கவயிச்சியர் : (அங்க+வைத்தியன்) ஆயுள்வேத வைத்தியர்

அங்காடிக்கூலி ; அங்காடிப்பாட்டம் : கடைகளுக்காக இறுக்கும் வரி

அச்சதறி : அச்சுத்தறியே போலும்

அச்சு : முன்னாளில் வழங்கிவந்த ஒரு நாணயம்

அச்சுத்தறி : தறிவகை; அதற்கு இறுக்கவேண்டிய வரி

அச்சுவரி : பொன்வரி என்பர். பொன்னை நாணயமாக அச்சிட இறுக்கும் வரிபோலும்

அச்சை : வேதவாக்கியம்

அஞ்சஷ்ட சத்துச் சபை : (அஞ்சு+அஷ்டம்+சத்து+சபை) கிராமச் சபை வகை ; ஐந்து, எட்டு உறுப்பினர்களைக் கொண்டவை (ஐம் பெருங் குழு, எண்பேராயம் என்பனவே போலும்)

அஞ்ஞாழிக்கால் : ஐந்து நாழிகை அளவு கொண்ட படி

அஞ்சினான் புகலிடம் : துன்புறுவோருக்குப் பாதுகாப்பு அளிக்கும் இடம் ; அடைக்கலம் புகும் இடம், அபயம் எனவும் பெறும்

அஞ்சுபஞ்சாலத்தார் : பஞ்ச கம்மாளர்; கம்மாளர் வகுப்பு ஐந்தைச் சேர்ந்தவர்

அஞ்சுவண்ணம் : பஞ்ச கம்மாளர் ; அவர்களுடைய சபை ; கன்னடத் திலே ஹஞ்ஜமந எனப் பெறும்

அட்டவணை : அரசாங்கத்து வருவாயான தீர்வைகளை நிர்ணயித்து வசூலிக்கும் பிரிவு ; நிலவரி இலாகா ; அந்தத் துறையின் அதிகாரிகள்

அட்டிற்பேறு : கோயிற் பணியாளரின் விநியோகத்துக்குரிய பிரசாதக்கட்டளை

அட்டிற்பேறு : நீர்வார்த்துத் தானம் செய்யப்பெறுவது

அட்டிமுதல் : தானம் கொடுக்கப்பெற்ற சொத்து; அதன் வருமானத்தை மட்டுமே உபயோகித்தல் வேண்டும்

அட்டுக்கிறை: தர்மத்துக்கு அளிப்பவற்றின்மீது விதிக்கும் வரிபோலும்

அடக்கிராவி : நெல் வகை

அட[ர்*]ந்தேற்றம் : மொத்தமாக நிர்ணயிக்கப் பெற்ற வரி

அடவி : போர்ப்படை

அடவிமார், அடவுசெய்வார் : நெய்வோருள் ஒரு பிரிவினர்

அடவோலை : அடையோலை பார்க்க (அடைவோலையின் திரிபேபோலும்)

அடிக்காசு : சந்தையில் கடைக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்பெறும் வரி

அடிகள்மார் : (பக்தர்கள்) கோயிலில் நடனம் ஆடும் பெண்டிர்

அடிமைக்காசு : கோயில் ஊழியர்களிடம் வசூலிக்கும் வரி

அடியாள் : வேலைக்காரி

அடியுறை : பாத காணிக்கை; அடியிறை, அடியறை என்பன போன்ற வடிவங்களும் காணப்படுகின்றன

அடுக்களைப்புறம் : கோயில் மடைப்பள்ளிச் செலவுக்காக விடப்படும் மானியம்

அடுத்தூண் : ஒரு மாதச் செலவுக்கு வேண்டும் பணம்

அடைகுடி : பயிரிடுங்குடி

அடைகுத்துதல் : அடைமானம் வைத்தல்

அடை கொள்ளுதல் : ஒற்றியாகப் பெறுதல்

அடைதறி : கூலிக்கு வேலை செய்யும் தறி

அடைப்படி : அடைமானம்; அடைமானச்சீட்டு

அடைப்பம் : வெற்றிலைச் செல்லம்; வெற்றிலைச் செல்லத்தை ஏந்தியிருப்பவன்; ராஜ சபையிலே அரசர்க்குப் பக்கத்தில் வெற்றிலைத் தட்டு முதலியவற்றைக்கொண்டு உடன் இருக்கும் அதிகாரி; அடைப்பு எனவும் அடைப்பக் காரன் எனவும் பெறும்

அடைப்பு : அடைமானம் பெற்றுள்ள நிலம்

அடைப்புமுதலிகள் : சபையின் காரிய நிர்வாகிகள்; நில அடைப்பைக் கவனிப்பவர் போலும்

அடை முதல் பற்று : குடிகட்குப் பற்றாக அடைக்கப்பட்ட நிலம்

அடைக்காயமுது : *பாக்கு; அடையமுது எனவும் பெறும்*

அடையாள் : *வேலைக்காரன் (அடையாளம் கொண்டவன்)*

அடையெழுதுதல் : *கணக்கில் எழுதுதல்*

அடையோலை : *அடைமானச் சீட்டு*

அண்ணாவி, அண்ணாழ்வி : *தமையன்*

அணுக்கர், அணுக்கியர் : *அரசர் முதலியோரிடம் நெருங்கிப் பணிபுரிவோர்; அந்தரங்க ஊழியர்*

அணுக்கச் சேவகம் : *அணுக்காகச் சேவை செய்வது*

அணுக்க விளக்கு : *கோயிலில் மூர்த்திக்குப் பக்கத்தில் எரியும் திரு விளக்கு*

அத்தியயன விருத்தி : *கோயிலில் சுவாமி சந்நிதியில் வேதம் ஓதுவதற்கு விடப்பெற்ற மானியம் : அத்தியயனாங்கம் எனவும் பெறும்*

அதரஞ் செய்தல் : *தடைசெய்தல்*

அதிகரண தண்டம் : *அதிகரணம் என்னும் நியாயசபை விதிக்கும் தண்டம்; அபராதம்*

அதிகரணம் : *நியாயசபை வகை : பிரதானமான சபையேபோலும்*

அதிகாரப்போன் : *பொன்னகை இறுக்கும் வரிவகை; அதிகாரவர்த்தனையே போலும்*

அதிகாரவர்த்தனை: *அதிகாரிகளுக்கு வழங்கும் காணிக்கை*

அர்த்தஜாமப்புறம் : *கோயிலில் அர்த்த ஜாமப் பூசை செய்வதற்காக விடப்பெற்ற மானியம்*

அறையோலை : *பறையறைந்து பிரகடனப் படுத்தவேண்டிய உத்தரவு*

அவனிவேதனம் : *பாடி காவல்; ஊர்காவல்*

அதிகாரிச்சி : *அதிகாரியின் மனைவி; பெண்களிலே அதிகாரப் பதவி வகிப்பவரையும் குறிக்கும் போலும்*

அதிகாரப் பேறு : *அதிகாரிகளுக்கு வழங்கும் காணிக்கை; அதிகாரவர்த்தனை பார்க்க*

அதிகார மேலெழுத்து : *கீழ் அதிகாரிகள் இட்ட கட்டளையை மாற்றி மேலிடத்தார் அளிக்கும் உத்தரவு*

அதிர்காணி : *(கிராம நிலங்களில்) காணியாட்சி உரிமை*

அதிஷ்டானம் : *இருக்கை; ஆசனம்; கோயில் விமானத்தின் அடிப் பகுதி*

அந்தர வினியோகம் : *உள்வரி வகையில் நீக்கப்பெற்ற தொகையை ஏற்றுக் கொடுப்பதில் வரும் பங்கு*

அந்தராயக் காசு, அந்தராயப் பாட்டம் : *அந்தராயம் பார்க்க*

அந்தராயம் : *உள்வரி; உள்வருமானம்; ஊர்ச்சபை, நாட்டவர் போன்ற ஸ்தாபனங்களுக்கு இறுக்கும் வரி*

அந்தராள மண்டபம் : அர்த்த மண்டபம்; கோயிலில் முகமண்டபத்திக்கும் கர்ப்ப கிருகத்துக்கும் இடைப்பட்ட பகுதி

அந்திக் காப்பு : கோயிலில் கடவுளுக்கு மாலைக்காலத்தில் செய்யும் பூசை

அபய சாசனம் : புகலிடமும் பாதுகாப்பும் அளிப்பதாகத் தெரிவிக்கும் பத்திரம்

அபயம் : பாதுகாப்பு அளித்தல்; புகலிடம்

அபிஷேகக்காணி : அபிஷேகக் காணிக்கை பார்க்க

அபிஷேகக் காணிக்கை : மகுடாபிஷேகம் ஆனதும் அரசனை நேரில் கண்டு விசுவாசத்தைத் தெரிவித்துச் செலுத்தும் காணிக்கை

அபிஷேக நாமம் : பட்டம் கட்டப்பெறும் காலத்தில் தரிக்கும் பெயர்

அபிஷேகம் : தலையணி வகை; கிரீடம்

அபிஷேக மண்டபம் : திருமஞ்சன சாலை; குளிக்கும் இடம் என்றும் வழங்கப்பெறும்

அபூரி, அபூர்வி : வேதம் வல்லவர்; பெரும்பாலும் தலயாத்திரை செய்யும் பிராமணரை குறிக்கும்; மீமாம்சகரைக் குறிக்கும்போலும்

அபோஹனம் : பாழ் நிலம், தரிசு நிலம் (அகோவனம் போலும்)

அம்பலத்தார் : கிராமப் பொதுச் சபையார்

அம்பலம் : சபை; கிராமச் சபை கூடும் இடம்; சிவபெருமான் கோயில்

அம்பலப் புறம் : சிவன் கோயிலுக்கு விடப்பெற்ற நிலம்; தேவதானம்

அம்புமுதுபாடன், அம்புமுதுவரை : முத்து வகை

அமஞ்சி : கூலி இல்லாமல் வேலை செய்வது

அமரபக்ஷம் : அபரபக்ஷம்; தேய்பிறை

அமரம் : உயர்தர அதிகாரிகளின் நிர்வாகத்தில் விடப்படும் நிலப்பகுதி. அதிலே அவர்கள் வரி வசூல் செய்து படை திரட்டி வேண்டும் போது அரசனுக்குச் சேவைபுரியத் தயாராக இருத்தல் வேண்டும். அரசாங்கத்துக்குத் திறைப்பணமும் செலுத்தவேண்டும். சிற்றரசுப் பதவி போன்றது

அமரநாயகம் : அமரப்பதவி

அமரமாகாணி : அமரநாயக்கனுக்கு அளிக்கப்பெற்ற நிலப் பகுதி

அமிர்த கணத்தார் : ஊர் நிர்வாகம் செய்யும் கணப்பெருமக்கள்; கோயில் ரொக்க வருமானங்களைக் கணக்கிடும் சபையார்

அமுது(ப்)படி : அமுதுபடைத்தல்; நைவேத்தியம்

அர்ச்சனா போகம், அர்ச்சனா விருத்தி : கோயிலில் அர்ச்சனை நடைபெறுவதன் செலவுக்காக விடப்பெற்ற நிலம்

அர்ச்சனாவிபவகாணி : கோயிற் பூசகர்களுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்

அர்த்த சந்திரன் : (பாதி சந்திரன்) திருவாசியின் ஒரு பாகம்; ஓர் ஆபரண வகையையும் குறிக்கும்

அர்த்தாங்கி : மனைவி

அரக்கல் : அரசாங்கத்துக்குச் செலுத்தும் இறையைச் சிறு பகுதிகளாகக் கட்டுவதற்கான தவணை

அரசு : காவல் சுதந்தரம்

அரசுப் பேறு : நாட்டுக் காவலுக்காக வசூலிக்கப்பெறும் வரி [மஹாராஜப் பிரயோசனம் என்று தெலுங்கு நாட்டுச் சாசனங்களில் காணப்பெறுவது இதுவேயாக இருத்தலும் கூடும்.]

அரிகரு : மாசூல்; விளைவு

அரிகூலி : நெற்கதிர் அறுவடையின்போது அரியாகக் கொடுக்கும் கூலி

அரிகொழி, அரிசித் துண்டம் : பழைய வரி வகை

அரிசிக் காணம் : அரிசி குத்துவதற்காக இறுக்கும் வரி; கூற்றரிசி எனவும் வழங்கப்படுவது

அரிப்புச்சரி : தொங்கல் ஆபரண வகை

அரிவாணம் : செப்புத் தாலம்

அருந்தோடு : (அருந்து + ஓடு) சாப்பிடும் தட்டுக் கணக்கின்மீது இறுக்கும் வரி

அரையன் : பழைய நாளில் மன்னர் அளித்துவந்த பட்டம்

அல்பமிறை : தானியமாகச் செலுத்தும் ஒரு வரி; சிறுவரி போலும்

அவசரம் : அரசன் பக்கத்திலே இருந்து அவ்வப்போது விஷயங்களை அரசனுக்கு அறிவிக்கும் அரசாங்க உத்தியோகங்களுள் ஒன்று

அவசரவர்த்தனை : அவசரம் என்னும் அதிகாரிக்குச் செலுத்தப் பெறும் காணிக்கை

அவதானம் : அவசானம், முடிவு

அவலமுதுப்புறம் : (அவல் அமுது + புறம்) அவல் நிவேதனத்துக்காகக் கோயிலுக்கு விட்ட இறையிலி நிலம்

அவிக்கிணறு : கோயில் சுவரிலே காற்றோட்டத்துக்காக இடும் துவாரம்

அவிரோதம் : விரோதம் இன்மை; நட்பு

அழகச்சு : ஒரு நாணயம் (அழகன் பெயரால் வழங்கிய அச்சு)

அழகெருது, அழகெருது காட்சிக் காசு : நல்லெருது பார்க்க

அழிவு : பயிருக்கு நேரிடும் சேதம்

அழிவு : செலவு

அழிவு செய்வான் : வரவு செலவுகளை நிர்வகிப்பவன்

அழிவு பிழை : உரியகாலத்தில் செலுத்தாதற்காகக் கொடுக்கவேண்டிய தண்டம்

அழுகல் சரக்கு : குப்பை கூளங்களைச் சேகரித்து [எருவாக்குதல் போன்ற] உரிமை போலும்

அள்ளாயம் : சந்தையில் விற்பனைக்கு வரும சரக்குகளில் ஒரு பிடி அல்லது ஒரு குறிப்பிட்ட அளவு எடுத்துக்கொள்ளும் உரிமை; அள்ளு எனப் பெறுவதும் இதுவே போலும்

அளவர் : உழும் குடிகளுள் ஒரு வகையினர்; உப்பளத்தில் வேலை செய்வோர்

அளவு : நில அளவு, 'ஸர்வே'

அளு : சந்தையிலிருந்து பெறும் வரிவகைகளில் ஒன்று; அள்ளு, அள்ளாயம் என்பவை இதுவே போலும்

அற : முற்றும், முழுவதும்

அறங்காவல் : கோயில் முதலிய தர்ம ஸ்தாபனங்களைப் பாதுகாத்தல்

அறச் சாலா போகம் : அன்னசாலைக்காக வரியில்லாமல் விடப்பட்ட நிலம்; சாலாபோகம் என்றும் குறிக்கப்படும்

அறதேயன் : தர்மங்களைப் பாதுகாத்து நடத்துவோன்

அறவோலை : தர்ம சாசனம்

அறுதிமுறி : தீர்ந்துபோன கணக்குச் சீட்டு

அறுமுறி : உடன்படிக்கைப் பத்திரம் (அறுதிமுறி?)

அறை காவல் : கோயிலில் உக்கிராணத்தின் நிர்வாகப் பொறுப்புள்ள அதிகாரி

அறையோலை : யாவரும் அறிவதற்காகப் பிரகடனப்படுத்தப் பெறும் ஓலை

அன்றாடு நற்காசு : வழக்கில் உள்ளதும் மாற்றுக் குறையாததுமான காசு?

ஆன்றுள் கோ : அந்தந்தக் காலத்தில் அரசுபுரியும் மன்னன்

ஆன்வயத்தார் : அந்த வமிசத்தில் பிறந்தவர்

அன்னிய நாமகரணம் : இரவல் பெயரில் காரியம் செய்வது (அன்னிய நாமகரணத் தீட்டுக் கொடுத்த பரிசாவது)

அனாதிபாழ் : நெடுங்காலமாகப் பாழாகக் கிடந்த இடம்

அனுசிதம் : கெடுதி

அனுதாரம் : காப்பு; போஷணை

அனுபந்தம் : உதவி

அனுபோகப் பற்றேழுகு : சொத்துக்கு உரிய மூலபத்திரங்களை அனுபோகத்தை ஒட்டிப் புதுப்பித்தல்

அனுவர்த்தனை : வர்த்தனை என்ற வகையைச்சேர்ந்த சிறு வரிகள்

அஷ்டபரிபாலனம் : அஷ்ட திக்குப் பாலகர்கள்

அஸ்திகடை : கடும்போர்

அஷ்டபோகம் : நிலத்திலே அனுபவிக்கும் எட்டுவகை உரிமை : விக்கிரயம், தானம், வினிமயம், ஜலம், தரு, பாஷாணம், நிதி, நிக்ஷேபம் என்பன. மற்றொரு சாரார் அக்ஷிணி, ஆகாமி, ஜலாமிருதம், பாஷாணம், நிதி, நிக்ஷேபம், சித்தம், சாத்தியம் ஆகிய எட்டும் என்பர் [பெண், ஆடை, அணிகலன், போசனம், தாம்பூலம், பரிமளம், பாட்டு, பூவமளி ஆகிய எட்டு என்ற வகையும் உண்டு.]

அன்னியாயவாவ தண்ட இறை : உரிமை இல்லாத ஒரு லாபத்தை அடைந்ததற்காகத் தண்டம் விதித்து இறுக்கப்பெறும் வரி

அஷ்டவித பக்தி கிரியை : அர்ச்சனை, வந்தனம், ஸ்மரணம், பாதசேவை, ஸ்தவம், பிரதக்ஷிணம், சக்யம், ஆத்ம நிவேதனம் அல்லது ஆத்மார்ப்பணம் ஆகிய எட்டும் கொண்ட பூசை

அஷ்டவிதார்ச்சனை : நீர், வாசனைப் பொருள், புஷ்பம், தானியம், தூபம், தீபம், நைவேத்தியம், தாம்பூலம் ஆகிய எட்டு வகைகளால் பூசிப்பது.

அக்ஷிணி : அஷ்டபோகங்களுள் ஒன்று ; இப்போது கிடைப்பவற்றை குறிக்கும்

ஆக்கம் : செல்வம் ; வருமானம்

ஆக்கப் பெருக்கம் : சீர்திருத்தம் செய்து அதனல் மேலும் உண்டான வருமானம்

ஆகாமி : சுவர்ணதாயம் ; அஷ்டபோகங்களுள் ஒன்று ; இனிமேல் கிடைக்கப் போவதைக் குறிக்கும்

ஆச்சன் : தகப்பன்

ஆசந்திரதாரகம் : சந்திரன், நக்ஷத்திரங்கள் உள்ளவரையில் ; என்றென்றைக்கும்

ஆசந்திரார்க்கம் : சூரிய சந்திரர் உள்ளவரையில்; என்றென்றைக்கும்

ஆசாரியபூசனை : குருக்களுக்கு உரிய சம்பாவனை

ஆசிரியக்கல் : தன்னைக் காத்து உதவும்படி பிறருக்கு எழுதி வைக்கும் சிலாசாசனம்

ஆசிரியப் பிரமாணம் : தன்னைக் காத்து உதவும்படி பிறருக்கு எழுதிக் கொடுக்கும் சீட்டு

ஆசிரியம் : ஆசிரியக்கல் பார்க்க

ஆசீவகக் காசு : ஆஜீவக மதத்தினர் முன்னளில் செலுத்தவேண்டிய வரி ; ஆசிவக்காசு எனவும் பெறும்

ஆசுகவிகள் காசு, ஆசுவக்கடமை : ஆசீவகக்காசு பார்க்க

ஆசுவடிமக்கள் : ஆசீவகப் பொது மக்கள்

ஆட்சிப் பாட்டம் : வரி வகை

ஆட்டாண்டு : ஒவ்வோர் ஆண்டும்

ஆட்டுக்கிறை, ஆட்டுவரி : ஆட்டின்மீது விதிக்கப்படும் வரி

ஆட்டைக் காணிக்கை : வருஷந்தோறும் செலுத்த வேண்டிய காணிக்கை ; ஆட்டைச் சம்மாதம் என்பதும் இதுவே போலும்

ஆட்டைக்கோள் : ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய தொகை

ஆட்டைச் சம்மாதம் : ஆட்டைக் காணிக்கை பார்க்க

ஆட்டைப் பாழ் : வருஷம் முழுதும் தரிசாகக் கிடந்த நிலம்

ஆட்டை வாரியர் : சம்வத்சர வாரியர்; கிராம நிர்வாகத்திலே சில காரியங்களைக் கவனிப்பதற்காக அந்த அந்த ஆண்டு அமைக்கப்படும் சபையார்

ஆடிப்பச்சை : கார்த்திகைப் பச்சை என்பதுடன் சேர்ந்தே காணப்படும். ஆடிநவிரை என்றும் உள்ளது (நவிரை - நெல்வகை ஒன்று); ஆடிக்குறுவையும் உண்டு. ஆகவே ஆடி மாதத்தில் நெல் அறுவடையாகும் காலத்தில் தானியமாகச் செய்யும் செலவுபோலும்

ஆண்டார் : அடியார் ; பக்தர்

ஆண்டுகள்ளடவு : வருஷ வருமானம்

ஆண்டெழுத்துத் தேவை : ஆட்டைச் சம்மாதமே போலும்

ஆணத்தி : அரசன் உத்தரவை நிறைவேற்றுவோர் (ஆஜ்ஞப்தி என்ற வடமொழிச் சொல்லின் வடிவம்) ; அரசன் உத்தரவையும் குறிக்கும்

ஆணியம் : நாள்படி ; தினக்கூலி

ஆணெல் : ஆள் நெல்லு பார்க்க

ஆணை : உத்தரவு

ஆணை வாசல் : பிரதான வாசல்; அரண்மனை வாசல்

ஆணைவிலை : அரசன் உத்தரவின்படி செய்த விற்பனை ; ஆக்ஞாகிரயம் எனவும் பெறும்

ஆந்திறைப் பாட்டம் : கால்நடை வரி

ஆதிக்கப் பேறு : அதிகாரவர்த்தனையே போலும்

ஆதிதாசர் : சண்டேசுவரர்

ஆதிர சாலை : ஆதுலர் சாலை பார்க்க

ஆதிரைப் பிள்ளையார் நோன்பு : திருவாதிரை, பிள்ளையார் சதுர்த்தி முதலிய உற்சவங்களுக்கான செலவுக்கு இறுக்கும் தொகை

ஆதிறைப் பாட்டம் : கால்நடைகளின் மீது விதிக்கும் வரி

ஆதுலர்சாலை : வைத்தியசாலை

ஆமை தவழ் : ஆமை தவழும் நிலம் ; ஆழமான கிணறு

ஆயகம் : ஊர்ச் சபைகளுக்குப் பதிலாகக் கிராம உத்தியோகஸ்தர்கள் சிலரைக் கொண்டு கிராம நிர்வாகத்தை நடத்தும் முறை. அந்த அதிகாரிகள் ஆயகார் எனப்பெறுவர்

ஆயப்பாடி : கிருஷ்ணன் கோயில்: கோகுலம் எனவும் பெறும்

ஆயம் : வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல்

ஆயிரத்தளி : அரண்மனை (ஆயிரம் தளிகொண்ட இடம். தளி - அறை)

ஆயோகவர் : கைக்கோளரில் ஒரு பிரிவினர்

ஆரகுடம் : பித்தளை

ஆராட்சி : ஆராய்ச்சி பார்க்க

ஆராய்ச்சி; மேற்பார்வை ; கணக்குப் பரிசோதனை ; அவற்றைச் செய்யும் அதிகாரி ; அதற்காக இறுக்கும் சிறுவரி ; காரிய ஆராய்ச்சி என்றும் குறிக்கப்பெறும்

ஆராய்ச்சியார் : கணக்குப் பரிசோதனை செய்வோர்

ஆலேபனம் : பூசுதல், மேற்பூச்சு

ஆலை : மண்டபம் (உள்ளாலை : உள் மண்டபம்)

ஆவணம் : பத்திரம்; சீட்டு ; கிரய பத்திரம்; விலையாவணம் எனவும் ஆகும்

ஆவணக்களரி : பத்திரங்களைப் பதிவுசெய்யும் இடம்

ஆவரணம் : மறைப்பு ; மதிட்சுவர் ; சுற்றாலை

ஆழ்வார், ஆழ்வி : தலைவன் ; தலைவி ; மரியாதைக்குரியவரைக் குறிக்கும் சொல்.

ஆள் அமஞ்சி : கூலி இல்லாமல் கடமையாக வேலை செய்வது ; குடிமராமத்து

ஆள்நெல்லு : நெல்லாக இறுக்கும் வரி வகை

ஆள்வரி : தலை(க்கட்டு)வரி ; மகன்மை

ஆளும்கணம், ஆளும் கணத்தார் : கிராம காரியங்களை நிர்வகிக்கும் சபை ; அதன் உறுப்பினர்கள்

ஆற்றங்கரைத் தேவை : ஆற்றங்கரை உடையாமல் பாதுகாக்கும் பொறுப்பும் அதற்கான செலவும்

ஆற்றுக்கால் அமஞ்சி : கிராம மக்களைக்கொண்டே ஆற்றுக் கால்களைத் திருத்துவது ; கூலி இல்லாமல் அவ்வேலையைச் செய்யும் ஆள்

ஆறிடு படுகை : ஆற்று வண்டல் படிந்து புதிதாக உண்டாகும் படுகை நிலம்

ஆற்றுக் குலை : ஆற்றின் கரை ; ஆற்றங்கரைத்தேவையே போலும்

ஆற்றுப் பாட்டம் : ஆற்றங்கரைத்தேவை பார்க்க

ஆனஞ்சு : பஞ்சகவ்யம்; பசுவின் பால், தயிர், நெய், சாணி, சிறுநீர் ஆகிய ஐந்தும் கலந்தது

ஆனவாள் : கோயில் காரியங்களை நடத்தி வைக்கும் அரசாங்க உத்தி யோகஸ்தர்

ஆனைச்சாலை : யானைகள் கட்டும் இடம்; அதன் பராமரிப்புக்காக வசூலிக்கப்பெறும் வரியையும் குறிக்கும்

ஆனையாட்கள் : யானைப் படையினர்

இகுத்துவித்தல் : மடையடைத்தல்

இசைக்கிடாய் : [இது கொங்கு நாட்டுச் சாசனங்களிலேதான் காணப் படுவது] நல்லெருது, நல்பசு என்பனபோல நற்கிடா என்பதே போலும்

இசைகேடு : (இசைவு கேடு) கெடுதி

இசையின் செல்வி : புகழ் மகள்; கலைமகளையும் குறிக்கும்

இசையோலை : ஒப்பந்தச் சீட்டு

இசைவுதீட்டு : உடன்படிக்கைப் பத்திரம்

இடங்கசாலை : (டங்கசாலை) அக்கசாலை; நாணயம் அச்சிடும் இடம்

இடங்கை : இடங்கைச் சாதிகள்

இடங்கைவரி : இடங்கைச் சாதியார் செலுத்தவேண்டிய வரி

இடதுறை : சுவர்ணாதய வகை; இடைத்துறை எனவும் பெறும்; எதைக் குறிப்பதென்று தெளிவாகத் தெரியவில்லை

இடபத் தளியிலார் : கோயிலில் ஊழியம் புரியும் மகளிர்

இடிஞ்சில் : அகல் விளக்குத் தகழி; மண் அகல்

இடை நாழிகை : கோயிலில் அர்த்த மண்டபத்துக்கும் மகா மண்டபத்துக்கும் இடைப்பட்ட பகுதி

இடைப்பாட்டம் : இடையர் வரி; இடைப் பூட்சி எனவும் ஆகும்.

இடையர் வரி : மாடு மேய்ப்பவர் இறுக்கும் வரி

இடையீடு : அரசாங்க உரிமையாயிருந்து பிறருக்கு மாற்றப்பட்ட நிலம்

இடையீடு : பயிரிடும் உரிமை

இடைவட்டை : நடுவில் உள்ளது; வருஷநடுவில் செலுத்தவேண்டிய பொருள்; இடை வெட்டு என்பதும் இதுவே போலும்

இண்டை : தலையைச் சுற்றி அணியும் சிறு வட்டமான பூ மாலை

இடுக்கு : அணியுறுப்பு வகை; ஓர் ஆபரணம்

இயக்குதல் : நடத்தி வருதல்

இயற்றண்டம் : (இயல் தண்டம்) சாதாரண அபராதம்

இரத்தக் காணிக்கை : போரில் வீழ்ந்த வீரருடைய வழியினர்க்கு அளித்த மானியம்

இரத்த மானியம் : இரத்தக் காணிக்கை பார்க்க ; உதிரப்பட்டி, நித்தார் பட்டி, நீத்தார் கோடை என்ற பெயர்களாலும் வழங்கப்பெறும்

இரவுச் சோறு : எச்சோறு பார்க்க

இரவை : இரவு (இரவைக்கு - இராப்பொழுதுக்கு)

இராசகரம் : அரசாங்கம் ; அரண்மனை ; ராஜக்ருஹம் என்பதன் திரிபு

இராசகரகாணிக்கை : அரண்மனைக்கு அந்த அந்தக் காலங்களில் செலுத்தவேண்டிய காணிக்கைப் பொருள்

இராசபோகம் : அரசர்க்கு உரிய பாதுகாவல் வரி

இராசிப்போன் : கலப்பற்ற சுத்தமான தங்கம்

இராசிபாளயம் புள்ளிப்பணம் : பழையநாள் நாணயம்

இராமாநுஜகூடம் : வைஷ்ணவ யாத்திரிகர்கள் தங்கும் சாவடி

இராயசம் : ஆணைப்பத்திரம் ; இராயச வேலையைக் கவனிக்கும் ஓலை நாயகம் போன்ற அரசாங்க அதிகாரி

இராயச வர்த்தனை : இராயச அதிகாரிகளுக்குக் கொடுக்கும் வர்த்தனை

இரு(க்)கால் : இரண்டு தரம்

இருட்கண்டம் : கழுத்தணி வகை (நீலகண்டம் ?)

இருப்புக் கட்டி : (இரும்புக்கட்டி) பூமியிலிருந்து இரும்பைத் தோண்டி எடுத்து உருக்கி வார்க்கும் தொழிலுக்கான வரி; அன்றி இருப்பைக் கட்டி (இலுப்பைக்கட்டி) யெனக் கொண்டால் இலுப்பைப் பிண்ணாக்கு வியாபாரத்துக்கான வரி

இருபூ : இருபோக சாகுபடி

இல்லரி, இல்வரி : மனைவரியே போலும்

இலக்கை : இருப்பிடம் ; குடியிருப்பு

இலக்கை : ஆடை ; மாதச் சம்பளம்

இலாஞ்சனைப் பேறு : அரசனுடைய முத்திரையைப் பொறிப்பதற்குச் செலுத்தவேண்டிய கட்டணம் ; லாஞ்சினைப் பேறு, இலச்சினைப் பேறு எனவும் குறிக்கப்பெறும்

இலைசுனி : மாணிக்கத்தின் குணங்களுள் ஒன்று

இலைச்செப்பு, இலைத்தட்டு : பூசைப் பாத்திரவகை

இலையமுது . வெற்றிலை

இலைவாணியப் பாட்டம் : வெற்றிலை வாணிகம் செய்வோர் இறுக்கும் வரி

இலைவாணியர் : வெற்றிலை வாணிகம் செய்யும் குடி

இழிக்க : (கிணறு) ஆழமாகத் தோண்ட

இழிச்சு : நீக்கி ; (வரி) தள்ளிக் கொடுத்து ; இழித்து என்றும் காணப் பெறும்

இளங்கூறு : இளைய பிரிவு ; இளவரசன்

இளங்கோயில் : பாலாலயம் ; கோயிலைப் புதுப்பிக்கும் காலத்தில் விக்கிரகங்களை வைத்திருக்கும் தனி இடம்
[பழைய நாளில் கட்டப்பெற்று வந்த கோயில் கட்டடங்களில் ஒரு வகையையும் குறிக்கும்]

இளஞ்சிங்கவீரர் : நானுதேசிகள் என்னும் வியாபாரக் குழுவினரின் உட்பிரிவு ; படைத் தொழிலில் ஈடுபட்டவர் போலும்

இளவட்டம் : காளைப் பருவத்தினர்

இளைய நயினர் : (இளைய நாயனர்) முருகக் கடவுள்

இளைய வகை : தாயாதிகளில் இளைய பரம்பரை

இறங்கல் : வரி தவிர்த்தல் [அரசாங்கத்தார்க்குச் செலுத்தவேண்டிய வரியைத் தவிர்த்தலை நீங்கல் என்றும், அவ்விதம் அல்லாமல் அந்த வரியை ஊர்ச்சபை, நகரம் போன்ற ஸ்தாபனங்கள் ஏற்றுக் கொள்வதை இறங்கல் என்றும் கொள்வர்]

இறங்குசாத்து : இறக்குமதி ; இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள வியாபாரிகள்

இறங்குசாத்து : (துவஜ அவரோஹணம்) கொடியிறக்கம் ; அதுசமயம் கோயிலில் நடத்தும் விசேஷம்; இறங்குகையில் செலுத்தும் மரியாதை

இறுப்பு : வரி, தண்டம் முதலியவை செலுத்தல்

இறை : அரசாங்கத்துக்கு இறுக்கும் வரியைப் பொதுவாக உணர்த்தும் சொல்

இறைக்கடன் : நிலவரி

இறை காவல் : பின்னல் செலுத்தவேண்டிய வரிக்காக மொத்தமாகச் செலுத்தும் பணம் ; தலையாரிக்கு உரிய வரி என்றும் கூறுவர்

இறைச் சோறு : எச்சோறு போலும்

இறை திரவியம் : பின்னல் ஆண்டுதோறும் இறுக்க வேண்டிய வரிகளுக்காக மொத்தமாகச் சேர்த்து முன்னதாகவே செலுத்தும் பணம்

இறைப் புணைப் படுதல் : ஒருவன் செலுத்தவேண்டிய வரிக்காக மற்றொருவன் புணை கொடுத்தல்

இறைப் பொருள் : இறைத் திரவியம் பார்க்க

இறைபோகம் : நிலத்தில் வசூலாகும் வரியைமட்டும், அதாவது மேல்வாரத்தை மட்டும் அனுபவிப்பது

இறையிலி : வரி இல்லாத நிலம்

இறையிலிக்காசு : நிலவரி இல்லாத நிலங்களுக்காக இறுக்கும் சிறு இறை போன்றவை ; ஊர்ச் சபையால் இறையிலியாக்கப்பெற்ற நிலங்களின் வரியை ஏற்று ஊரார் கொடுக்கும் பங்கும் ஆகும்

இறையிழித்து : வரி நீக்கி ; இறையிழிச்சு என்றும் எழுதப்பட்டிருக்கும்
இறையிறுக்கும் கோல் : வரி விதிப்பதற்காக நிலத்தை அளக்க உபயோகிக்கும் அளவு கோல்
இறைவிழுத்து : இறையிழித்து பார்க்க
இனவரி, இனவரிக்காசு : அந்த அந்தச் சாதியினர் செலுத்தும் வரி ; ஜாதி ஸித்தாயம் என்று தெலுங்குச் சாசனங்களில் வருவதையும் காண்க

ஈக்காலாணி : ஆபாணத்திக்கு இடும் சிறு ஆணி
ஈச்சோப்பி : ஈயோட்டி
ஈட்டம் : கூட்டம்
ஈரங்கொல்லி, ஈரங்கொள்ளி : வண்ணான் ; அவன் செய்யும் தொழிலுக்கான வரி
ஈழக்காசு, ஈழக் கருங்காசு : முன்னாளில் வழக்கில் இருந்த நாணய வகை ; இலங்கையில் வழங்கிவந்தது ; கருங்காசு எனவும் பெறும்
ஈழக்கையர் : ஈழவருடைய பெண்டிர்
ஈழச்சேரி : கள்ளிறக்குவோர் வாழும் இடம்
ஈழம்புஞ்சை : கள் இறக்குவோர் வரி
ஈழம்பூட்சி : கள் இறக்குவதற்கு விதிக்கும் வரி
ஈழவர் : கள் இறக்குவோர்
ஈழற்கடிவரி : ஈழம் புஞ்சை பார்க்க

உகப்பார்பொன் : கல்யாணம் போன்ற சந்தோஷ காரியங்களுக்குச் செலுத்தும் வரி; கண்ணாலக்காணம் என்பதும் இதுவே போலும்
உகவை : உகப்பார் பொன் பார்க்க
உகிர்ப்புறவன் : நகத்தின்மேல் அணியும் அணிவகை
உச்சம்போழ்து : நடுப்பகல்
உச்சி சந்தி : கோயிலில் நண்பகலில் நடக்கும் பூசை
உசாவடி : சாவடி என்பதன் வேறு வடிவம் ; கோட்டம், கூற்றம் என்பன போல முன்னாளில் வழங்கிய ராஜ்யப் பகுதியின் பெயர்
உட்கொள்ளுதல் : வரி முதலியன வசூலித்தல்
உட்கோயில் : கோயில் கர்ப்பகிருகம்
உட்கோள் : வரி வசூலிப்பதற்காகும் செலவு போலும்
உட்சேவகம் : கிராமச் சேவகம் ; அதற்காகும் செலவு
உட்புரவு : சபை, நாடு முதலிய ஸ்தல ஸ்தாபனங்களால் இறை நீக்கப்பெற்ற நிலம்

உடல்: வருமானத்தை மட்டும் உபயோகிக்கும் நிபந்தனையுடன் இட்ட முதல்

உடன்கூட்டம்: அரசனோடு கூடவே செல்லும் மந்திரிகள்போன்ற உயர்தர அதிகாரிகள்

உடன்கூட்டத்ததிகாரி: அரசன் பக்கத்தில் இருக்கும் பரிவாரமான உடன் கூட்டத்து அதிகாரி

உடன் பாடுவான்: சேர்ந்து பாடுகிறவன்

உடன்வாரம்: மேல்வாரம் குடிவாரமாகப் பிரிக்கப்படாத மொத்த மகசூல்

உடனிலைக் குதிரைச்சேவகர்: குதிரையேறிய மெய்காவலர்

உடைகுளம்: கரை இடிந்து உடைந்து நீர் நில்லாத குளம்

உடைப் படை: நிலைப் படை

உடையார்: அரசன்; உரியவன்; கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம் பெருமான்

உடையார் சாலை: கோயிலைச் சேர்ந்த சோற்றுச் சாலை

உண்டழிவு: உணவு அளிப்பதற்காகும் செலவு

உண்டி யச்சு: நாணய வகை

உண்ணாழிகை: கர்ப்ப கிருகம்

உண்ணாழிகை உடையார், உண்ணாழிகையார்: கர்ப்ப கிருகத்தில் உள்ள கடவுள்; கர்ப்ப கிருகத்தில் சேவை புரிவோர்

உண்ணாழிகை வாரியம்: கர்ப்பகிருக நிர்வாகத்தைக் கவனிக்கும் சபை

உண்ணிலம்: உள்ளே அடங்கிய நிலம்

உத்தமதானி: பிரதிப்பிரயோஜனம் எதிர்பார்க்காமல் தானம் செய்வது; தானங்களுள் சிறந்தது

உத்ரமந்திரி: முக்கியமான மந்திரி; பிரதான மந்திரி

உத்தாரம்: உத்தரவாதம்

உத்தானத் துவாதசி: கார்த்திகை மாதத்துச் சுக்கில பக்ஷத்துத் துவாதசி

உதகதாரை: நீரைத் தாரையாக வார்த்துத் தானம் செய்தல்; உதகம் பண்ணி, உதகஞ்செய்து என்றும் குறிக்கப் பெறும்.

உதக பூர்வம் செய்தல்: தானம் கொடுக்கும்போது நீர் வார்த்துக் கொடுத்தல்

உதாசீனவாரியம்: விருப்பு வெறுப்பு இல்லாமல் இரு தரப்புக்கும் பொதுவாக நின்று பணிபுரியும் குழு; மத்தியஸ்தர் அடங்கிய சபை

உதிரப்பட்டி : போரில் இறந்துபட்டவர்களின் வழிவந்தோர்க்கு வழங்கும் நிலம்; இரத்தக் காணிக்கை

உப்பாயம் : உப்பு வரி

உப்பிஞ்சி : இஞ்சி வகை

உப்புக் காசு : உப்புவரி

உப்புக் கோச்செய்கை : உப்பு உண்டாக்கி எடுக்கும் அரசாங்க உரிமை

உபத்திரகம் : உபத்திரவம்

உபயநாஞுதேசி : நாஞுதேசி என்னும் வியாபாரிகளுடைய குழுவின் இரண்டு பெரும் பிரிவுகள்

உபய-பலிசை : (ரொக்கம், தானியம் ஆகிய) இருவகையாகவும் கிடைக்கும் வட்டி

உபயம் : பழைய சுவர்ணுதாய வகை; உபய மார்க்கம் என்பதும் இதுவே போலும்; அவ்விதமாயின் பெருவழிப் போக்குவாத்திலே இறுக்கும் சுங்கமாகக் கொள்ளலாம்

உபயராணுவம் : இரண்டு பிரிவுகள் கொண்ட சேனை

உபாதி : கடமை; இறுக்க வேண்டிய வரி முதலியன; ஒபாதி என்றும் காணப் பெறும்

உபாயம் : சாதனம், வழி ; உபயம் என்பதே போலும்

உபானம் : கோபுர விமானத்தின் அதிஷ்டானத்தின் அடிப்படை; உபானவரி எனவும் பெறும்

உம்பளிகை : மானியம்; சேவைக்காக விடப்பெற்ற மானிய நிலம்

உரல் வரி : நெல் குற்றும் உரலுக்கு இறுக்கும் வரி

உரிமை : மனைவி

உருத்திர கணம் : சிவனடியார்

உருத்திர கணிகை : சிவன் கோயில் தாசி

உருத்திரர் : சிவனையே பரதெய்வமாக வழிபடுவோர்; சைவர்

உல்கு : சுங்கம்

உல்கூட்டுச் சரக்கு : சுங்கம் வசூலிக்கக்கூடிய பண்டம்

உல்லியக் கூலி : கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துப் பாய்ச்சும் நிலத்துக்கு இறுக்கும் வரி

உலகளவு : நாட்டின் நில அளவு

உலகுடைய பெருமாள் : அரசன்

உலவி பொன் : சுத்தமான தங்கம்

உலாவு காட்சி : வரி வகை

உவ்வி : தலை; வரி வகை ; தலைவரி போலும்

உவச்சக்காணி : கோயிலில் (மத்தளம்) கொட்டும் ஊழியத்துக்கு விடப்படும் மானியம்

உவச்ச வரி : (கோயில் பூசை செய்யும்) உவச்சர் கொடுக்கவேண்டிய வரி
உவச்சன் : கோயிலில் (மத்தளம்) கொட்டுவான் ; பூசாரி
உவச்சு : மத்தளத்தின் ஒரு வகை
உவன்றி : நீர்விலை
உவா : அமாவாசை, பௌர்ணமி ஆகிய இரு தினங்களும்
உழத்தல் : வருந்துதல் ; உழைத்தல்
உழத்தல் : மயங்குதல் ; திகைத்தல்
உழவு காணி : நிலத்தை உழுது பயிரிடுதல்
உழவுகாணியாட்சி : நிலத்தை உழுது பயிர் செய்யும் உரிமை
உழப்பம் : வேலை
உழவுகுடி, உழுகுடி : பயிரிடுங் குடி
உழுதான்குடி : பயிரிடுங்குடி இறுக்க வேண்டிய வரி
உள் பாடன் : கோயில் உத்தியோகங்களுள் ஒன்று
உள்வரி : அந்தராயம்; ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இறுக்கும் வரி; அவ்விதம் செலுத்தவேண்டிய வரிகளை நிச்சயித்து அரசாங்கம் விடுக்கும் ஓலை
உள்ளாலை : உள் மண்டபம் ; உள் பகுதி
உள்ளிட்டம் : நஷ்டம்
உள்ளிட்டார் : [பெயர் குறிக்கப்பெற்றவர்கள்] உள்பட அனைவரும் ; அந்த வமிசத்தவர்கள்
உள்ளிருப்பு: எதிர்பாராத செலவுகளுக்கெனச் சேமித்து வைத்துள்ள நிதி ; க்ஷேம நிதி
உருவோற்றி : திரும்ப மீட்க முடியாத ஒற்றி (அடைமானம்)
உறுபாதை : சிதைவுறும் சிறுபாதைகளைச் சீர்செய்யும் பொறுப்பு
உறைநாழி : முகத்தல் அளவையில் (அறுபது மரக்கால்போன்ற அளவையான) ஒவ்வோர் உறைக்கும் ஒரு நாழி என்று கூலியாகப் பெறுவது

ஊசிவாசி : தையற்காரர்கள் இறுக்கும் வரி போலும்
ஊடுபோக்கு : ஒரு பயிர்செய்யும் போது அதன் இடையிலே செய்யும் வேறு பயிர் ; அவ்விதம் செய்வதற்கான வரி
ஊத்தைப்பாட்டம் : குளத்திலிருந்து வண்டல் முதலியவற்றை வாரி எடுத்தலால் கிடைக்கும் வருவாய்
ஊத்தையட்டுதல் : ஊனமுறுதல் ; தோற்று அவமானப்படுதல்
ஊர் : வேளாண் மக்கள் குடியிருப்பான கிராமம்; அவ்வூருக்கு அமைந்த சபை
ஊர்க்கடமை : ஊர்ச்சபையினர்க்குச் செலுத்தவேண்டிய கடமை வரி

ஊர்க்கணக்கர் ஜீவிதம் : கிராமக் கணக்கு வேலைபார்ப்போர் வாழ் நாளில் அனுபவிக்க விட்ட மானியம்

ஊர்க்கமைஞ்சு : ஊருக்கு அமைந்த ; ஊருக்குப் பொறுப்பான

ஊர்க்கலனை : கிராமத்தின் சிறுதன அதிகாரிகள்

ஊர்க்கழஞ்சு : ஊர்ப் பொதுவாக வைக்கப்பெற்றிருக்கும் நிர்ணயிக் கப் பட்டுள்ள எடை ; அதுபற்றிய வரியையும் குறிக்கும்

ஊர்க்கற் செம்மை : ஊர்ப் பொதுவாக உள்ள நிறைக்கும் உரைகல் மாற்றுக்கும் சமமானது (பொன்)

ஊர்க்கீழ் இறையிலி : ஊர்ச்சபையாரால் வரி நீக்கப்பெற்றதும், அர சாங்கத்துக்கு உரிய அதன் தீர்வையை ஊர்ச்சபையாரே ஏற்று இறுப்பதுமான நிலம்

ஊர்காவல் : கிராமத் தலையாரி

ஊர்ச்சரிகை : ஊர்க்கூட்டம்

ஊர்வாரியம் : கிராமக் காரியங்களைக் கவனிக்க நிறுவப்பெறும் சபை

ஊரமை, ஊராண்மை : ஊர்ப்பொதுக் காரியங்களை நிர்வகித்தல்

ஊரவர் : ஊராக அமைந்த ஊர்ச்சபை ; அதன் உறுப்பினர்

ஊராட்சி : கிராம காரியங்களை நிர்வகித்தல்

ஊராளர் : கிராமத்தை ஆளும் அதிகாரி

ஊரிருக்கை : ஊரைச்சார்ந்த இடம்

ஊரிடு வரிப்பாடு : கிராமச் சபையான ஊர் விதிக்கும் வரி

ஊரேட்டு : வரி வகை ; எண்பேராயம் என்பதன் தொடர்பு கொண்ட தாக இருத்தல் வேண்டும்

ஊரோம் : ஊர் என்னும் கிராமச்சபையாக அமைந்த நாங்கள்

ஊழியம் : பொதுக் காரியங்களுக்கும் அரசாங்க அதிகாரிகளுக்கும் சம்பளம்பெறுமல் (அமஞ்சி போல்) செய்யும் ஊழியம்

எக்கடமை : ஏர்க்கடமை போலும்

எக்காளம் : பவனியில் முன்னே ஊதும் காளம் போன்றது

எச்சோற்றுக் கூற்றுநெல், எற்சோற்றுக் கூற்றரிசி : நெல் குத்துபவர் களுக்கு இரவில் சோறு இடும் கடமைபோலும்

எச்சோறு : கிராம ஊழியர்களுக்கு இரவில் சோறும் 'பாடும் கடமை ; எற்சோறு எனவும் பெறும்

எடுத்துக்கட்டி : சுவர்த் தலைவரிக் கட்டு ; கைப்பிடிச்சுவர்

எடுத்துக்கொட்டி : நெல்லாய வகை ; விவரம் விளங்கவில்லை

எடைவரி : நிறைமேல் விதிக்கப் பெறும் வரி (இடைவரியின் தவறுன வடிவமா ?)

எண்ணெய் (எண்ணை) : எண்ணெய் வியாபாரத்தின்மீது வரி; எண்ணெய் அட்டவேண்டிய நிபந்தனையையும் குறிக்கும்போலும்

எண்ணெய்ப் பந்தம் : இரவில் நடக்கும் கிராமப் பொதுக்காரியங்களுக்கு வாணியன் விளக்கெரிக்க எண்ணெய் கொடுப்பது

எதிரடைபோலை ; அடையோலை எழுதித் தருவோர்க்குக் கொடுக்கும் ஆதாவுச் சீட்டு

எதிராமாண்டு : அடுத்துவரும் வருஷம்

எயில் : கோட்டையாக அமைந்துள்ள ஊர்

எர்க்காடி : ஏர்க்காடி பார்க்க

எரிகரும்பு : அடுப்பு விறகு

எரிமருந்தன் : வெடிமருந்து செய்பவன்

எரிமருந்து : வெடிமருந்து

எருமைப் பொன் : எருமைகளின்மீது விதிக்கப்படும் வரி; காசாகக் கொடுக்க வேண்டியது

எல்கை : எல்லை என்பதன் வேறு வடிவம்

எலவை : (ஏல்வை எனவும் வாசிக்கப் பெறும்) சாவுக்கான வரி; பிணத்தை இடுக்காட்டில் அடக்கம் செய்வதற்கு இறுக்கும் கடமை; துக்கப்புடைவை என்பதும் இதைப்பற்றியதே போலும்

எழுத்து வினியோகம் : கணக்கெழுதும் அதிகாரிகளுக்கு வர்த்தனையாக அளிக்கும் வரி வகை

எழுந்தருளுந் திருமேனி : உற்சவ மூர்த்தி

எறிவீரப் பட்டணம் : எறிவீரர்களுடைய நகரம்

எறிவீரர் : அய்யாவழியைத் தலைநகராகக் கொண்ட நானாதேசி என்னும் வியாபாரக் கூட்டத்தாரின் ஒரு பகுதியினர்; போர்ப்படைப் பிரிவைச் சேர்ந்தவர் போலும்

ஏகபோக இறையிலி : வரி இல்லாமல் உள்ள ஏகபோகக்கிராமம்

ஏகபோகம் : ஒரு கிராமத்தைப் பிறருடைய கூட்டு இல்லாமல் தனி மனிதர் ஒருவரே அனுபவிப்பது

ஏகபோகம் : ஒரே சாகுபடியும் ஆகும்; ஒருபூ

ஏகாங்கி : குடும்பமின்றித் தனித்து வாழும் வைஷ்ணவ அடியார்; விஷ்ணு கோயில் நிர்வாகத்தைக் கவனிப்பவர்

ஏகாவலி, ஏகாவல்லி : ஒற்றைச்சரம் உள்ள மாலை

ஏணிக்காணம் : ஏணியின்மீது விதிக்கப்பட்ட வரி; கள் இறக்குவோர் போன்ற மரமேறிகள் செலுத்தவேண்டியது போலும்

ஏத்தம்புலம், ஏத்த பாடம்: (ஏற்றம் புலம், ஏற்ற பாடம்) ஏற்றம் போட்டுத் தண்ணீர் இறைத்துப் பயிர் செய்யும் நிலம்

ஏந்தல்: பயிர் செய்வதற்கான நீர்பாயும் ஏரி

ஏர்க்கடமை: உழும் ஏரின்மீது விதிக்கப்பெறும் வரி

ஏர்க்காடி: ஒவ்வோர் ஏருக்கும் ஒரு காடி நெல்லாக இறுக்கவேண்டிய வரி; ஏர்க்காணிக்கை எனவும் பெறும்

ஏர்ப்பொன்: ஒவ்வோர் ஏருக்கும் இறுக்கவேண்டிய காசாயவர்க்க வரி

ஏரி ஆயம்: நீர் நிலைகளிலிருந்து மீன்விலை போல் கிடைக்கும் வருவாய்

ஏரி ஈவு: ஏரியின் பராமரிப்புச் செலவுக்காக அதன் நீர் பாயும் நிலத்தைப் பயிரிடுவோர் கொடுக்கவேண்டிய பங்கு

ஏரிக்காடி: ஏரியின் நீர் பாய்ச்சும் நிலம் ஒன்றுக்குக் காடி நெல்வீதம் இறுக்கும் வரி

ஏரிக்கோப்பு: வெள்ளம் வந்த காலத்தில் நீர் நிறைந்து மூழ்கியும் மற்ற நாட்களில் சாகுபடிக்கு ஏற்புடையதுமாக ஏரியின் உள்வாயில் உள்ள நிலம்; ஏரிநீர்க்கோப்பு எனவும் பெறும்

ஏரிப்பட்டி: ஏரியின் பராமரிப்புச் செலவுக்காக விடப்பெற்ற நிலம்; ஏரி மானியம் எனவும் பெறும்

ஏரிமீன் காசு: நீர் நிலைகளின் மீன் விற்பனையால் கிடைக்கும் வருவாய்

ஏரிமீன் பாட்டம்: ஏரிமீன் காசு பார்க்க

ஏரிமீன் விலைப்பாட்டம்: ஏரிமீன் காசு பார்க்க

ஏரிமுதல்: வைக்கப்பட்ட நிலத்தையோ பொருளையோ தொடாமல் அதன் வருமானத்தைக்கொண்டே ஏரியின் பராமரிப்பைச் செய்ய வேண்டிய முதல்

ஏரிவாய்: ஏரியின் வடிகால் பக்கத்தில் புறவாயில் ஏரிக்கோப்புபோல் அமைந்த நிலம்

ஏரிவாரியம்: ஏரியின் பராமரிப்புக்காக நிறுவப்பட்ட சபை

ஏலவரிசி: ஏலக்காயின் உள்ளே இருக்கும் அரிசி

ஏற்றம்: அதிகப்படி, மிகுதி

ஏற்றக் குறைத்தல்: மிகுதியும் குறைவும்; உயர்வும் தாழ்வும்

ஏற்றுதல்: குடியேற்றுதல்; ஸ்தாபித்தல்

ஏற்றுதல்: அதிகப்படுத்தல்; மேற்கொள்ளுதல்; கூட்டுதல்

ஏறுசாத்து: கோயில் உற்சவ காலத்தில் கொடி ஏற்றிச் செய்யும் விசேஷ பூசை; துவஜாரோஹணம்; வாகனத்தில் ஏறும்போது செய்யும் மரியாதை

ஏறுசாத்து: ஏற்றுமதிச் சாக்கு; ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபடுவோர்

ஐஞ்சுகணத்தார் : ஐம் பெருங் குழுவே போலும்
ஐந்தலை மணி : ஐந்து தனி மணிகளுடைய கொத்துமணி
ஐயன்பாத்தி : ஐயனார் கோயிலுக்கு விட்ட மானியம்

ஒட்டு : ஒப்புக் கொள்ளுதல் ; உடன்படிக்கை
ஒட்டுக்காசு : ஒப்புக் கொண்ட காசு ; உடன்படிக்கையின்படி செலுத்த வேண்டிய தொகை
ஒடம்படி : உடன்படிக்கை
ஒடுக்குதல் : பண்டாரத்தில் சேர்த்தல்
ஒப்புமுத்து : நல்ல உருவம் அமைந்த முத்து
ஒருதுடை : ஒருதடவை ; ஒருதரம்
ஒருபூ : ஒரு போகம்
ஒளிவண்ணாற் பாறை : துணி வெளுப்போர் இறுக்கும் வரி
ஒழிவின்றி : நீக்கல் இன்றி, உட்பட
ஒழுக்கவி : கோயிலில் நாள்தோறும் படைக்கும் சமைத்த உணவு
ஒழுகு : நிலத்தின் வரலாறு குறிக்கும் கணக்கு

ஓடாணி : ஆபரணத்திலே மாட்டுவதற்கான ஆணி
ஓடு : செங்கல் ; சாப்பிடுவதற்கான மண்பாண்டம்
ஓத்து : அதிகாரம் ; உரிமை
ஓரணி : இரட்டை
ஓலக்கம் : அத்தாணிக் காட்சி சபை கூடுதல்
ஓலக்க மண்டபம் : அத்தாணி மண்டபம் ; சபா மண்டபம்
ஓலை : உத்தரவு ; அரசன் உத்தரவு
ஓலைச்சப்பட'ட், ஓலைச்சம்பாம், ஓலைச்சம்மாதம் : ஓலை எழுதும் அதிகாரிகளுக்குக் கொடுக்கவேண்டிய வர்த்தனை
ஓலைச் சாதனம் : ஓலையில் எழுதிய பத்திரம்
ஓலை நாயகம் : அரசன் இடும் உத்தரவுகளை உரியவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கும் அரசாங்கத்துறையின் தலைமை அதிகாரி
ஓலைபெழுத்து : இராயசம்

கங்காணி : கண்காணி பார்க்க
கங்கில் : காளத்தின் ஓர் உறுப்பு
கச்சாத்து : கைச்சாத்து பார்க்க
கச்சுகோரம் : பாத்திர வகை ; கச்சோலம், கைச்சோலம் எனப்பெறுவனவும் அதுவே போலும்

கசரை : காலேயரைக்கால் பலம்

கசு : கால் பலம்

கட்டணம் : குறிப்பிட்ட வகுப்பினர் சிலர் அவ்வப்போது செலுத்தும் வரிபோன்றது

கட்டளை : கோயிலில் ஒரு விசேஷம் குறித்து ஏற்படுத்தப் பெறும் தர்மம்

கட்டாயம் : (கட்டு + ஆயம்) மொத்தமாக நிர்ணயிக்கப்பெற்ற வரி; அன்றி, நிர்ப்பந்தத்தால் இறுக்கவேண்டிய வரியைக் குறிப்பதாகவும் கொள்வர்

கட்டியாணம் : முன்னாளில் வழங்கிவந்த ஒரு நாணயம்; வராகனுக்குச் சமம் என்பர்

கட்டில் : ஆசனம்; (அரசுக்கட்டில்) சிங்காதனம்; படுக்கை

கட்டிலெய்துதல், கட்டிலேறுதல் : சிங்காதனம் ஏறுதல்; மணவினை

கட்டுக்குத்தகை : மொத்தமாக இறுக்கவேண்டிய குத்தகை; பெரும்பாலும் நீண்ட காலம் நீடிக்கும்

கட்டுமுக்கை : கோயிலுக்கு உரிய கடமைகளில் ஒன்று; அறுவடையிலே கட்டுக்கு மூன்று கை வீதம் அரிகளை கொடுப்பதுபோலும்; அரிமுக்கை எனப் பெறுவதும் இதுவே எனலாம்

கட்டுவாங்கம் : மழு; பல்லவர்களுடைய கொடியில் காணும் இலச்சினை

கடகம் : படைவீடு; அரண்வலி கொண்ட கோட்டை

கடமை : அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல்

கடமை காரியம் : அரசாங்கத்தின் நிர்வாக அலுவல்

கடமைக்கால் : அரசாங்கத்தார் நிர்ணயித்த அளவு மரக்கால்

கடமைப்பற்று : மேல்வாரத்தை உரியவர்க்குப் பணமாகச் செலுத்தும் கிராமம்

கடவ : கடமையாவதாகவும்

கடவன் : கடமைப்பட்டவன்

கடிகை : பூர்வாங்கக் கல்வி பெற்றவர்களுக்கு மேலும் கல்வி புகட்டும் உயர்தர வித்தியாஸ்தானம்

கடிகை மத்தியஸ்தன் : கடிகையிலே பயிற்சிபெற்று அங்கீகாரம் பெற்ற மத்தியஸ்தன்; பெரும்பாலும் ஊர்ச்சபைத் தலைவன்

கடிகை மாராயன் : தலைமை வாத்தியக் காரன்; முன்னாளில் அரசர் வழங்கிவந்த பட்டம்

கடிகையார் : கடிகை என்னும் நிலயத்தைச் சேர்ந்தவர்

கடிகையார்: அரசன் ஆணையைப் பறையறைந்து அறிவிப்போர்.

கடைக்காட்சி: கண்காணித்தல்

கடைக் கூட்டல்: முடிவுகட்டி வசூலித்தல் (பொலியூட்டுப் பொன் கடைக்கூட்ட வந்தார்க்கு நிசதி இரண்டு சோறு கொடுப்போமானோம்)

கடைக்கூட்டு: காரிய நிருவாகம்

கடைக்கூட்டிலக்கை: கடைக்கூட்டுவார் வசிப்பதற்கான இடம்

கடைக் கூட்டுத் தானத்தார்: கோயில் அதிகாரிகள்

கடை கூட்டு[த்*] தானத்தார்: நானுதேசி வியாபாரிகளைக் குறிப்பிடும் பெயர்களுள் ஒன்று; அவர்களிலே ஒரு பிரிவினர்போலும்

கடைத் தொழில்: பதக்கத்தில் ஒருபாகம், கடைசல் பிடிக்கப்பட்டது போலும்

கடைநீர்: கடைசியாக உள்ள நிலத்துக்குப் பாயும் தண்ணீர்

கடைப்பாட்டம்: அங்காடிப் பாட்டம் எனக் கொள்வர்; கடைசித் தரமான வரியையும் குறிக்கும்; கடைப்பூ எனவும் ஆகும்

கடைப் பூ: கடைசியான மூன்றும் போகம்

கடையடைக்காய்: விற்பனைக்குக் கொணர்ந்த பாக்கின் மீது இறுக்கும் வரி போலும்

கடையிறை: கடைசித்தரமான, அதாவது மிகவும் குறைவான வரி; (வருஷ) முடிவாகக் கொடுக்கும் வரியையும் குறிக்கும் போலும்; கடைப்பாட்டம் எனவும் கொள்வர்

கடையீடு: அரசனது முடிவான உத்தரவு; கீழ் அதிகாரிகளின் உத்தரவும் ஆகும்

கடையூறு: முடிவாக வரும் தடை; முடியாத தடை

கண் காட்டுவான்: குருடருக்கு வழிகாட்டுபவன்

கண்காணி: மேற்பார்வை; மேல் விசாரணை செய்வோன்; மேற்பார்வை செய்வதற்காக இறுக்கும் வரி

கண்காணிக் கணக்கர் முதல்: கண் காணிப்போர் செலவுக்காக இடும் முதல்

கண்காணி நாயகம்: மேற்பார்வை யிடுவோர் தலைமை உத்தியோகம்

கண்காணிமாநெல்லு: மேற்பார்வையிடுவோருக்கு நெல்லாக இறுப்பது

கண்டகம்: வேலி, 'ஏக்கரா' போன்ற நில அளவு

கண்டகசோதனை: துஷ்ட நிக்கிரகம்; குற்றம் புரிபவர்களைத் தண்டித்தல் (ஜடிலவர்மன் பராந்தக பாண்டியனுடைய ஆணைமங்கலம் செப்பேடுகளையும் கௌடில்யரது அர்த்த சாஸ்திரத்தையும் பார்க்க)

கண்டத்துடர், கண்டநாண் : கழுத்தணிவகை

கண்டன் : வீரம் மிகுந்தவன்

கண்டப்படை : கட்டடத்தின் அதிஷ்டானத்தில் அடிப்படை

கண்டம் : முகமண்டபப் பகுதி ; அதிஷ்டானத்தின் ஒரு பாகம்

கண்டழிவு : எதிர்பாராத செலவு

கண்டு : கழுத்தணியான மாலையில் பதக்கம் போன்ற ஓர் உறுப்பு

கண்டுழவு : அரசனது சொந்த நிலம்

கண்ணாலக் காணம் : கல்யாணத்துக்காகச் செலுத்தும் வரி; கல்லாணக் காணம், கல்லால காணம் எனவும் குறிக்கப் பெறும்

கண்ணாடி : முகம் பார்க்கும் கண்ணாடிக்கான வரி ; முகம் பார்வை என்றும் காண்பது; பாத்தையரிடமிருந்து வசூலிக்கப் பெற்றது போலும் ; கன்னட சாசனங்களில் பேதபினுகு (அதாவது மேனி மினுக்குபவள்) என்று காணப் பெறுவதை ஒப்புநோக்குக

கண்ணாறு : பாசன வாய்க்கால்

கண்ணிட்டுக்காணம் : கண்காணிப்போருக்குக் கொடுக்க வேண்டிய தொகைபோலும் (கரிசலாங்கண்ணி என்னும் மருந்துச்செடியைப் பயிரிடுவதற்காகச் செலுத்தும் வரியெனவும் இதைக் கொள்வர்)

கண்மலர் : விக்கிரகங்களுக்கு அணியும் விழிமலர் போன்ற ஆபரணம்

கண்மாளர் : கம்மாளர்

கணக்கக்காணி : கிராமக் கணக்கர்களுக்கு விடும் மானிய நிலம்

கணக்கப்பேறு : கிராமக் கணக்கருக்கு நெல்லாக இறுப்பது

கணகன் : கணக்குப் பிள்ளை

கணப்பெருமக்கள் : ஊர்க்காரிய நிர்வாகிகள்

கணபோகம் : அவர் அவர் தனித் தனிப் பகுதிகளை அனுபவிக்காமல் முழுவதையும் கூட்டாக அனுபவித்து மொத்தத்தில் அவர் அவருக்கு உரிய பங்கைப் பெறுதல்.

கணாசாரம் : பிச்சை ஏற்போர் இறுக்கும் வரி

கணிமுற்றூட்டு : கணத்தார் அனுவிப்பதாற்காக ஸர்வமானியமாக விடப்பெற்ற கிராமம் ; கணபோகத்தில் உள்ள முற்றூட்டுக்கிராமம் ; (ஜோஸ்யர்களுக்கு விடும் மானியமாகக் கருதுவர் சிலர்)

கத்திக்காணம் : ஆயுத வரி; ஆயுதம் தரிப்பதற்கா அல்லது தயாரிப்பதற்கா என்பது விளங்கவில்லை

கதலிகை : ஒட்டியாணம் போன்ற ஆபரணத்தின் ஓர் உறுப்பு

கதிர்க்காணம் : கதிராகக் கொடுக்கும் வரி

கந்மி (கருமி) : அதிகாரி; பணியாட்களுக்கு மேற்பட்ட பதவி கொண்டவர்

கப்பம் : தொழிலாளர்கள் சிலர் அவ்வக்காலங்களில் செலுத்துவது

கம்பி : காதணிவகை

கம்மாணர் : கம்மாளர்

கர்ணம் : நாட்டு நிர்வாகத்திலே உள்ள குற்றங்குறைகளைக் காணும் பெரிய அதிகாரி (விஜயநகர ஆட்சிக் காலத்தில் வழக்கில் இருந்தது)

கர்த்தாக்கள் : மதுரை நாயக்க மன்னர்களைக் குறிப்பிட்ட பட்டப் பெயர்

கர்ப்பூரவிலை : கோவில் நிலங்களைப் பயிரிட்டு அனுபவிப்பதற்காக அவற்றின் வரியையும் சேர்த்து மொத்தமாகக் கொடுக்கும் பணம்

கரகிராமம் : அரசாங்கத்துக்கு வரி செலுத்தும் (ரயத்துவாரி) தனிக் கிராமம்

கரடிகை : ஓர் ஆபரண உறுப்பு

கரடு : ஒருவகை முத்து

கரண்டிகை : மகுடத்தின் ஒருவகை; மகுடத்தின் ஒருபாகம்

கரண்டிகைச்செப்பு : சுண்ணாம்புச் செப்பு

கரணம் : பத்திரம்; சீட்டு; கணக்கன்

கரணம் : வழக்குகளை விசாரிக்கும் நியாய சபைகளுள் ஒருவகை; அதி கரணம் என்பதற்குத் தாழ்ந்தது என்பர்

கரணத்தார் : கரணம் என்னும் நியாய சபையின் உறுப்பினர்

கரணிக்கசோடி : கணக்கர் வரி

கரக்ஷேத்திரம் : வீடு கட்டக் கூடிய மனை

கரி : பயிர் தீய்ந்து போனது

கரிவி (கருவி) : நாவிதர் கத்தி

கரு : மண்மேடு

கருக்கு : தங்கம் வெள்ளி முதலிய பாத்திரங்களில் பொறித்த சித்திரம்

கருஞ்செய் : புன்செய் நிலத்திலே முன்னால் பயிரிடாத நிலம்; கழனிப் பன்செயினின்றும் வேறான காட்டுப் புன்செய்

கருஞ்செய் : நன்செய் எனவும் கொள்வர்

கருவி பணம் : ஆயுதங்களின் மீது வரி; நாவிதர் செலுத்த வேண்டி பது போலும்

கருவூலவரி : பொக்கிஷத்தின் காவலுக்கும் விலையுயர்ந்த பொருளை அதிலே வைத்துப் பாதுகாத்தற்கும் இறுக்கும் வரி

கரை : பங்கு, விகிதாசாரம்

கரைக்கூறு செய்வார் : கிராமங்களிலே அவர் அவர் அனுபவிக்க வேண்டிய நிலங்களைப் பிரித்துக் கொடுக்கும் பொறுப்பு வாய்ந்தவர்

கரைநிலம் : அவ்வப்போது ஊராரிடம் மாற்றி மாற்றி அனுபோகத்துக்கு கூறுபோட்டு ஒப்படைக்கப்படும் நிலம்

கரையீடு : அடைமானம்

கல்லறை : பொக்கிஷங்களை வைப்பதற்குப் பூமியின்கீழ்க் கட்டப் பெற்றுள்ள இரகசிய அறை

கல்லாணக் காணம், கல்லாலகாணம் : கண்ணலக் காணம் பார்க்க

கல்யாணத் திருமேனியாதல் : அரோகதிடகாத்திர ராதல்

கல்லித்திருத்துதல் : மேடான நிலத்தை வெட்டித்திருத்துதல்

கல்லூரி : கோயிலில் சுற்றுத் தாழ்வாரம்; திருச்சுற்றுலை

கலசப்பானை : தூப கலசம் : தூபக் கால்

கலசமாட்டுதல் : கலசத்தால் திருமஞ்சனம் செய்வித்தல்; கும்பாபிஷேகம்

கலவை, கலாபம் : கலகம்

கலம் : சாப்பிடும் பாத்திரம்

கலம் : பத்திரம்; ஆதாரவுச் சீட்டு

கலம், கலன் : வில்லங்கம்

கலனை : தொழிலாளர்கள்; அவர்களுடைய சங்கம்

கலிங்கவாரியம் : கலிங்கு, அணை போன்றவற்றைக் கவனிப்பதற்காகக் கிராமச் சபையாரால் அமைக்கப்பட்ட குழு

கவர் : ஆற்றுக் காலில் பிரியும் கிளை

கழஞ்சு : முன்னாளில் வழங்கிய பொன்நாணயம்; அதன் எடையையும் குறிக்கும்

கழனிக்குளம் : நன்செய் நடுவில் உள்ள குளம்

கழனிப் புன்செய் : காட்டுப் புன்செயினின்றும் வேறான புன்செய் நிலம்

கழனிவாரியம், கழனிவாரியப் பெருமக்கள் : விவசாயத்தைக் கவனிக்கும் ஊர்ச் சபையார்

கழைந்து : கழஞ்சு என்பதன் வேறு வடிவம்

களர்ப்பாழ் : உப்புப் படிந்த பாழ் நிலம்

களரி : விசாரணை ஸ்தலம்; சபை; கச்சேரி

களாவம் : இடையணி; ஒட்டியாணம் போன்றது

கற்கவி : கதவுநிலையின் மேலே இடப்பட்டிருக்கும் பாவுகல்

கற்காரம் : கருங்கல்லால் ஆன கட்டடம்

கற்கிடை : கல்லால் ஆன வட்டம்; செங்கல் சூளை

கற்படுத்தல் : கல்லால் தளம் போடுதல்

கற்பதித்தான் : சிலாசாசனம் செய்தவன்

கரணதண்டம்: கரணம் என்னும் நியாய சபையால் விதிக்கப் பெற்று அதற்குச் செலுத்தவேண்டிய அபராதத் தொகை

கற்பற்று: மாணிக்கத்தின் குற்றம்

கற்பித்தல்: பிரதிஷ்டை செய்தல்

கற்றளி: கற் கோயில்

கன்று மேய் பாழ்: கிராமத்தில் கால்நடை மேய்வதற்கான நிலம்

கன்னக்காணன்: கன்னன்

கன்ன புஷ்பம்: மலர் போன்றதும் காதில் அணிவதுமான ஆபரணம்

கன்னடு, கல்நாடு: இறந்தவர் ஞாபகார்த்தமாகக் கல் எழுப்புதல்

கன்னரிறை: கன்னாத் தொழில் செய்வோர் செலுத்தும் வரி

காகபிந்து: கரும்புள்ளி

காகவிருந்தம்: வைரத்தின் வகை

காசாயக்குடி: ஊர்ப்பொதுவேலை செய்வதென்னும் நிபந்தனையின் மேல் கிராம மனைக்கட்டில் குடியிருக்கும் குடிமக்கள்

காசாயம்: காசாக இறுக்கும் வரிவகைகளின் பொதுப்பெயர்; காசாய வர்க்கம் என்றும், காசு வர்க்கம் என்றும் குறிக்கப்பெறும்

காசுகடமை: ரொக்கமாக இறுக்கும் வரி

காசுகல்: தங்கம் முதலியவற்றை நிறுக்கும் எடை

காசுகொள்ளா இறையிலி: ஒருவகை வரியும். இல்லாமல் அளிக்கப் பெற்ற நிலம்; வரிநீக்கிய நிலத்துக்குப் பின்னல் இறுக்கவேண்டிய வரிக்காக மொத்தமாகச்சேர்த்து முதல் கொள்ளாத நிலத்தையும் குறிக்கும்

காசு கொள்ளா ஊர்க்கீழ் இறையிலி: எந்த வரியும் இல்லாமல் அளிக்கப் பெற்ற நிலம்; அந்த வரியை அரசாங்கம் நீக்காமல் கிராமசபையே இழித்து அந்த வரிக்குறையைச் சபையாரே ஏற்பதாகும்

காட்சி: காணிக்கை; கையுறை

காட்சி எருதுக் காசு: நல்லெருது பார்க்க

காட்டப் பெறுதல்: ஆதாரமாக எடுத்துக்காட்டுவது; பாத்தியதை கொண்டாடுதல்

காட்டாள்காசு: முன்னாளில் வழங்கிய வரிவகை; காடுகாவல் என்று வழங்கியது இதுவேபோலும்

காடுகாவல்: காடுகளைப் பராமரிப்பதற்காக இறுக்கும் வரி [காடு என்னும் சொல் இடுகாட்டையும் குறிக்கும்]

காடுகோள்: விளைநிலம் காடுமண்டிப்போதல்

காடுதரிசு: செடிகள் முளைத்த தரிசு நிலம்

காணம் : முன்னாளில் வழங்கிய நிறை; ஒரு நாணயம்; பாகம் அல்லது பங்கு

காணி : பரம்பரை உரிமை; அநுபவிக்கும் உரிமை; காணியாட்சி பார்க்க

காணி : ஒரு நிறை

காணிக்கடன் : நிலவரி; காணிக்கூலி என்பதும் இதுவே போலும்

காணிக்கை : அரசனுக்கும் சில அதிகாரிகளுக்கும் செலுத்தவேண்டிய கையுறை

காணிப்பற்று : ஒருவருக்கு உரிமை உள்ள கிராமம் அல்லது நிலம்

காணிப்பிடிபாடு : நிலச்சாகுபடிக்கான உரிமைப் பத்திரம்

காணிமாறுதல் : உரிமை நிலத்தை இழத்தல்

காணியாண்மை, காணியாட்சி : பரம்பரையாக அநுபவிக்கும் உரிமை

காணிவிலை : உரிமையை விற்றுக் கொடுத்தல்

காணிவெட்டி : முன்னாளில் வழங்கி வந்த வரிவகைகளுள் ஒன்று; வெட்டி என்பதன் ஒரு பிரிவு போலும்; விளை நிலங்களிலே குழி வெட்டுவது போன்றதாக இருக்கலாம்

காந்தருவி : பாடுபவள்

காமக்காட்டம் : சிவன் கோயிலில் பார்வதிக்கெனத் தனியாக அமைந்துள்ள அம்மன் சந்நிதி

காமம் : கிராமம்; காமக்காணி, காமக்கிழான் போன்று சேர்ந்துவருவதிலே காண்க

கார் : ஐப்பசி-கார்த்திகையில் அறுவடையாகும் நெல்; மழைக்காலத்தில் பயிர் செய்யும் நெல்; அதன் அறுவடைக்காலம்

கார்த்திகைக்காசு, கார்த்திகைக்காணிக்கை, கார்த்திகைப்பச்சை, கார்த்திகையரிசி : கார்த்திகையில் அறுவடைக் காலத்தில் அளிப்பது; ஆடிப்பச்சை பார்க்க

கார்மறு நிலம் : இருபோக சாகுபடி உள்ள நிலம்

காரணவன் : கணக்கன்; காரணிகன், கரணத்தான் எனவும் பெறுவன்

காரளத்தல் : நெல் அளத்தல்

காராண்கிழமை, காராண்மை : பயிரிடும் உரிமை; அதற்கான வரி

காரணிக்கஜோடி : கணக்கர் செலுத்தும் குறைந்த வரி

காரிய கர்த்தா, காரியத்துக்குக் கடவர் : ஒருவருக்காகக் காரியத்தை நிர்வகிப்போர்; 'ஏஜண்ட்'

காரியவாராய்ச்சி, காரிய வாராய்ச்சிப்பேறு : தணிக்கையாளர்க்கு இறுக்கும் வரி; ஆராய்ச்சி பார்க்க

கால்படை : *சுவரின் அடிப்பகுதி*

கால்வடம் : *கால்அணி வகை*

காலத்தேவை : *முன்னாளில் வழங்கிவந்த வரிவகைகளுள் ஒன்று; என்னவென்பது விளங்கவில்லை*

காலப் பொல்லாங்கு : கெட்டகாலம்; காலதோஷம் எனவும் பெறும்

கால் அளவு கூலி, காலளவுப்பாட்டம் : *நிறுத்தல் அளவுக்கு விதித்து வந்த வரி*

கால்அளவு கோல் கூலி : *நில அளவுக்கு விதித்துவந்த வரி*

காலுக்கழுத்து : *கணைக்கால்*

காவணம் : சோலை ; *நந்தவனம்*

காவல் கட்டணம் : *தலையாரி வரி*

காவிதி : *முன்னாளில் அரசர் அளித்துவந்த ஒரு பட்டம்; கணக்கர்*

காவிதிமை : *கணக்கு வேலை*

காளி கணத்தார் : *காளிகோயில் நிர்வாகத்தைக் கவனிக்கும் சபையார்*

காஹளம், காஹளி : எக்காளம் போன்ற வாத்தியம்

கிடாரம் : கொப்பரை

கிடை : வேதம் ஓதும் குழாம்; வேத பாடசாலை

கிடைப்புறம் : வேதம் ஓதுவிப்பதற்காக விட்டப்பட்ட நிலம் அல்லது கிராமம்

கிம்புரிமுகம் : ஆபரண முகப்பின் ஓர் உறுப்பு

கிரமவித்தன் : வேதத்தின் கிரமபாடத்தில் வல்ல பிராமணன்

கிராம கண்டகர் : கிராமத்தின் நலனுக்கு விரோதிகள் ; கிராமத் துரோகிகள் எனவும் பெறுவர்

கிருதுலம் : சில்லறையாக விற்பனை செய்யும் பொருள்களின் மீது இருக்கும் வரி அல்லது சுங்கம்; கிருகூல விசேஷம் எனவும் பெறும்; . கூலம் என்பதையும் பார்க்க

கிளிக்கத்தி : கத்திவகை

கீழ்க்கலனை : கிராமத்தொழிலாளி

கீழ்க்குமிழி : ஒரு வாய்க்காலின் நீர் அதன் குறுக்கே செல்லும் மற்றொரு வாய்க்காலின் கீழாகச் செல்லும்படி அமைந்த கட்டடவேலை

கீழ்ப்பாதி : குடிவாரம்

கீழிறை : சிறு வரிகள் ; கடைசித் தரங்களில் இருக்கும் வரிகளும் ஆகும்

கீழிறைப்பாட்டம் : மீன்பாட்டம் போன்ற சிறு வரிகள்

கீழீடு : கீழ்க்குத்தகை; சார்ந்து நிற்றல்; மற்றொன்றுக்குக் கீழ்ப் பட்டது

கீற்றுவரி : கீற்று வேய்ந்த குடிசைகளுக்கான வரி

குகை : துறவிகள் வாழும் மடம்

குச்சி : குச்சில், தர்ப்பை போலும் (குடமும் குச்சியும் கொண்டு கோயில் புகுவான்)

குசச்காணம் : குயவர் தாங்கள் செய்யும் பானைகளுக்குக் கொடுக்க வேண்டிய தொழில் வரி; திரிகைஆயம் பார்க்க

குடதேவர் : அகஸ்தியர்

குடநாழி : ஒரு குடத்துக்கு ஒரு நாழி விதம் இறுக்கும் வரி

குடப்படை : உட்கோயிலின் அடி மட்டத்தில் உள்ள கட்டடப்பகுதி

குடமுழா : குடம் போன்ற வடிவுடையதாக உள்ள பெரிய முழவு வாத்தியம்

குடவர் : விஷ்ணு கோயிலில் பணி புரிவோருள் ஒரு பிரிவினர்; கிருஷ் ணனை வழிபடுவோர் போலும்; மாடு மேய்ப்பவராகவும் இருத்தல் கூடும்; கோடவர் எனவும் பெறுவர்

குடவறை : நிலவறை; கோபுரத்தில் உள்ள சிற்றறை

குடவிளக்கு : பூசை வேளையில் குடம் போன்ற விளக்கு எடுத்து நாட்டியம் ஆடிக்கொண்டே உருத்திர கணிகையர் காட்டுவது

குடவோலை : குடத்தில் இட்ட ஓலைச்சீட்டு; அவ்விதம் இட்டுச் சபையா ரைத் தேர்ந்தெடுத்தல்

குடிக்காசு : குடிமக்கள் கொடுக்கும் வரி; குடிக்காணம்; குடிப்பணம் என்பனவும் இதுவே போலும்

குடிஞைக்கல் : நிர்ணயமான எடைக்கல்; குடிநற்கல் எனவும்படும்

குடிநீங்கா இறையிலி : ஏற்கெனவே உள்ள குடிகளையும் அவர் களுடைய உரிமையையும் நீக்காமல், மேல் வாரத்தை மட்டும் அநுப விப்பதாக வரி நீக்கிக் கொடுக்கப்பட்ட கிராமம் அல்லது நிலம்

குடிநீங்காத் திருவிடையாட்டம் : ஏற்கெனவே உள்ள குடிகளை நீக்கா மல் விஷ்ணு கோயிலுக்கு அளிக்கப்பெற்ற கிராமம்

குடிநீங்காத் தேவதானம் : ஏற்கெனவே உள்ள குடிகளை நீக்காமல் கோயிலுக்கு அளிக்கப்பெற்ற கிராமம்

குடிநீங்கி(ய)தேவதானம் : பழங்குடிகளை நீக்கிக் கோயிலுக்கு அளித்த நிலம் அல்லது கிராமம்; இதனால் கோயிலே மேல்வாரம் கீழ்வாரம் ஆகிய இரண்டையும் அநுபவிக்கமுடியும்

குடிமை: நிலவரி நீங்கலாக, அரசாங்கத்துக்கு இறுக்கும் மற்ற வரிகளைப் பொதுவாகக் குறிக்கும் சொல் [நாட்டின் குடியாக வாழ்வதற்கு இறுக்கும் வரிப்பணம்]

குடிமைப்பாடு: ஊழியம்; ஊர்ப்பொதுவேலை

குடியிருக்கை: கிராமத்தில் குடிகள் வாழும் இடம்

குடியிலார்: குடிகள்

குடிலை: குடி நற்கல்; நிர்ணயிக்கப்பெற்ற நிறையையுடைய எடைக்கல்

குடும்பு: ஊரின் பகுதி; அதனால் குடும்பு வாரியம்: ஊரிலே அந்த அந்தப் பகுதிக்கான சபைக்குழாம்

குண்டு: உருண்டையான பொன் மணி

குண்டு: குதிரை

குண்டிகைக்கல்: சமணர் கோயில்களுக்குச் சொந்தமான பள்ளிச்சந்த நிலங்களின் எல்லையைக் குறிக்கக் கமண்டலத்தின் உருப் பொறித்து நாட்டும் கல்

குணவியது: மேன்மையானது

குணவியன்: மாணிக்க வகைகளுள் ஒன்று

குத்தவரிசி: குற்றித்தீட்டிய அரிசி

குத்தக்கால்: தடை

குதம்பை: காதணி வகை

குதிரைச் சேவகன்: குதிரை வீரன்

குதிரைப்பந்தி: குதிரை கட்டும் இடம்; அதற்கான வரி; குதிரை வரி, குதிரைமாற்று, குதிரைவிலாடம் எனவும் பெறும்

குதிரைமாற்றம்: முன்னாளில் வழங்கிவந்த ஒரு நாணயம்; குதிரை உருவம் பொறிக்கப்பட்டது போலும்

குப்பி வயிரம்: வைர வகை

கும்ரகச்சாணம்: முன்னாளில் வழங்கி வந்த வரிவகை; முருகக் கடவுளின் கோயிலுக்காக இறுக்கவேண்டிய (ஒரு கட்டியாணம்) பொன் வரி எனச் சொல்லலாம்

குமிழி: நீர் ஊற்று; மதகு; ஒரு வாய்க்காலின் நீர் அதன் குறுக்கே செல்லும் மற்றொரு காலின் கீழாகச் செல்லும்படி அமைந்த கட்டிடவேலை

குமாரவர்க்கம்: அரசாளும் ராஜகுடும்பத்துக் குமாரர்களாகத் தங்களைக் கருதும் சிற்றரசர்கள்

குமுதப்படை: கர்ப்பகிருக மதிலின் அடிப்பாகம்

குரத்திகள்: சமண மதத்திலே ஆசாரிய பதவி வகிக்கும் பெண்

குரவடிகள் : சமண மதத்தின் ஆசாரியர்

குரப்பு வெட்டி : பழையநாள் வரிவகை; வெட்டி என்னும் இனத்தைச் சேர்ந்தது; பாசனக்கால்களை அணைத்து நீர் திருப்பும் வெட்டிவேலை போலும்

குரால் பசு, குராற் பசு : கபிலை நிறப் பசு

குலை : எழுப்பிய கரை; வரம்பு

குலைவெட்டி : நீர்க்கால்களின் கரைகளை வெட்டிச் சீர்செய்வது

குழிவரியேற்றுதல் : நிலத்துக்கு வரி விதித்தல்

குழிவு : மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று

குளக்கீழ் : அந்தக் குளத்தின் பாய்ச்சலில் உள்ள பூமி

குளப்பிரமாணம் : குளம், அதனை அநுபவிக்கும் உரிமை ஆகியவற்றின் விற்பனை

குளவடை : ஏரி குளங்களை அனுபவிக்கும் உரிமை; அவற்றிலிருந்து கிடைக்கும் வருவாய்களையும் குறிக்கும்

குளிக்கும் இடம் : அபிஷேக மண்டபம் பார்க்க

குளிகை : முன்னாளில் வழங்கி வந்த நாணயம்; கோளகை எனவும் பெறும்; உருவத்தைக் கொண்டு பெயரிடப்பட்டதுபோலும்

குளிர்ந்த நீர் : இரத்தினங்களிலுள்ள நீரோட்டம்

குற்றத்தண்டம் : செய்த குற்றத்துக்குரிய தண்டனை; அதற்காகச் செலுத்தும் பணம்

குற்றுநெல் : நெல் குற்றுவதற்கு உரிய கடமை

குற்றேற்றம் : சிறு ஏற்றம்

குறங்கு : சிறு வாய்க்கால்

குறி : கிராமச்சபை

குறு கூலி : நெல் குத்துவதற்கான கூலி

குறுணிப்பாடு : குறுணி நெல் விதைப்பாடுள்ள நிலம்

குறுமடல் : விபூதி வைக்கும் சிறிய மடல்

குறைவறுப்பு : அரண்மனைக்கு உபசாரமாக அனுப்பும் பண்டச்சுமை

குன்றி : குன்றுமணி, பொன் நிறுக்கும் எடை

குனிப்பம் : நாட்டிய வகை; சந்திக்குனிப்பம் பார்க்க

கூத்தம்பலம் : அரண்மனை அல்லது கோயிலில் உள்ள நாடக அரங்கம்

கூலம் : தானிய வியாபாரம்; தானியங்களுக்கு விதிக்கும் வரி

கூலிச்சேவகன் : கூலிப்படையாளன்

கூற்றரிசி : குற்றுநெல் பார்க்க; கூற்று நெல்லு எனவும் பெறும்

கூற்றன்வாய் : தலைமதகு
கூற்றுநெல்லு : கூற்றரிசி பார்க்க
கூறடைத்தல் : பகுதி பகுதியாகப் பிரித்து ஒப்படைத்தல்
கூறுசெய்வான் : காரியங்களை வகைசெய்து நிர்வகிப்பவன்
கூறுதல் : விலை கூறுதல்; ஒருவன் தன் பொருளுக்கு நிச்சயித்த விலையைத் தெரிவிப்பதை முற்கூறுதல் என்றும், அதை வாங்குபவன் ஏற்றுக்கொள்வதைப் பிற்கூறுதல் என்றும் கொள்வர்
கூன் : பெரும்பாத்திரம்; அதில் சமைத்த நிவேதனப் பொருள்

கெடுபாதை : சீர்கேடு அடைந்த பாதைகளைச் செப்பனிட்டு நல்ல நிலைமையில் வைத்திருக்கவேண்டிய கடமை

கேட்போர் : பாடம் கேட்போர்; பாடம் சொல்லுவோர்; சாத்திரர் பார்க்க
கேள்வி : அரசன் வாய்மொழியாக இடும் உத்தரவுகளைக்கேட்டு உரியவர்களுக்கு அனுப்பும் அதிகாரி; நிர்வாக அதிகாரி
கேள்விமுதலி : அரசன் உத்தரவைப்பெறும் பொறுப்பு வாய்ந்த அரண்மனை அதிகாரி
கேள்விவரி : அரசன் உத்தரவுகளை எழுதும் வரிப் புத்தகம்

கைக் கணக்குமுதல் : விவரம் விளங்க வில்லை
கைக்கழுத்து : முன் கை; மணிக்கட்டு
கைக்காறை : ஒரு வகைக் கையணி
கைக்கொள்ளுதல் : ஏற்று நிர்வாகித்தல்
கைக்கூலி : லஞ்சம்
கைக்கோளமுதலி : கைக்கோளரின் தலைவர்
கைக்கோளர் : தோள் வலி மிகுந்த காலாட்படையினர்; கோயில் ஊழியர்களுள் ஒரு வகையினர்; நெய்வோர் [அடவி என்ற சொல்லும் போர்ப் படையினரையும் நெய்வோரையும் குறிக்கும். போர் வீரர்களுக்கும் நெசவாளிக்கும் என்ன தொடர்பு என்பது விளங்கவில்லை. கைக்கோளர் என்ற சொல் கையால் உழைப்பவர் என்று பொருள்படும்]
கைங்கரியபரர் : கோயிலில் பணி விடை செய்வோர்; உபயகாரர்
கைச்சாத்து : கையெழுத்திட்ட ரசீது
கைத்தடி : ஒப்பம் இடுவதற்குக் கையெழுத்துப் போடாமல் இடும் கும்; தற்குறி
கைத்தீட்டு : கையெழுத்திட்ட உடன்படிக்கை; சிறுகுறிப்பு

கைப்போட்டு : கையில் அணியும் ஓர் ஆபரணம்
கைபிடி : கையிற்பெற்றுக்கொண்ட பொருள்
கைம்மாட்டாங்கு : தற்குறி; கைத்தடி பார்க்க
கையாளித்தல் : ஒப்படைத்தல்
கையாறு : கண்ணி வாய்க்கால்
கையீடு : பணம் செலுத்திய ரசீது
கையுருவிச்சுவர் : கைப்பிடிச்சுவர்
கையுறை : பெரியோர்களைக் காணச் செல்லும்போது அவர்களுக்கு அளிக்கும் காணிக்கை
கையெழுத்து : தீர்மானித்து எழுதிக் கொடுத்த பத்திரம்
கையெழுத்தோலை : எழுதிக்கொடுத்த பத்திரம் ; கடன் சீட்டு
கையேற்பு : பிச்சைக்காரர் வரி ; தெலுங்குச் சாசனங்களிலே காஞ்சாரம் என்று காண்பது ; முட்டி என்பதையும் பார்க்க
கைவட்டகை : பாத்திரவகை
கைவளர : பரவ
கைவாசி : சந்தை விற்பனைக்கு வந்த நெல் போன்ற பண்டங்களில் ஒரு கையெனக் கொள்ளும் உரிமை ; அள்ளு என்பதைப் பார்க்க
கைவிலை : அப்போதை விலை
கைவினைக்குடி : கைத்தொழில் செய்து வாழ்வோர் [கைஜீதம் என்னும் சொல் தெலுங்கு நாட்டுச் சாசனங்களிலே கூலிப்படையைக் குறிக்கும்]

கொக்குவாய் : ஆபரணத்திற் செருகும் பூட்டு
கொட்டகாரம் : நெல்களஞ்சியம் ; கொட்டாரம்
கொட்டி மத்தளம் : பெரிய மத்தளம்
கொட்டைக்கூலி : கொட்டையை ஆமணக்கு விதையெனக் கொள்ளலாம் ; ஆயினும் இது கோட்டைக்கூலியே போலும்
கொடவர் : கோயிற் கொத்துக்களுள் ஒரு பகுதியார் ; குடவர் என வும் காணப்பெறும்
கொடி : அரைஞாண்
கொடிக்கடமை : கொடிவேலி என்றும் சித்திர மூலம் என்றும் வழங்கப் பெறும் மருந்துச் சரக்கைப் பயிரிடுவதற்கான வரியாகக் கொள்வர் ; எனினும் இது கோடிக்கடமையே யாகும் போலும் ; செங்கொடிக்காணம் என்பதையும் பார்க்க
கொடுக்கன் : மகன் (கொடுகு என்னும் தெலுங்குச் சொல் பார்க்க)
கொத்து : பிரிவு ; ஊழியர் வகை
கொதி : பிரசாதம் ; கோயிலில் நிவேதனத்துக்கான சோறு

கோழு : ஏர்க்கொழுவின் மீது இறுக்கும் வரி

கோழுந்து : மருக்கொழுந்து

கோழுவாரம் : பயிரிடுவோனுக்கு உரிய வாரம்

கோள் : சிறு நிறையளவு

கோள்கை : பாத்திரவகை; கோள்கலம் என்பதே போலும்

கோள்கை : விக்கிரகங்களுக்கு இடும் கவசம்

கோள்முறைப்பாடு : காணிக்கைபோல் கிரமமாகக் கொள்ளும் வரி

கோள்வரி : நெல்லாய வகை; வசூல் செய்வதற்கான செலவைச் சரிக் கட்டுவதற்குப்போலும்

கோற்றிலக்கை : கொற்றும் இலக்கையும்; அதாவது சோறும் தங்கும் இடமும்

கோற்று : உணவு

கோட்டகம் : பரந்து ஆழமான நீர்நிலை

கோட்டைக்கூலி : கோட்டையின் பராமரிப்புக்காக வசூலிக்கப்பெறும் வரி; கோட்டை மகமை எனவும் பெறும்

கோடம் : சிகரமாகச் செய்யப்பெற்ற கிரீடத்தின் பாகம்

கோப்பதவாரம் : அரசர்க்கு உரிய இறை

கோமளம் : மாணிக்க வகை

கோமுகம் : பசுவின் முகம்போல் செய்யப்பெற்ற நீர்விழும் வாய்

கோமுறை : அரசிறை

கோயில் கேள்வி : கோயில் காரியங்களை நிர்வகிப்பவன்

கோயில் வாசி : அரண்மனைக்கு உரிய சில் இறை

கோயில் வாரியம் : கோயில் காரியத்தை நிர்வகிப்பதற்காக ஊர்ச்சபை யினர் அமைக்கும் குழு

கோயிற்கொத்து : அரண்மனை அல்லது கோயில் பணியாட்கள்

கோல் கூலி : அளவு கோலுக்கான வரி

கோல் நிறை கூலி : கோலால் நிறுத்து விற்கும் பொருள்கள் மீது வரி

கோவணவர் : கோயிலில், முக்கியமாக விஷ்ணு கோயிலில், ஊழியம் புரிந்தவர்களுள் ஒருவகையினர்; துறவிகள் போலும்

கோவிக்கல் : அரண்மனை

கோவை : முன்னாளில் வழங்கிய பொன் நாணயம்

கோளகை : குளிகை பார்க்க

கோனோலை : அரசன் உத்தரவு

சக்கத்து : முத்துவகை

சக்கரக்கல் : ஆழிக்கல் பார்க்க

சக்கரக் குளிகை : முன்னாளில் வழங்கிவந்த ஒரு நாணயம்; சக்கரப் பணம் என்பதும் இதுவே போலும்

சக்கரகாணிக்கை : குயவர் இறுக்கும் வரி; திரிகை ஆயம் எனவும் பெறும்

சக்கரம் : ஆஞ்ஞா சக்கரம்; அரசன் ஆணை; அந்த ஆணையை நிறை வேற்றும் அதிகாரி (சோழன சக்கரம்)

சக்கரவாளம் : உலகத்தைச் சூழ்ந்திருப்பதாகக் கருதப்படும் மலை

சகரையாண்டு : சகாப்தம்

சங்கரப்பாடியார் : செக்கார்; எண்ணெய் வியாபாரம் செய்வார்

சஞ்சீவராயர் : அனுமார்

சட்டப்பெருமக்கள் : சட்டர்களுக்குள்ளே நிறுவப்பெற்ற சபையின் உறுப்பினர்கள்

சட்டம் : மாணிக்க வகை

சட்டர் : பிரம்மசாரிகள் : கோயில், அதன் அங்கமான சாலை ஆகிய வற்றை நிர்வகிப்போர்; சாத்திரர் என்பதையும் பார்க்க

சட்டிச்சோறு : கோயில் வேலைக்காரர்களுக்குக் கொடுக்கும் உரிமைப் பிரசாதம்

சடங்கவி : வேதத்துக்கு உரிய ஆறு அங்கங்களையும் அறிந்தவன்

சண்டப்பிரசண்டர் : விஷ்ணு கோயிலில் உள்ள துவாரபாலகர் இருவர்

சண்டாளப்பேறு : பழைய நாளில் வழங்கி வந்த கடமை வகை; சண்டாளர்களிடமிருந்தோ அவர்களுக்காகவோ வசூலிக்கப்பட்டது போலும்

சண்டேசுரப் பெருவிலை : சிவன் கோயில் நிலங்களை விற்கும்போது கொடுக்கப்படும் நிலவிலை; சிவனுடைய ஆதிதாசர் ஆன சண்டே சுரப்பெருமான் பெயரால் விற்கப்படுவது

சண்டை : செண்டை என்னும் வாத்திய வகை

சண்பங்காறை : தாலியின் உருவகை

சத்திமுகம் : அரசனது ஆணைப்பத்திரம்

சத்தியஞான தரிசனிகள் : சைவசமயத்தின் ஒரு பிரிவைச் சார்ந்தவர்; மெய்கண்டார் சந்தானத்தாரே போலும்

சத்திமுற்றம் : ஊரிலே சக்தியாகிய துர்க்கை போன்ற பெண் தெய் வத்துக்குத் தனியாக எழுப்பப்பெற்ற கோயில்

சதாசேர்வை, சதாசேவை : நித்திய ஊழியம்

சதிரம்: சதுரம் என்பதன் வேறு வடிவம்

சதிரவாசகன்: கெட்டிக்காரத்தனமாக, சதுரமாகப் பேசுபவன்

சதுப்பேதிமங்கலம், சருப்பேதிமங்கலம், சதுர்வேதிமங்கலம்: (நாலு) வேதம் தெரிந்த பிராமணர்களின் குடியிருப்பான கிராமம்; பெரும்பாலும் இறையிலியாக வழங்கப்பட்டிருக்கும்

சதுர்வேதி பட்டத் தானப் பெருமக்கள்: பிராமணர் குடியிருப்புக் கிராமங்களில் வேதம் வல்லார்களைக் கொண்ட சபை

சதுராலே: ஊரிலே சபை கூடும் இடம்; நாலுகால் மண்டபம்

சந்தானம்: சந்ததி; சிஷ்ய பரம்பரை

சந்ததிப்பிரவேசம்: தலைமுறை வழியாக

சந்தானச்சாபம்: சந்ததி இல்லாமல் போகும்படி இடும் சாபம்

சந்தானிக சைவாசாரியர்: (சந்தான குரவர்) சிஷ்ய மரபில் வந்த சைவாசாரியர்

சந்தி: காலையிலும் மாலையிலும் கோயிற்கால பூசை; குறிப்பிட்ட சிலர் வைத்த நிவந்தங்களுக்காக அவர்கள் பேரில் நடக்கும் பூசைக்கட்டளை

சந்திக் குனிப்பம்: கோயிலில் பூசை நேரத்தில் தேவரடியார் ஆடும் நடன வகை; குனிப்பம், சந்திக்கூத்து ஆகியவை பார்க்க

சந்திக்கூத்து: கோயிலில் சுவாமி முன்பாகத் தேவடியார் ஆடும் கூத்து; சாந்திக்கூத்து, சந்திக்குனிப்பம் என்பனவும் இதுவே போலும்

சந்தியா தீபம்: பகலும் இரவும் கூடும் வேளையில் கோயிலிலே ஏற்றப் பெறும் விளக்கு; பெரும்பாலும் மாலையிலே தான் ஏற்றப்படுவது; காலையில் போடுவதும் உண்டு

சந்திராதித்தவல், சந்திராதித்தவற், சந்திராதித்தவத்: சந்திர சூரியர் உள்ளவரையில்

சந்திவிக்கிரகப் பேறு: கிராம மத்தியஸ்தனுக்குக் கொடுக்கும் கட்டணம்; பத்திரம் எழுதுவோர்களுக்குக் கொடுக்கப்பெறுவதாகவும் கொள்வது உண்டு

சந்திவிக்கிரகி: சண்டை, சமாதானம் ஆகியவற்றைக் கவனிக்கும் அரசாங்க அதிகாரி; மந்திரி; பத்திரம் எழுதுவோரையும் குறிக்கும்

சந்திவிளக்கு: சந்தியா தீபம் பார்க்க

சந்தை முதல்: சந்தையில் வியாபாரிகளிடமிருந்து கொள்ளும் வரி

சப்த சந்தானம்: மகனைப் பெறுவதால் அடையக்கூடிய பயனை அளிப்பனவாகக் கருதப்பெறும் ஏழு நற்காரியங்கள்: அவை, குளம் தோண்டுதல், தன நிக்ஷேபம், அக்கிரகாரம் அளித்தல், கோயில் எழுப்புதல், நந்தவனம் அமைத்தல், கவிஞரைக்கொண்டு நூல் இயற்றுதல்,

சத்திரம் ஏற்படுத்தல் ஆகிய ஏழுமாம் என்பர் ஒரு சாரார்; மறு வகையில் ஒருவன் தன் வாழ்நாளிலே வழிவழியே தன் புகழை நிலை பெறச்செய்ய இயற்றவேண்டிய ஏழு நற்காரியங்கள் எனக் காணப் படுகிறது; அவை, மகப்பேறு, நூல் இயற்றல், பொருள் திரட்டல், நந்தவனம் அமைத்தல், கன்னியாதானம், கோயில் நிர்மாணம், குளம் தோண்டுவது ஆகிய ஏழுமாம்; சப்தசந்ததி எனவும் பெறும்

சப்பத்தி : தட்டை முத்து; சப்படி என்பதும் இதுவே போலும்

சபாமஞ்சிக்கம் : சபையாருக்கு உரிய தரிசு நிலம்; சபைப்போது, ஊர்ப்போது, ஊர்மஞ்சிக்கம், சபாமத்யமம் எனவும் பெறும்

சபாமாற்றம் : சபையின் உத்தரவு; சபையின் பதில்

சபாமாற்றம் சொல்லுதல் : சபையார் தீர்மானத்தைத் தெரிவித்தல்

சபாவிலை, சபைவிலை : சபையின் உத்தரவால் பகிரங்கமாக நடக்கும் விற்பனை; ஊர்ச்சபையார் நடத்தும் விற்பனைக்கு நிச்சயித்த விலைப் பொருள்

சபாவினியோகம் : கிராமச் சபையினால் இறை நீக்கப்பெற்ற நிலங் களின் வரிப்பணத்தை ஊரார் ஏற்று இறுப்பதிலே வரும் பங்கு; சபையார் செலவுக்கான பணத்துக்கு இறுக்கும் பங்கு

சபை : அகரம், பிரம்மதேயம், சதுர்வேதி மங்கலம் போன்ற பிரா மணர் குடியிருப்புக் கிராமங்களுக்கு அமைந்த சபை; குறி என்று குறிக்கப்பெறுவதும் இதுவே

சம்படம் : வழிநடை உணவு; சம்பளம், சம்மாதம் எனவும் வரும்; ஓலைச்சம்படம் என்பதுபோல் காணப்பெறும்; சம்மாதநியோகம் பார்க்க

சம்பிரதி : தலைமைக் கணக்கன்; கோயில் நிர்வாகி

சம்பிராத்தி : பிராப்தி; பேறு; அடையத்தக்கது

சம்மாதநியோகம் : ஓலைச்சம்மாதமே யாகும்

சம்வத்சரவாரியம் : ஆண்டுதோறும் தெரிந்தெடுக்கப்படும் கிராம நிர் வாக சபை; சம்வத்சர கிராம காரியம் எனவும் பெறும்

சமஞ்சஸம் : ஒப்பு; ஒத்திருத்தல்

சமஞ்சிதன் : கிராமம் அல்லது கிராம சபையின் கணக்கன்; கோயில் வேலைக்காரன்

சமயதர்மம் : அவர் அவர் தொழிலுக்கு உரிய தர்மம்; முக்கியமாக நானாதேசி, சித்திரமேழி ஆகிய குழுவினர்களுடைய சாசனங்களில் காண்பது

சமய பத்திரம்: உடன்படிக்கைப் பத்திரம்

சமய முதலி: சமயத் தலைவர்; மக்களின் சமய ஒழுக்கத்தைக் கண் காணித்து அவர்களுடைய பிழைகளை எடுத்துக் காட்டித் தண்டிக்கும் அதிகாரம் பெற்ற தர்மத்தின் காவலர்

சமயாசாரர்: மக்களின் சமய ஒழுக்கத்தைக் கண்காணிப்பவர்; சிவ சமயத்தைச் சார்ந்தவர்

சமர்: பட்சபாதம் இல்லாத நடுநிலை

சமரமுத்திரன்: போரில் காட்டிய வீரத்துக்காக முன்னுளில் அரசர் வழங்கிய பட்டப்பெயர்

சமுதாயத் திருமுகம்: அரசன் முதலியோர் பல வகுப்பினர்க்கும் பொதுவாக விடுக்கும் உத்தரவு

சமுதாயப் பிராத்தி, சமுதாயப் பிராப்தி: குடிகள் பொதுவாக அனுப விக்கும் நிலங்களிலிருந்து கிடைக்கும் வருவாய்; அதேபோல ஊர்ப் பொதுவில் செய்யும் செலவு; இவற்றில் அவர் அவர் பங்கு

சமுதாயம்: கணபோகம் வாய்ந்த கிராமம்

சமுதாயம்: கிராமப் பொது; கோயில் நிர்வாகம் செய்வார் கூட்டம்

சமைதல்: அமைதல்; சேர்தல்

சமைப்பு: தர்மத்துக்காகத் தானம் அளிக்கப்பட்டது

சய பத்திரம், ஜய பத்திரம்: விவாதத்தின் முடிவில் தீர்ப்பாக அளிக்கப் பெறும் வெற்றிப் பத்திரம்

சர்வசிரப் பிரதானி: மற்றவர்களுக்கு மேலான தலைமைப் பிரதானி

சர்வ நாயகர்: ராஜாங்கக் காரியங்களை நிர்வகிக்கும் பிரதம அதிகாரி; பிரதான மந்திரி

சர்வமானியம்: எந்தவிதமான தீர்வையும் இல்லாமல் அனுபவிக்கப் பெறும் நிலம்; முற்றூட்டு

சர்வாதிகாரி: அரசாங்கத்தின் எல்லாக் காரியங்களையும் நிர்வகிக்கும் பிரதான மந்திரி

சரணத்தார்: வேதத்தின் அந்த அந்தச் சாகையை ஓதுபவர்

சர விளக்கு: ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கித் தொங்கவிடப்படும் கோயில் விளக்கு

சரஸ்வதி பண்டாரம்: புத்தகசாலை

சரிகை: கூடுதல் (ஊர்ச்சரிகை: ஊர்க்கூட்டம்); சாரிகை என்றும் காணப்படும்

சரிவாரம்: விளைபொருளிலே மேல்வாரம் கீழ்வாரம் இரண்டையும் சமமாகக் கொள்வது

சரீரம் : ஆள் ; தனிநபர்

சருகூடை : (சருகு கூடை) கிராமப் பொது நிலங்களிலிருந்து உலர்ந்த சருகுகளை அரிக்கும் உரிமை

சலகை : ஒரு தானிய அளவு ; அந்த அளவு விதைப்பாடுள்ள நிலம்

சலாகை : முன்னாளில் வழங்கிய நாணய வகை ; சலாகையச்சு, பழஞ் சலாகை யச்சு, ஸ்ரீயக்கி பழஞ்சலாகை யச்சு எனவும் பெறும்

சலாபம் : முத்துக் குளித்தல்

சலாவணம் : (ஆவண சலாவணம்) சிராவணம் பார்க்க

சவக்கம் : சதுர வடிவம் உள்ள வைரம்

சவர்ண விருத்தி : பத்திரம் எழுதும் தொழில்

சவி : சரமணிக்கோவை

சவைக் கடமை : கிராம சபையாருக்கு இறுக்கவேண்டிய வரிகள்

சவைக் கணக்கு : கிராம சபையின் கணக்கர்

சல்லேகனை : சமண மதத்தவர் பட்டினிநோன்பு இருந்து உயிர் துறத் தல்

சவையார் : கிராம சபையார்

சவைவாரியர் : சபாவாரியர் ; கிராம சபையின் நிர்வாகக் குழுவினர்

சாங்கம் : முழுதும் ; பத்திரமாய்

சாக்கைக் கூத்து : சாக்கையர் ஆடும் கூத்து

சாகா மூவாப் பேருரு : இறத்தலும் மூப்பும் இல்லாமல் நிரந்தரமாக இருக்கவேண்டிக் கோயிலுக்கு விட்ட கால்நடை ; சாவா மூவாப் பேராடு பார்க்க

சாக்கைக்காணி : கோயிலில் பூசையின்போது கூத்து நடத்தும் சாக்கையருக்கு அளித்த மானியம் ; நிருத்தியபோகம் எனவும் படும்

சாசன பத்தர் : அரசன் வழங்கிய சாசனத்துக்குக் கட்டுப்பட்டவர் ; சாசனம் பெற்றவர்கள்

சாசுவதியம் : சாசுவதம்

சாட்டு வரி : மேய்ச்சல் பூமிக்கான வரிபோலும்

சாத்த கணத்தார் : ஐயனார் கோயில் காரியங்களை நிர்வகிப்பவர்

சாத்தண்டம் : கொலை செய்ததற்கு விதிக்கும் தண்டனை

சாத்தியம் : அஷ்டபோகங்களுள் ஒன்று ; விளைபொருளை அனுபவிக் கும் உரிமை

சாத்திர மாணி : சாத்திரனாகிய மாணவப் பிரம்மசாரி

சாந்திரர் : சட்டர் பார்க்க

சாத்துக்கூறை : திருப்பரிவட்டம்; விக்கிரகங்களுக்கு அணியும் ஆடை

சாத்துப்படி : கோயில் விக்கிரகங்களுக்குச் செய்யும் அலங்காரம்

சாத்விக தானம் : பிரதிப் பிரயோஜனத்தை எதிர்பார்க்காமல் அளிக்கப்பெறும் தானம்; அதனால் நீரோடு அட்டிக் கொடுக்கப்பெறாமல் அளிக்கப்படுவது

சாதகக் குடி : ஆயுள் முழுவதும் ஊழியம் புரிவதாக ஏற்றுக்கொண்ட குடிமக்கள்

சாதி சித்தாயம் : இனவரி பார்க்க

சாந்திக்காரன் : (மலைநாட்டு வழக்கிலே) கோயில் பூசை செய்வோர்; சாந்திசெய்வான், சாந்தியடிகள் எனவும் பெறுவர்

சாந்திக்கூத்தன் : கோயிலில் சாந்திக்கூத்து ஆடுபவன்

சாம்போகன் : கணக்கன்; சேனைபோகம் பார்க்க

சாமந்தன் : மந்திரி; சிற்றரசன்

சாமி : சுவாமி; அரசன்

சாரடை : [குளவடை என்பதனோடு சேர்ந்தே காணப்படும்] பொது நிலங்களை அனுபவிக்கும் உரிமையைக் குறிப்பது போலும்; சரவடை என்று குறிக்கப்பெறுவதும் இதுவே. மாவடை, மரவடை ஆகிய சொற்களையும் கவனிக்க

சாரிகை : கூட்டம்; சரிகை பார்க்க

சாலாபோகம் : அன்ன சாலைக்காக வரியில்லாமல் விடப்பெற்ற நிலம் அல்லது கிராமம்; அறச்சாலாபோகம் என்றும் குறிக்கப்பெறும்

சாலிகைத்தறி, சாலியத்தறி : சாலியர் உபயோகித்த தறி; அதற்கான வரியையும் குறிக்கும்

சாலியநகரத்தார் : சாலிய வியாபாரிகளுக்காக அமைந்த சபையார்

சாலியர் : துணி நெய்வோருள் ஒரு வகையார்

சாலை : உணவு அளிக்கும் அறச்சாலை : அதனோடு இணைந்துள்ள பாடசாலையையும் குறிக்கும்

சாவடி : உசாவடி பார்க்க

சாவாமூவாப்பேராடு : இறத்தலும் மூப்பும் இல்லாமல் நிரந்தரமாக நிலைத்திருக்கும் ஆடு; கோயில்களுக்கு அளிக்கும் ஆடுகளையே இவ்விதம் குறிப்பர்; [சாவினாலோ மூப்பினாலோ ஆடுகளின் தொகை குறையும்போது குட்டிகளைக்கொண்டு குறையை நிறைத்து, கோயிலுக்குச் செலுத்த வேண்டிய நெய் முதலியவற்றை முட்டாமல் செலுத்தவேண்டியதற்கு உதவும்]

சாவி : மணி பிடிக்காமல் பழுதான பயிர்

சாவேறு : பகையரசனைச் சூழ்ந்து காக்கும் படைமீது ஊடறுத்துச் செல்ல முபன்று அந்நிலையில் உயிர்துறத்தலையே விரதமாகக் கொண்ட வீரர்

சாற்றுப்படி : சாத்துப்படி பார்க்க

சாற்றுவரி : (சாறு - பதனீர்) கள் இறக்கும் மரங்களிலிருந்து கள்ளோ பதனீரோ இறக்குவதற்கான வரி

சான்றார் : கள் இறக்குவோர்

சானி : மனைவி ; பிராமண ஸ்திரீகளின் பட்டப்பெயர்

சிகரம் : கோபுர விமானங்களின் உச்சி

சிங்கபாதம் : சிங்கத்தின் பாதம் போல அமைக்கப்பட்டிருக்கும் பாத்திரத்தின் பாதம்

சிங்காரத் தோப்பு : உத்தியான வனம்

சிடுக்கு : மகளிர் ஆபரண வகை

சித்தம், சித்தி : நில அனுபோகத்தில் அஷ்டபோகங்களுள் ஒன்று ; நிலத்தில் விவசாயம் செய்யும் உரிமை

சித்தாந்தம் : சைவ சமயம்

சித்தாயம் : நிர்ணயித்து அறுதியிட்ட வரி [விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் இது பொன்னாக இறுத்துவந்த சிறு வரிகளைக் குறித்து வந்தது]

சித்திரமேழி : உழவுத்தொழில் பூண்ட வேளாண் மக்களுடைய பெருஞ் சபை ; அவர்களுடைய சின்னமான கலப்பை ; அந்தச் சின்னம் பொறிக்கப்பட்ட எல்லைக்கல்

சித்திரைக்கார் : சித்திரை மாதத்தில் அறுவடையாகும் நெல்வகை

சிதாரி : கோயிலில் தூபம் இடுவதற்கு உபயோகமாகும் ஒருவகைப் பண்டம்

சிப்பம் : சிறு மூட்டை

சிமயம் : இமயமலை

சிரத்தாமந்தர் : அபிமானத்தால் கோயில் தருமங்களைச் சிரத்தையோடு பார்ப்பவர்

சிரப் பிரதானி : தலைமைப் பிரதானி

சிராவணம், சிராவணை : ஆவணம், நிலக்கிரயபத்திரம்; சிராவணபத்திரம் எனவும் பெறும்

சிரியக்கி பழஞ்சலாகை பச்சு : சலாகை பார்க்க ; சிரியக்கியச்சு எனவும் பெறும் (ஸ்ரீயக்ஷி பழஞ்சலாகை அச்சு)

சிரிவயிண்ணவர், சிரிவயிஷ்ணவர் : ஸ்ரீவைஷ்ணவர்

சிரீமுகம் : ஸ்ரீமுகம்; திருமுகம்

சிரோவர்த்தனை : சிவலிங்கத்தின் உச்சிப்பகுதி

சில்குடிமை: ஊர்ச்சபை போன்ற ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இறுக்கும் சிறு வரிகள்

சிலந்தி : கோமேதக வகை

சில்லந்தராயம் : உள்வரிப் பிரிவைச் சேர்ந்த சிறு வரிகள்

சில்லாயம், சில்லிறை, சில்வரி : சில்லறை வரிகள்

சிலாலேகை : கல்வெட்டு; கல்லில் பொறித்த எழுத்து

சிவந்தநீர் : முத்தின் சிவந்த நீரோட்டம்

சிவப்பிராமணர் : சிவன் கோயிலில் பூசை செய்யும் பிராமணர்; ஆதி சைவர்

சிவப்புச்சிலை : கெம்பு; சிவப்பு ரத்தினம்

சிவப்புத் தோய்ப்பார் : துணிகளுக்குச் சாயம் இடுவோர்

சிவபண்டாரி : சிவன் கோயில் பொக்கிஷத்து அதிகாரி

சிவயோகி : சிவனடியார்

சிவன் : சிவ பக்தருக்கு வழங்கிய பட்டப்பெயர்

சிவிகைப்புறம் : (கோயிலில்) பல்லக்குச் சேவைக்கான செலவுக்கு விடப்பட்ட நிலம்

சிற்றாயம் : சிறு வரிகள்

சிறகு : தெருவின் ஒரு பக்கத்தில் உள்ள வீடுகளின் ஒழுங்கு; தெருப் பக்கம்

சிறப்பு : கோயிலில் நடக்கும் விசேஷ பூசை

சிறப்புக்கட்டளை : கோயிலில் ஏற்படுத்தப்பட்ட நைவேத்தியப் படித்தரம்

சிறு அபராதம் : சிறு குற்றங்களுக்கு விதிக்கும் தண்டனை

சிறுகாலைச்சந்தி : கோயிலில் உதய காலத்தில் செய்யும் பூசை

சிறுகாலைச்சிறப்பு : கோயிலில் விடியற்காலையில் நடக்கும் பூசை சமயம் செய்யும் நைவேத்தியம்

சிறுகுடிவாரம் : நிலத்தை உழுது பயிரிடுவதில் உழவனுக்குக் கிடைக்கும் பங்கு

சிறுசுங்கம் : தலைச்சுமைபோன்ற சிறு சுமைகளுக்கு வசூலிக்கும் சுங்கம் போலும்

சிறுதரம் : அரசாங்க அதிகாரிகளில் சிறிய தரத்தில் உள்ளவர்கள்

சிறுதனம்: அரசாங்க அதிகாரிகளுள் சிறுதரம் வகிப்போர் [சோழர் களுடைய ஆட்சிக்காலத்தில் அரசாங்க அதிகாரிகள் பெருந்தனம், சிறுதனம் என இரு பிரிவுகளாக இருந்தனர். ஒவ்வொரு பிரிவும் பெருந்தரம் சிறுதரம் என மறுபடியும் பிரிக்கப்பட்டிருந்தது. இம் முறை சிறுதனத்துப் பெருந்தரம் என்று ஓர் அதிகாரி குறிக்கப் படுவதிலிருந்து விளங்கும்]

சிறுதனம்: சொந்தப்பணம்; தனக்கே உரிமையான நிதி; சிறுவாடு

சிறுப்பிள்ளை: அரண்மனை ஊழியன்; வேலையாள்

சிறுபடுகண்: ஆபரண உறுப்பில் தொங்கும் வகை

சிறுபாடிகாவல்: [பெரும்பாடிகாவலினின்றும் வேறானது] ஊர்க் காவல்

சிறுபாடு: சிறிய உபயம்

சிறுமுறி: செய்தி அறிவிக்கும் லிகிதம்; சிறு மதிப்புள்ள சில்லறைப் பத்திரம்

சிறுமுறிக்காசு: சிறு பத்திரங்களுக்காக இறுக்கும் காசு

சிறுவேட்டை: கிராமப் புறங்களில் சிறு துஷ்டமிருகங்களை ஒழிக்க வேட்டை ஆடுவது

சின்னப்பிள்ளையாண்டான்: அடைப்பம் என்னும் அரசனுடைய அதி காரியின் கீழ் ஊழியம் செய்பவன்; அரண்மனை ஊழியன்

சின்னம்: திருச்சின்னம்; காளம் போன்ற வாத்தியம்

சின்னம்: ஒரு நாணய அளவு; மிகவும் குறைவானது போலும்

சின்னம்: சில்வானம்; சொச்சம்

சினகரம்: சைனக்கோயில்

சீகாரியம்: ஸ்ரீகாரியம்; கோயில் காரிய நிர்வாகம்

சீகாரியக் கண்காணி: கோயில் நிர்வாகத்தை மேற்பார்ப்போர்

சீகாரியப் பேறு: காரிய நிர்வாகம் செய்வாருக்குக் கொடுக்கப்பெறுவது

சீதனக்காணி: சீதனமாகப்பெற்ற நிலம்

சீபண்டாரம்: ஸ்ரீபண்டாரம்; கோயில் பொக்கிஷம்

சீபலி: ஸ்ரீபலி; கோயிலில் நாள்தோறும் சோற்றால் இடும் பலி [ஹவிர்பலி எனவும் படும்; தீயெறிசோறு என்பதும் இதுவே]; பலி பூசைக்காகக் கோயிலிலே சுற்றி எழுந்தருளச்செய்யும் சிறு விக்கிரகம்; பலி இடும்போது கோயிலைச் சுற்றி விக்கிரகத்தோடு வலம் வருதல்; ஸ்ரீபலி நடத்த இறுக்கும் வரி

சீபலி கொட்டுவார்: கோயிலில் தினசரி பலி பூசையின்போது இசைக் கருவிகளை வாசிப்போர்

சீபலிபோகம்: கோயிலில் ஸ்ரீபலி நடத்தும் செலவுக்காக விடப்பட்ட நிலம்; சீபலிப்பட்டி எனவும் பெறும்

சீபாதந்தாங்கிகள்: கோயிலில் விக்கிரகங்களை வாகனத்தோடு கட்டித் தாங்கிச்செல்பவர்; சீபாதம் எனவும் பெறுவர்

சீமாவிவாதம், சீமைவிவாதம்: (நாட்டின்) எல்லையைப்பற்றிய வழக்கு

சீமுகம்: ஸ்ரீமுகம்; அரசனிடமிருந்து வந்த ஓலை

சீயர்: ஜீயர்; விஷ்ணுகோயில் நிர்வாகப் பொறுப்பு வகித்த வைஷ்ணவ சந்நியாசி

சீர்மை: சீமை; நாட்டின் பகுதி

சீருத்திரர்: ஸ்ரீருத்திரர்; சிவனடியார்; சிவன் கோயில் நிர்வாகக் குழுவின் பகுதி

சீவனசேஷம்: ஜீவனத்துக்கு உரியது

சீவிதம், சீவிதப்பற்று, சீவியம்: ஜீவிதம் பார்க்க

சுங்கசாலை: சுங்கம் வசூலிக்கும் இடம்

சுங்கம்: 'கலத்தினும் காலினும் வரும் பண்டங்கட்கு இறை'

சுட்டிட்டிகை: (சுட்ட இட்டிகை) சுட்ட ஓடு; செங்கல்; சுட்டோடு என்பதும் இதுவேயாகும்

சுடர்நிலை: விளக்குத் தண்டு; விளக்கைத் தாங்கி நிற்கும் கட்டை

சுடுகாட்டுப்பாட்டம்: பிணங்களை எரிப்பதற்கான மயான வரி

சுடு: சும்மாடு

சுப்பிரம்: முத்துக்குற்றத்துள் ஒன்று

சுப்பிரயோகம்: ஒரு நதியின் பெயர்; வடபெண்ணை என்பர்

சுமை: தலையில் சுமந்து விற்போர் இறுக்கும் வரி

சுரம்: காடு [சுரம்போக்கி: காட்டுக்குத் துரத்தி; சுரம் இறக்கி எனவும் பெறும்]

சுரி: ஆபரணத்தின் உறுப்பு

சுருட்டிக்காரன்: அரசர் பவனியில் சுருட்டி என்னும் சாமரம் போன்ற எடுபிடி விருது எடுத்துச்செல்பவன்

சுருதிமான்: மக்களின் சமூகம் பற்றிய காரிய நிர்வாகம் செய்வோர்; கேள்வி என்பாரின் வேறு பெயர்

சுருளமுது: தாம்பூலம்

சுரோத்திரியம்: சுருதி அதாவது வேதம் வல்ல பிராமணர்களுக்கு வரியில்லாமல் அளித்த நிலம் அல்லது கிராமம்

சுவந்திரம்: சுதந்திரம்; கிராமத் தொழிலாளர்க்குச் சேரவேண்டிய நெல், சோறு போன்ற உரிமை

சுவர்ணதாயம்: காசாக, பொன்னாக இறுக்கும் வரி வகைகள்

சுவாமி: அரசன்; உரியவன்

சுவாமியம்: சொத்துரிமை

சுவாமிவாரம்: மேல் வாரம்; சொந்தக்காரனுக்கு உரிய பங்கு

சுவாஸ்தியம்: பரம்பரையாக அனுபவிக்கும் உரிமை

சுற்று: சுற்று வட்டம்; சுற்றளவு

சுற்றுக்கல்லூரி: கோயிலில் கர்ப்ப கிருகத்தைச் சுற்றிப் பிராகாரம் போல் அமைக்கப்பட்ட கட்டடம்

சுற்றுப் பேழை: சுருள் அடுக்காக அமைந்த பேழை

சுனை: மலைகளின் பிளவுகளில் தங்கும் நீர்நிலை

சூலக்கல்: சிவன் கோயிலின் நிலத்து எல்லையைக் குறிக்க நடும் சூல உருவம் பொறித்த கல்

சூலக்கால்: சூலக்குறி பொறிக்கப்பெற்ற சிவன் கோயில் அளவை மரக்கால்

சூலத்தாபனம்: சிவன்கோயில் நிலத்து எல்லையைக் குறிக்கச் சூல உருவம் தாங்கிய கல்லை நடுவது

சூலவரி: சிவன் கோயிலுக்காக இறுக்கப்பெறும் வரிபோலும்

சூளத்திறை: பரத்தையர் செலுத்திய வரி [கன்னடக் கல்வெட்டு களிலே இந்தப் பொருள்களில்தான் வழங்குகின்றது]

செக்காயம்: எண்ணெய் ஆடும் செக்கு வரி; செக்கிறை, செக்குக் கடமை எனவும் பெறும்

செக்குமன்றாடி: முன்னாளில் வழங்கிவந்த ஒரு வரி வகை; செக்கு சம்பந்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்

செக்குவாணிகர்: செக்காடும் வாணிகர்

செங்கொடிக்காணம்: செங்கொடி என்றும் கொடிவேலி என்றும் சித்திரமூலம் என்றும் வழங்கும் மருந்துச்செடிக்கான வரி எனக் கொள்வர்; கொடிக்காணம் என்பதைக் காண்க

செங்கோல்: செம்பொன்; சுத்தமான தங்கம்

செட்டியார் மகமை : வியாபாரிகள் இறுக்கும் மகமை

செட்டிறை : வியாபாரிகள் இறுக்கும் வரி ; செட்டிறை எனவும் பெறும்

செண்பகக்குளிகை : முன்னாளில் வழங்கிவந்த நாணய வகை ; சம்புவராயர் அச்சிட்டு வழங்கியது போலும்

செந்நீர் : தெளிந்த நீர்

செந்நீர் பொதிவி : நல்ல நீர் ஓடும் கால்

செப்புக்கால் திருச்சிற்றம்பலமுடையான் : திருச்சிற்றம்பலமுடையான் என்ற பெயர் கொண்டதும், செம்பினால் ஆனதுமான அளக்கும் பாத்திரம்

செப்புத் திருமேனி : செம்பினாலாகிய விக்கிரகம்

செப்புப்பத்திரம், செப்புப் பட்டயம் : செப்பேடு ; தாம்ர சாசனம்

செம்பாதி : சரிபாதி

செம்மருதர் : நல்ல விவசாயிகள்

செம்மை : சமம் ; ஒப்பு ; சுத்தம்

செம்மை பண்டாரக்கல் : சரியான எடை கொண்டதாகக் கஜானாவில் உள்ள நிறைக்கல்

செய்தாரி பொன் : சுத்தமான தங்கம்

செய்யும்படி : உத்தரவு ; ஆணை

செயல் : ஆபரணத்தில் மணிவைத்துச் செய்யும் இழைப்படவேலை

செருவாடி : சிறுவாடு ; சிறுகச் சிறுகச் சேர்த்த பணம்

செல்ல : முடிய

செவ்வரியாடு, செவரியாடு : ஆடு வகை ; செம்மறியாடு என்பதே போலும்

செவ்வாரம் : சம வாரம் ; பாதி வாரம்

செவிடு : ஆழாக்கில் ஐந்தில் ஒரு பாகமாகிய அளவு

செறுவு : செறு ; வயல்

சென்னடை : கோயிலில் நித்தியப் படித்தரம்

சென்னீர் வெட்டி : நீரோடும் கால்வாயை அவ்வப்போது வெட்டிச் சீர் செய்ய வேண்டிய கடமை ; சென்னீரமஞ்சி என்பதும் இதுவே போலும்

சேகண்டி : சேமக்கலம்

சேணியர் : நெய்வோருள் ஒரு வகையார் ; தொழிற் குழுவினர்

சேர்வை : ஊழியம்; ஊழியர்களுக்கு வரியில்லாமல் விடப்பட்ட நிலம் ; ஊழியர் மானியம்

சேரி : ஊரில் ஜனங்கள் வாழும் இடம் ; பார்ப்பனச்சேரிபோல் வருவது காண்க

சேவகக்காசு : போர் வீரர்களின் செலவுக்கும் பராமரிப்புக்குமாக இறுக்கும் காசு ; போர் வீரர்களிடமிருந்து வசூலிப்பதும் ஆகும்

சேவகத்தேவை : அரசனோ உயர்தர அதிகாரிகளோ கிராமங்களுக்கு விஜயம் செய்யும்போது அவர்களுக்குச் சேவகம் செய்வதற்காக ஆட்களை அனுப்புவதும், அந்தச் செலவுக்கான வரிப்பணத்தையும் குறிக்கும்

சேவகன் : போர் வீரன்

சேனகணம் : சமண மதத்தினருள் ஒரு குழுவினர் ; சேனன்வயர் எனவும் பெறுவர்

சேனாபதியாழ்வார் : சேனை முதலியார் ; விஷ்வக்சேனர்

சேனாபதிப் பெருவிலை: விஷ்ணு கோயில் நிலங்களை விஷ்வக்சேனர் பெயரால் கிரயம் செய்வது; அதற்கான விலைப்பொருள்

சேனாபோவன், சேனைபோகம் : கணக்குப்பிள்ளை

சேனையங்காடிகள் : வியாபாரிகளுள் படையோடு செல்லும் ஒருவகையினர் ; துணி வியாபாரிகளுள் ஒரு பிரிவினர்

சைவாசாரிய க்ஷேத்திரம் : சைவாசாரியர்களுக்கு வரியில்லாமல் அளிக்கப்பட்ட நிலம்

சைவகலாலய சக்கரவர்த்தி, சைவசக்கரவர்த்தி, சைவசூளாமணி, சைவாதிராயர் : சைவ ஆசாரியர்களுள் சிலருக்கு முன்னாளில் அரசர் வழங்கிய பட்டப்பெயர்கள்

சொக்கத்தளியிலார் : சிவன் கோயிலைச் சார்ந்த தேவரடியாரில் ஒரு வகையார் ; சொக்கம் என்னும் ஆட்டத்தை ஆடுபவரே போலும்

சொக்கம் : சுத்த நிருத்தம் எனப்படும் நாட்டிய வகை

சொர்க்கஸ்தராதல் : இறந்து போதல்

சொருவம் : ஸ்வரூபம் ; மலையாளத்து நம்பூதிரிகள் அரசர் முதலியோரின் ஸ்தாவர சொத்து

சொனவரி : சுவர்ணவரி என்பதன் வேறு வடிவம் ; சுவர்ணாதாயம் ஆகும்

சோசியார் திருவடி: அரசாங்க உத்தியோகஸ்தருள் ஒருவர்; அரசாங்க ஜோதிஷரே போலும்

சோடி: மிகக் குறைந்த விகிதத்தில் வரி இறுப்பதாக அளிக்கப்பெற்றுள்ள இனம் வகை; ஜோடி பார்க்க

சோபானம்: படிக்கட்டு; கோயில் கட்டடத்தின் அடிப்படை

சோம சித்தாந்தம்: சைவ சமயத்தின் உட்பிரிவுகளுள் ஒன்று

சோமாசி, சோமயாஜி: சோமயாகம் செய்தவன்

சோழியக்காசு: முன்னாளில் வழங்கி வந்த ஒரு காசு; ஒரு பணத்தின் நூற்றில் ஒரு பாகம் எனக் கருதப்படுவது

சோற்றடைப்பு: அன்னதானக் கட்டளை

சோறு மாட்டு: எச்சோறு பார்க்க; சோறுமாட்டம், சோறுமாடு எனவும் குறிக்கப்பெறும்

சோனகச்சிடுக்கு: முன்னாளில் பெண்கள் அணிந்துவந்த ஓர் ஆபரணம்

சௌஸ்தி: தருமக்கொடை (ஸ்வஸ்தி என்று ஆரம்பிக்கும் சாசனம் என்பதன் திரிபேபோலும்)

ஞாடு: நாடு என்பதன் வேறு வடிவம்

ஞாபகம்: நினைப்பூட்டுவதற்காக எழுதிவைத்த குறிப்பு

ஞாயிறு: மாதம்; சௌரமானக் கணக்கின்படி கொள்ளும் மாதம்

ஞாழி: நாழி என்பதன் வேறு வடிவம்

டங்க சாலை: தங்க சாலை; நாணய சாலை

தகட்டுக்குழை: கழுத்தணி வகை

தச்சத்துலாம்: ஏற்ற வகைக்கு வழங்கிவந்த வரிபோலும்

தச்சாசாரியம்: தச்சர்களிடையே தலைமைப் பதவி; ஸ்தபதி, சிற்பாசாரியர் போன்ற பதவி

தச்சாசாரியக்காணி: கோயிலில் தச்சாசாரியர் கவனிக்கவேண்டிய வேலைகளுக்கான உரிமை; அதற்கான மானியம்

தசக்கிரியை: கோயிலில் பழுதுபார்ப்பது முதலிய வேலைகளைச் சிற்பாசாரியார்கள் கவனிப்பது

தசபந்தம்: வரியில்லை பத்தில் ஒரு பங்கைக் குளம் வெட்டுவது போன்ற பொதுக் காரியங்களுக்காக ஒதுக்குவது; அந்தத் தொகைக்கு ஈடான வருவாயைக் கொடுக்கும் நிலத்தைத் தனியாக ஒதுக்குவது; குளம் முதலிய நீர்நிலைகளை வெட்டுவோர் அதன் ஆயக்கட்டில் பத்

திலே ஒரு பங்கை அனுபவிப்பதுமாகும்; தசவந்தம் எனவும் பெறும்

தட்டடுவு : (தட்டு அடைவு) அவ்வப்போது கிடைக்கும் வருவாய் போலும்

தட்டம் : உண்கலம், தாம்பாளம்

தட்டழி : சேமக்கலம் போன்ற ஒருவகை வாத்தியம்; தத்தளி என்பது இதுவே போலும்; தட்டாழி எனவும் பெறும்

தட்டாழி கொட்டி : கோயிலில் ஸ்ரீபலி நடக்கும்போது சேமக்கலம் போன்ற வாத்தியத்தில் இசையெழுப்புவோர்

தட்டார் பாட்டம் : (பொற்கொல்லர்கள்) தட்டார்கள் இறுக்கும் வரி; தட்டாரப் பாட்டம் எனவும் ஆகும்

தட்டுக்காயம் : (தட்டுக்கு ஆயம்) தட்டொலி என்பதே போலும்; தட்டுக்காணம் என்பதும் இதுவேபோலும்

தட்டுப் புழுகு : புனுகு சட்டம்

தட்டோலி : (தட்டார்பாட்டம் என்பதோடு சேர்ந்தே காணப்படும்) கம்மாளரிலே வேறு வகையினரான கொல்லர் போன்றவர் பட்டறை வைத்து வேலை செய்வதற்கு இறுக்கும் வரி போலும்

தட்டோளி : உலோகத் தட்டால் ஆன முகம் பார்க்கும் கண்ணடி

தடவிக் கட்டுதல் : இரத்தினத்தைப் பொன்னில் பதிக்கும் வேலைப்பாடு

தடி : நெல்வயல்; விளைநிலப் பகுதி

தடி : கையெழுத்துப் போடத் தெரியாதவன் அதற்குப்பதிலாக இடும் அடையாளம்

தடிப்பதக்கு : தடி நிலத்துக்குப் பதக்கு வீதம் நெல்லாக இறுப்பது

தண்டக்காணம் : தண்டம் என்பதேபோலும்

தண்டக் குற்றம், தண்டங்குற்றம் : தண்டம், குற்றம் ஆகிய இரண்டும்; குற்றம் என்பது இழைத்த குற்றத்துக்குச் செலுத்தும் அபராத தொகை; தண்டம் இதர வகையான அபராதத் தொகை; தண்ட கூற்றம் எனவும் காணப்பெறும்

தண்டநாயகம் : படைத் தலைமையாகிய உத்தியோகம்; அந்தப் பதவி வகிப்பவன் தண்டநாயகன்

தண்டப் படுதல் : அபராதம் விதிக்கப் பெறுதல்

தண்டப் பொருள் : அபராதமாக வாங்கும் பொருள்

தண்டம் : அபராதமாக விதிக்கப்பட்ட வரி

தண்டல்மேனி : வரி வசூலிப்பவன்; தானியமாக வரி வசூலிக்கும் போது அதில் ஏற்படக்கூடிய குறைவுக்காகச் சேர்த்துக் கொடுப்பதும் ஆகும்

தடிமாறும் குதிரைச் சேவகன் : அரசன் போர்ப்படையைச் சேர்ந்த தற்குறி அல்லது முத்திரையிடும் குதிரை வீரன்

தண்டலிலக்கை : வரி வசூலிக்க வருவோர் தங்கியிருத்தல்

தண்டவாணி : பொன் மாற்று அறிய உதவும் ஆணி ; உரைகல்

தண்டற் கடமை, தண்டலிற் கடமை : வரி தண்டுவோர்க்கு இறுக்கும் கடமை ; வரி தண்டுவோர் இறுக்கும் வரியாகவும் கொள்வர்

தண்டாளர் முதல் : வரி வசூலிப்பவர் தங்கள் வசூலுக்கு வைத்திருக்கும் கணக்கு

தண்டிகை, தண்டு : பல்லக்கு

தண்டிகை ஜீவிதம் : பல்லக்குச் சுமப்புவர்களுக்காக வரியில்லாமல் விட்ட நிலம்

தண்டு : போர்ப்படை ; படையெடுத்துச் செல்லல்

தண்டு : கோயில் வாகனம் பல்லக்கு முதலியவற்றைக் கட்டித் தூக்குவதற்கான கோல் ; வாரை

தண்டுதல் : வசூலித்தல் ; தண்டல் எனவும் காணப்பெறும்

தண்டெடுப்பார் : பல்லக்குச் சுமப்பவர்

தண்டேறுதல் : பல்லக்கில் ஏறுதல்

தண்டேசுரப் பெருவிலை : சண்டேசுரப் பெருவிலை பார்க்க

தண்டேசுரன், தண்டீசுரன் : சண்டேசுரன்

தண்ணீர்க்காணம் : தண்ணீர் வரி என்பதேயாகும்

தண்ணீர்ப்பட்டி : தண்ணீர்ப் பந்தல் தர்மத்துக்கு விடப்பெற்ற நிலம்

தந்ததி : சந்ததி ; பரம்பரை

தந்திரபாலன் : சேனைத் தலைவன்

தந்திரம் : படை (காலாட்கள் கொண்டது)

தந்திரி : படைத்தலைவன் ; கோயில் அர்ச்சகர்

தந்திரிமார் : போர்ப்படையைச் சேர்ந்தவர் ; படைக்கானவர் எனவும் பெறுவர் ; கோயில் அர்ச்சகர்களையும் குறிக்கும்

தந்மி, தர்மி : கோயில் காரியங்களை நிர்வகிப்போர்

தந்மி எழுதி, தந்மி ஊதி : ஊர்ச்சபையின் பெருங்கூட்டம் கூடுவதைக் காளம் ஊதி அறிவிப்பது

தபசி : தவம்புரிவோர் ; துறவிகள் ; தவசி எனவும் குறிக்கப்பெறுவர்

தம்பம் : விளக்குத் தண்டு

தம்பிராட்டி : தலைவி ; அரசன் தேவி

தம்மம் : திரமம் என்னும் நாணயம்

தய்யான், தையான் : தையற்காரன்

தயித்திரியக் கிடைப்புறம் : வேதத்தில் தைத்திரீய சாகை ஓதுவார்க்கு அளித்த மானிய நிலம்

தயிரமுது, தயிரமிர்து, தயிரமுர்து : கடவுளுக்குப் படைக்கும் தயிர்

தர்மதானம் : புண்ணியம் பயக்கும் கொடை

தர்மபத்தர்: (தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்) தருமவிசாரணை செய்வோர்

தர்ம வாணியர், தன்ம வாணியர் : நியாயமான விலைக்கு வியாபாரம் செய்வோர்

தர்மாசனம் : தரும சபை : நியாய விசாரணை ஸ்தானம்

தரகு, தரகுபாட்டம் : தரகரிடமிருந்து கொள்ளும் வரி

தரமிலிநிலம் : தீர்வைத்தரம் நிர்ணயிக்கப் பெறாத நிலம்

தரவிடு நெல் : (கூலியாகக்) கொடுக்கும் நெல்

தரவு : உத்தரவு ; கட்டளை ; நிர்ப்பந்தித்து வசூலித்தல்

தரவு கொள்ளுதல் : ரசீது பெறுதல் ; வரி முதலியவற்றின் நிர்ப்பந்த வசூல்

தரவுசாத்து : சோழர் ஆட்சியில் தரவு இடும் அரசாங்க அதிகாரி

தரா : எட்டுப் பாகம் செம்பும் ஐந்து பாகம் காரீயமும் கலந்து செய்யப்படும் உலோகம் ; பித்தளை

தரிசனகாணிக்கை : பெரியோரைக் காண்கையில் அளிக்கும் காணிக்கை

தரிஸாபள்ளி : கிறிஸ்தவர் கோயில் ; மாதாக் கோயில்

தரிப்பறுதி : (கிராமத்தில்) தங்காமல் துறந்து செல்லல்

தருப்பு : குறைந்த மதிப்பு உள்ள ஒரு வகை வெள்ளைக்கல்

தருமாசனத்தார் : நீதி வழங்குவோர்

தலக்காவல் : ஸ்தலம் காவல் புரிவது ; ஊர்க்காவல்

தலத்தார் : கோயில் அதிகாரிகள் ; கோயில் அர்ச்சகர்கள்

தலவகாரம் : சாம வேத சாகைகளுள் ஒன்று; தலவகார சாமம் எனவும் பெறும்

தலைக்கரை : வயலையோ ஏரிகுளங்களின் கரையையோ அடுத்துள்ள நிலம்

தலைக்கோலி : ஆடி முதிர்ந்த கணிகை

தலைச்சம்மாடு : தலைப்பாரம் ; தலைச்சும்மாடு ; பொறுப்பு

தலைநீர் : முதல் மடைப் பாய்ச்சல்

தம்பிராட்டி : தலைவி ; அரசன் தேவி

தம்மம் : திரமம் என்னும் நாணயம்

தய்யான், தையான் : தையற்காரன்

தயித்திரியக் கிடைப்புறம் : வேதத்தில் தைத்திரீய சாகை ஓதுவார்க்கு அளித்த மானிய நிலம்

தயிரமுது, தயிரமிர்து, தயிரமூர்து : கடவுளுக்குப் படைக்கும் தயிர்

தர்மதானம் : புண்ணியம் பயக்கும் கொடை

தர்மபத்தர்: (தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்) தருமவிசாரணை செய்வோர்

தர்ம வாணியர், தன்ம வாணியர் : நியாயமான விலைக்கு வியாபாரம் செய்வோர்

தர்மாசனம் : தரும சபை : நியாய விசாரணை ஸ்தானம்

தரகு, தரகுபாட்டம் : தரகரிடமிருந்து கொள்ளும் வரி

தரமிலிநிலம் : தீர்வைத்தரம் நிர்ணயிக்கப் பெறாத நிலம்

தரவிடு நெல் : (கூலியாகக்) கொடுக்கும் நெல்

தரவு : உத்தரவு ; கட்டளை ; நிர்ப்பந்தித்து வசூலித்தல்

தரவு கொள்ளுதல் : ரசீது பெறுதல் ; வரி முதலியவற்றின் நிர்ப்பந்த வசூல்

தரவுசாத்து : சோழர் ஆட்சியில் தரவு இடும் அரசாங்க அதிகாரி

தரா : எட்டுப் பாகம் செம்பும் ஐந்து பாகம் காரீயமும் கலந்து செய்யப்படும் உலோகம் ; பித்தளை

தரிசனகாணிக்கை : பெரியோரைக் காண்கையில் அளிக்கும் காணிக்கை

தரிஸாபள்ளி : கிறிஸ்தவர் கோயில் ; மாதாக் கோயில்

தரிப்பறுதி : (கிராமத்தில்) தங்காமல் துறந்து செல்லல்

தருப்பு : குறைந்த மதிப்பு உள்ள ஒரு வகை வெள்ளைக்கல்

தருமாசனத்தார் : நீதி வழங்குவோர்

தலக்காவல் : ஸ்தலம் காவல் புரிவது ; ஊர்க்காவல்

தலத்தார் : கோயில் அதிகாரிகள் ; கோயில் அர்ச்சகர்கள்

தலவகாரம் : சாம வேத சாகைகளுள் ஒன்று; தலவகார சாமம் எனவும் பெறும்

தலைக்கரை : வயலையோ ஏரிகுளங்களின் கரையையோ அடுத்துள்ள நிலம்

தலைக்கோலி : ஆடி முதிர்ந்த கணிகை

தலைச்சம்மாடு : தலைப்பாரம் ; தலைச்சும்மாடு ; பொறுப்பு

தலைநீர் : முதல் மடைப் பாய்ச்சல்

தலைப்பிறை: சுக்கில பக்ஷத்துப் பிரதமை

தலைப்பேழை: ஏரி அல்லது வாய்க்காலின் தலைப்பு மதகு

தலைமாறு: பரிவர்த்தனை

தலையாரிக்கம்: கிராமத் தலையாரிக் காவலுக்குச் செலுத்தும் வரி; தலையாரிக்காணம் என்பதும் இதுவே போலும்

தலையீடு: தலைப்பில் உள்ளது; ஆரம்பத்தில் இருப்பது

தலைவாய்: பிரதான வாசல்; முகப்பில் உள்ள மதகு

தலைவாய்ச்சேரி: முகப்பில் உள்ள ஊர்ப்பகுதி

தவளைவாய்: ஆபரண வகை

தவனசெட்டி: செட்டி வகையினர்

தவனம், தவனகம்: மருக்கொழுந்து

தவிர்த்து: நீக்கி; இல்லாமற்செய்து

தவுக்கை: தட்டு வகை

தழையிடுவார்: கோயிலில் வில்வம் திருத்துழாய் முதலிய பச்சிலைத் திருப்பணி செய்வார்

தள அதிகாரி: தளவாய்; படை அதிகாரி

தளபாடம்: சேனை; சேனைக்கு வேண்டிய உபகரணங்கள்

தளவாய்: படைத்தலைவன்

தளவிசை: தளவரிசை; கல் பரப்பு

தளவிருத்தி: கோயில்களின் பராமரிப்புக்காக விடப்பெற்ற நிலம்

தளி: கோயில்

தளிகை: உண் கலம்; ஓர் அளவு கொண்ட நைவேத்தியப் பிரசாதம்

தளிகைச் சிறப்பு: கோயிலில் செய்யும் விசேஷ நைவேத்தியம்

தளிச்சேரி: கோயிலைச்சேர்ந்த தேவரடியார் வசிக்கும் தெரு

தளிச்சேரிப் பெண்டுகள்: தளிச்சேரியில் வசிக்கும் தேவதாசிகள்

தளித்தல்: நீர் தெளித்தல்

தளிப்பரிவாரம்: கோயில் சிப்பந்திகள்; கோயில் பரிவாரம்

தளியிலார்: தேவரடியார்; கோயில் ஊழியம் செய்யும் பெண்டிர்

தளைக்காணம்: மரம் ஏறுவோர் உபயோகிக்கும் தளைக்கான வரி

தற்குறிமாட்டேறிதல்: கையெழுத்துப் போடத் தெரியாதவன் தன் அடையாளம் இடுதல்; அதற்குச் சாட்சி போடுதல்

தறிக்கடமை, தறியிறை: துணி நெய்வோர் தறிக்காக இறுக்கும் வரி

தறிதளை: தறிக்கடமை பார்க்க; தளைக்காணமாகவும் இருக்கலாம்

தறிப் புடவை: தறி செய்வோன் புடவையாக இறுக்கும் வரி; தறிக் கூறை என்பதும் இதுவேயாகும்

தன்ம சாதனம்: தருமத்துக்கு அளித்த நிலத்தின் பத்திரம்

தன்மதாவளர்: தன்மவாரியப் பெருமக்கள் பார்க்க; தன்ம வாணிகர் எனவும் கொள்வர்

தன்மப் பலிசை: நியாய வட்டி

தன்ம வாணிகர்: நெறிதவறாமல் நியாயமாக வாணிகம் செய்பவர்

தன்மவாரியப் பெருமக்கள்: அறநிலயங்களை மேற்பார்க்கும் சபையோர்

தன்மி எழுதுதல், தன்மி ஊதுதல், தர்மி எழுதுதல்: கிராமச் சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்குக் காளம் ஊதி அறிவித்தல் (தம்-ஒலி யெழுப்பு என்னும் வடமொழிச் சொல்லடியாகப் பிறந்தது)

தன்னேற்றம்: தன்னைச் சேர்ந்த இனத்தார்

தனிச் செய்கை: பிறருடன் சேராமல் தான் ஒருவனாகவே செய்யும் விவசாயம்

தனிசு: கடன்

தனிநகர், தனிநகரம்: நிர்வாக விஷயத்தில் தனி உறுப்பாக விளங்கும் பெரிய வியாபார ஸ்தலம்

தனியாள்: மேற்பார்வை இடுபவராகக் கொள்ளலாம்; அதனால் தனியாட்பேறு என்பது அத்தகையாருக்கு உரிய வருவாய் ஆகும்

தனியூர்: நிர்வாகத்திலே தனி உறுப்பாக விளங்கும் பெரிய ஊர்

தக்ஷிணபுஜம்: வலது கை; நம்பிக்கை வாய்ந்த அதிகாரி

தாக்கி: சாட்சியின் வேறுவடிவம்

தாங்கல்: பாசனத்துக்கு உபயோகமாகும் குளம்போன்ற நீர்நிலை

தாசரி: மக்களின் சமய ஒழுக்கத்தைக் கண்காணிப்போர்; வைஷ்ணவ சமயத்தைச் சார்ந்தவர்

தாடிப்படை: மதிலின் மேல்பகுதியில் உள்ள பாகம்

தாமம்: பூமாலை; தொங்கல் எனவும் பெறும்

தாரம்: பித்தளை; தரா என்பதன் வேறு வடிவம்

தாராதத்தம்: நீரைத் தாரை வார்த்துத் தானம் கொடுத்தது

தாரைத்தாள் வட்டில்: ஒருவகைப் பாத்திரம்

தாலம்: பண்டாரம், கஜானா

தாலச்செம்மைபொன்: கஜானாவினால் நிர்ணயிக்கப்பெற்ற மாற்றுடைய சுத்தமான தங்கம்

தாலிமணிவடம் : தாலியோடு மணிகள் சேர்ந்த மங்கிலியக்கொடி

தாழக் கூட்டுக் கம்பி : ஆபரண வகை

தாளிம்பம் : நெற்றியில் அணியும் ஓர் ஆபரணம்

தான இறையிலி : வரி நீக்கித் தானம் செய்யப்பெற்ற நிலம் அல்லது கிராமம்

தானத்தார் : கோயில் அதிகாரிகள் ; கோயிலில் பூசை செய்வோர்

தானம் : தேவஸ்தானத்தின் சுருக்கமான ஸ்தானம் ; கோயில்

தானமானம் : ஸ்தானத்தினுல் ஏற்படும் பெருமை

தானமானியம் : மானியமாக விட்ட நிலத்தின்மீது வசூலிக்கப்பெறும் வரி

தானிகர் : ஸ்தானீகர்; கோயிற்காரியங்களைக் கண்காணிப்பவர் ; பூசை செய்வோர்

தானிகராயர் : கோயில் ஸ்தானீகர் ; பூசை செய்வாருள் தலைவர்

தானியவர்க்கம் : தானியமாக இறுக்கப்பெறும் வரிவகைகள்

தானைத் திருப்பட்டிகை : விக்கிரகத்தின் அரையாடை (முன்தானை)யின் மேல் அணியும் ஆபரணம்

தானைத் தூக்கம் : திருப்பட்டிகை அணியின் உறுப்பினுள் ஒன்று

திங்கட் காசு : மாதம் தோறும் தண்டிவந்த ஒரு பழைய வரி ; திங்கட் சோறு, திங்கள் மோகம், திங்கள் நெய் என்று காணப்படுவனவும் இவ்விதமே யாகும் ; மாதப்படி என்பதையும் பார்க்க

திடர் : திட்டு

திணைக்களம் : இலாகா ; நிர்வாகத் துறை

தினாரம் : முன்னாளில் வழங்கிவந்த ஒரு வகைப் பொன் நாணயம் ; யவனர்கள் நாட்டிலிருந்து முதலில் வந்தது

திரங்கல் : முத்துக் குற்றவகை

திரமம் : முன்னாளில் வழங்கி வந்த ஒரு நாணயம் ; கிரேக்க நாட்டிலிருந்து முதலில் வந்தது

திரள் மணிவடம் : ஒருவகை மாலை

திராசம் : மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று

திரிகாலம் : காலை, உச்சி, மாலை என்ற மூன்று வேளை

திரிகை : குயவன் மண்பாண்டம் செய்யும் சக்கரம்

திரிகை ஆயம் : குயவர் திரிகையின் மீது இறுக்கும் வரி

திரிசூலக்கல்: சிவன் கோயில் நிலத்து எல்லையைக் குறிக்கத் திரிசூலம் பொறித்து இடும் எல்லைக் கல்

திரிசூலக் காசு: கோயிலுக்கு இறுக்கும் வரி; சூலவரி என்பதும் இதுவே

திரு: சோதிடம் கூறுவான்

திரு: மாங்கலியம்

திருக்கண்டவாணி: கழுத்து அணி வகை

திருக்கண்ணமடை: அரிசி, சர்க்கரை, வாழைப் பழங்களால் ஆக்கப் பட்ட இனிய உணவு; சர்க்கரைப் பொங்கல் வகை

திருக்கண்ணேக்கு: சுவாமியின் விக்கிரகத்தை மண்டபப் படிக்கு எடுத்துச் செல்லுதல்

திருக் கலச முடித்தல்: கும்பாபிஷேகம்

திருக்காவணக்கால்: உரிமைப் பத்திரம்; ஆதாவுச் சீட்டு; தோரண ஸ்தம்பம் எனவும் ஆகும்

திருக் குகை: துறவிகள் வாழும் இடம்; மடம்

திருக் கேட்டைக் கிழத்தி: மூதேவி; ஜ்யேஷ்டாதேவி

திருக்கைக் கோட்டி, திருக்கையோட்டி: கோயிலில் திருமுறை ஓதும் மண்டபம்; அங்கே திருமுறை ஓதுவார் திருக்கைக்கோட்டி யோது வார் எனப் பெறுவர்

திருக்கைவழக்கம்: கோயில் நித்தியப் படித்தரம்; பிரசாத வினியோக மும் ஆகும்

திருக்கோசகம்: கோயிலில் அம்மன் விக்கிரகத்துக்குச் சாத்தும் கொய் சகம் போன்ற அணிவகை

திருக்கோடுக்கு: ஆபரணவகை

திருக்கோள்கை: ஆபரணம்; விக்கிரகத்துக்கு இடும் கவசமும் ஆகும்

திருக் கொற்ற வாய்தல்: அரண்மனை

திருச்சந்தம்: அணிவகை

திருச்சரி: அணி வகை

திருச்சுற்றாலயம்: கோயில் பிரகாரத்தில் உள்ள நடைமண்டபம் அல்லது பரிவார தேவதைகளின் ஆலயத் தொகுதி

திருச்சுற்றாலை, திருச்சுற்று மண்டபம், திருச்சுற்று மாளிகை, திருச்சுற்று மாலை: கர்ப்ப கிருகத்தைச் சுற்றிப் பிராகாரமாக அமைந்துள்ள கட்டடம்

திருச்செந்நடை: கோயிலில் அமுதுபடித்தரம்

திருச் செந்நெல் நடை: கோயிலில் சிவப்பு அரிசி (சம்பா)ச்சாதம் நிவேதிக்கும் நடப்புச் செலவு

திருஞானப்புறம்: தேவாரம் முதலியவை ஓதுவதற்கு விட்ட நிலம்

திருஞானம் : கோயிலின் சந்நிதியில் ஓதும் தேவாரம் போன்ற பாடல்

திருஞானம் பெற்ற பிள்ளையார் : திருஞானசம்பந்த நாயனர்

திருத்து : காடு திருத்திச் சாகுபடிக்குக் கொணர்ந்த நிலம்

திருத்துதல் : மேற்பார்த்தல்

திருத்தோப்பு : கோயிலுக்கு உரிய நந்தவனம்; திருநந்தவனம் எனவும் பெறும்

திருநட்டக் கணப் பெருமக்கள் : கோயில் அதிகாரிகளுள் ஒரு சாரார்; கோயில் ஊழியம் புரியும் இசைவல்லார் குழுவின் சபையார்

திருநடைமாளிகை : கோயில் பிரகாரத்தைச் சுற்றியுள்ள மண்டபம்

திருநமனிகை : கோயிலில் மூர்த்திக்குச் செய்யும் அபிஷேகம்

திருநயனம் : கோயில் மூர்த்திக்கு அணிவிக்கும் கண்மலர்

திருநல்லியாண்டு : சுபகரமான ஆட்சி வருஷம்; திருநலியாண்டு எனவும் பெறும்

திருநக்ஷத்திரம் : பிறந்த நக்ஷத்திரம்; ஆண்டு

திருநாமக்காணி, திருநாமத்துக்காணி : சிவன் கோயிலுக்கான தேவஸ்தான நிலம்; கோயிலின் பெயரில் உள்ள நிலம்

திருநாள் தேவை : திருவிழாச் செலவு; திருநாள் காணிக்கை என்பதும் இதுவே போலும்

திருநாற்கட்டிற்கால் : மஞ்சம்; கட்டில்

திருநிறஞ்செய்தல் : கோயில் மூர்த்திக்குப் பொன்மூலாம் இடுதல்

திருநெற்றித்திரணை : கோயில் விக்கிரகத்தின் நெற்றியில் இடும் ஆபரணம்

திருப்பட்டம் : திருமுடி; கோயில் மூர்த்தியின் நெற்றியில் இடும் ஆபரணம்

திருபட்டிகை : விக்கிரகத்துக்கு அணியும் அரைப்பட்டிகை வகை

திருப்படிக்கரகம் : திருமஞ்சன நீர் வைக்கும் பாத்திரம்

திருப்பரிசட்டம் : விக்கிரகத்துக்குச் சாத்தும் ஆடை; பரிவட்டம்

திருப்படிமாற்று : கோயில் மூர்த்திகளுக்கு நிவேதிப்பதற்கான பொருளைத் தயாரிக்க வேண்டிய அரிசி முதலிய பண்டங்கள்

திருப்படிமாறுதல் : நிவேதனத்தைத் தயாரித்தல்

திருப்படைவீடு : கடவுள் கோயில் கொண்டுள்ள இடம்

திருப்பணி : கோயிற் கைங்கரியம்

திருப்பதியம் : திருப்பதிகம்

திருப்டள்ளிக் கட்டில் : சிங்காதனம்

திருப்பள்ளித் தாமம், திருப்பள்ளித் தொங்கல் : கோயில் மூர்த்திகளுக்குச் சாத்தப்படும் மாலை

திருப்பாவாடை: ஆடைமேல் கோயில் மூர்த்திக்குப் படைக்கும் நிவேதனம்; அவ்விதம் படைக்கும் ஆடையையும் குறிக்கும்; அரசன் முதலியோருக்கு மரியாதையாக அளிக்கும் எடுபிடி

திருப்பிறை: சிவபெருமான் விக்கிரகத்துக்குத் தலையில் சூட்டும் பிறை போன்ற ஆபரணம்

திருப்புகை: கோயிலில் இடும் தூபம்

திருப்புதியது, திருப்புதியிது: குடிமக்கள் முதல் விளைவைக் கோயிலுக்குக் கடமையாகச் செலுத்துவது

திருப்புறக்குடை: சுவாமிக்குப் பின்புறமாகப் பிடிக்கும் குடை

திருப்புறக்கோடை: பின்பக்கத்து முற்றம்

திருப்பூமண்டபம்: கோயிலில் மாலை தொடுக்கும் இடம்

திருப்போனகம்: சுவாமிக்கு நிவேதனம் செய்யும் அமுது

திருமஞ்சன சாலை: கோயிலில் விக்கிரகத்தை வைத்து அபிஷேகம் செய்யும் மண்டபம்

திருமடவளாகம்; திருமடை விளாகம்: கோயிலைச் சுற்றியுள்ள இடம்

திருமதில்: கோயிலின் சுற்று மதில்

திருமந்திரக்கோடி: கோயில் உற்சவகாலத்தில் உபயோகிக்கப் பெறும் கொடிச் சீலை

திருமந்திரம்: கோயில்

திருமந்திரபோனகம்: நிவேதனம்

திருமந்திர போனப்புறம்: கோயில் நைவேத்தியத்துக்காக விடப்பெற்ற நிலம் அல்லது கிராமம்; மடைப்பள்ளிப்புறம் என்பதும் இதுவே

திருமந்திரவோலை: அரசன் உத்தரவுகளை உரிய துறைகளுக்கு ஓலைமூலம் அனுப்பும் அதிகாரி; கடிதப் போக்குவரத்தைக் கவனிக்கும் அதிகாரி

திருமந்திரவோலை நாயகம்: அரசாங்கத்தின் ஓலையெழுதும் துறையின் தலைமை அதிகாரி

திருமலை: சிவன் கோயில் கர்ப்பகிருகம்; விமானம்

திருமாளிகைச் சுற்று: திருச்சுற்றுமாலை பார்க்க; திருநடைமாளிகை

திருமாளிகைப் பத்தி: கோயில் திருமதிலை ஒட்டி உட்புறமாக அமைந்துள்ள கட்டடங்கள்; மண்டபம்; சுற்றுக் கோயில்கள்

திருமாளிகைப்பிள்ளை: கோயில் காரியங்களை நிர்வகிப்பவன்

திருமாளிகைப் பிள்ளையார்: சண்டேசுவரர்

திருமுகக்காணம் : அரசன் முதலியோரிடமிருந்து வரும் திருமுகங்களைச் சுமந்து வருவோர்க்குக் கொடுக்கும் வரி

திருமுகத் தேவை : திருமுகக் காணம் பார்க்க

திருமுகம் : ஸ்ரீமுகம்; அரசன் முதலியோரிடமிருந்து வரும் செய்தி; அரசாணை

திருமெய்காப்பான், திருமெய்காப்பு : கோவில் மெய்காவல்; கோயில் காப்பான்

திருமெய்ப்பூச்சு : கோயில் மூர்த்திகளின் மேல் பூசும் வாசனைப்பூச்சு

திருமெழுக்கு : கோயிலை மெழுகுதல்

திருமேற்கட்டி : கோயில் மூர்த்தி எழுந்தருளியிருக்கும் இடத்தில் கட்டியிருக்கும் மேல்விதானம்

திருமேற்கோயில் : ஊருக்கு மேற்கே அமைந்துள்ள விஷ்ணு ஆலயம்

திருமேற்பூச்சு : திருமெய்ப்பூச்சு பார்க்க

திருமேனி : விக்கிரகம்

திருமேனிகாவல் : கோயில் காவல்

திருவக்கிரம் : நிவேதனம்

திருவட்டமணி, திருவட்டமணிவடம் : கழுத்தணி; மாலை வகை

திருவடி : முனிவர்; திருவாங்கூர் அரசன்

திருவடிக்காறை : காலணி வகை

திருவடிதேசம் : திருவாங்கூர்ச் சீமை; திருவடி ராஜ்யம் என்பதும் இதுவே

திருவடிநிலை : விக்கிரகபீடம்

திருவடிபிடித்தல் : கோயில் பூசை செய்தல்

திருவடிபிடிப்பான் : கோயில் அர்ச்சகர்

திருவடிமார் : மலை நாட்டிலே அரசர், பிராமண அதிகாரிகள், மடத்தலைவர், கோயில் அர்ச்சகர் முதலியோருக்கு வழங்கிய சிறப்புப் பெயர்

திருவணுக்க வாசல் : கர்ப்பகிருகத்தின் வாசல்

திருவமுது : நிவேதன உணவு

திருவரங்கிருந்த பெண்டுகள் : கோயிலில் நடனம் ஆடும் தேவாடியார்

திருவரங்கு : கோயிலில் உள்ள பிரதான மண்டபம்; •ரங்க மண்டபம்

திருவாண்டெழுத்திடுதல் : அரசன் முடிசூடிய காலம் தொட்டு வருஷக் கணக்கிட்டுச் சாசனங்களில் எழுதுதல்

திருவாணை : அரசன் ஆணை

திருவாய்க்கேள்வி : அரசன் வாய்மொழியாக இடும் உத்தரவுகளைக் கேட்டு உரியவர்களுக்கு எழுத்துமூலம் அனுப்பும் அதிகாரி; அரசன் ஆணையையும் குறிக்கும்

திருவாய்ப்பாடி : கிருஷ்ணன் கோயில்; கோகுலம் எனவும் காணப் பெறும்

திருவாராதனை : திருவாராதனம்; கடவுள் பூசை

திருவாழிக்கல் : விஷ்ணுகோயில் நிலங்களின் எல்லையைக் குறிக்க நடும் சக்கர முத்திரை கொண்ட கல்

திருவானிலை : கருவூர்ச் சிவலாயம்

திருவிடையாட்டம் : விஷ்ணுகோயில்களுக்கு அளிக்கப்பெற்ற தேவ தான நிலம் அல்லது கிராமம்; விஷ்ணுகோயில் ஸ்ரீகாரியம்

திருவிடு : தானசாசனம்

திருவிடைப்பற்று : திருவிடையாட்டம் பார்க்க

திருவிருப்பு : கோயில் அமைந்துள்ள இடம்; கோயில் கட்டடம்

திருவிரையாக்கலி : சிவபெருமான் பெயரால் இடும் ஆணை

திருவிழாப்புறம் : கோயில் உற்சவங்களுக்காக விடப்பெற்ற நிலம்

திருவிளக்குடையார் : கோயிலில் விளக்கு ஏற்றுவோர்

திருவிளக்குக்குடி : கோயிலில் விளக்கு எரிக்கும் கடமை ஏற்று அதற் கான மானிய நிலத்தை அனுபவிக்கும் குடிமக்கள்

திருவீதி நாயகர் : உற்சவ மூர்த்தி

திருவீதிப்பந்தம் : சுவாமி புறப்பட்டு வீதிவலம் வரும்போது பிடிக் கும் தீவட்டி

திருவுடம்பு : திருமேனி; விக்கிரகம்

திருவுண்ணாழி, திருவுண்ணாழிகை, திருவண்ணாழிகை : கர்ப்பகிருகம்; உண்ணாழிகை பார்க்க

திருவுலகளத்தல் : நிலத்தை அளந்து கணக்கிடுதல்

திருவுழுத்து : அணி வகை

திருவெழுத்துச்சாத்துதல் : கையெழுத்து இடுதல்

திரைக்காசு : முன்னாளில் வழங்கிவந்த வரிவகை

தியதி : தேதி; நாள்

திறம் : எண்பது ஆடு, எண்பது பசு, எண்பது எருமை கொண்ட மந்தை

தீட்டு : கையெழுத்திட்ட சீட்டு; எழுதிக்கொடுத்த ஓலை

தீட்டுக்குறி : எழுதிக்கொடுத்த ஓலைச்சீட்டு

தீண்டல் : வயல்

தீண்டாச்சேரி : தொடக்கூடாத சாதி மக்கள் வாழும் இடம்

தீப்போக்குச்செம்பொன் : புடமிடப்பெற்ற சுத்தமான தங்கம்

தீபமாலை : சரவிளக்கு

தீயெறிசோறு : ஹவிர்பலி; கோயிலில் அக்கினி வளர்த்து, அன்னத்தை ஓமம் செய்து இடும்பலி; அதற்காக வசூலிக்கும் வரி

தீர்க்கமானியம் : கோயில் மூர்த்தியை நீராட்டுவதற்காக அளித்த மானியம்; நீண்டகாலம் நிலைநிற்க வேண்டிய மானியம் என்றும் கொள்வது

தீவுகரிவு : பயிர் முதலியன தீய்ந்து போய்க் கேடுறுதல்

துக்கை : துர்க்கை

துஞ்சிய : உயிர் துறந்த

துடவு : ஒரு முகத்தல் அளவு

துடவை : விளைநிலம்; வயல்

துண்டகவிஷயம் : தண்டகாரணியம்; தொண்டை மண்டலம்

துர்வாயகம் : வசவு; இழிசொல்

துரவு : பாசனத்துக்கு உதவும் பெரிய கிணறு

துரு : வேதம் முதலியவற்றைத் திருப்பிக்கூறும் சந்தை வகை

துரைமின்னற்போன் : ஒரு நாணய வகை

துல்லியம் : சரியானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டது; சரியான பிரதி

துலாக்கூலி : நிறுத்து எடைபோடுவதற்கான வரி; துலாபார வரியும் ஆகும்

துலாபாரம் : அரசர் போன்றவர் தராசில் ஒரு தட்டில் ஏறி நின்று மறு தட்டில் அவர் எடைக்குச் சமமான பொன்னையும் மணியையும் இட்டு நிறுத்து, அந்தப் பொன்னையும் மணியையும் தர்மத்துக்கு வழங்கல்

துலாபாரவரி : அரசர் துலாபாரம் ஏறுவதற்காக இறுக்கும் வரி

துளைநிறை, துளைநிறை செம்பொன், துளைநிறை பொன் : சுத்தமான பொன்

தூக்கம் : நிறை; நிறுத்தல்

தூக்கம் : தொங்கலைக்கொண்டு முன்னுளில் வழங்கிவந்த ஓர் ஆபரணம்

தூக்குத்தலரிசி : நன்றாகக் குத்திச் சுத்தம் செய்த அரிசி

தூசிப்படை : கொடிப்படை; போர்ப்படையில் முன்னதாகச்செல்வது; தூசுப்படை எனவும் பெறும்

தூசகத்தறி : பாசறைக்கு வேண்டிய கூடாரத் துணி முதலியவற்றை நெய்யும் தறி; அதற்கான வரி

தூபி : ஸ்தூபி; கோயில் விமானத்தின் உச்சி

தூம்பு : மதகு; வாய்க்கால்; நீரோடும் கணவாய்

தூம்பு : ஒரு முகத்தல் அளவு

தேண்டகுற்றம், தேண்டந்தீர்வை : அபராதமாக விதிக்கும் வரி

தேற்றி : மேட்டிடம்

தேற்றியம்பலம் : கிராமசபை கூடும் மேட்டிடம்

தேன்னம்பழம் : தேங்காய் நெற்று

தேசகாலம் : வேளை; பொழுது

தேசவாளி : கிராமம் முதலியவற்றை, தேசத்தை ஆளும் அதிகாரி

தேவகர்மி, தேவகன்மி, தேவர்கன்மி : கோயிலில் சுவாமி காரியம் பார்ப்போர்

தேவகுடிமை : கோயிலின் ஆதிக்கியத்தில் வாழும் குடி

தேவகுலம் : கோயில்

தேவதானம் : கோயிலுக்கு விடப்பட்ட இறையிலி நிலம்

தேவடிமை : தேவரடியார், வேலைக்காரி

தேவரடியார் : மாகேசுவர சைவர்

தேவரடியார் : கோயிலில் பணிபுரியும் பெண்டிர்

தேவாரதேவர் : ஆன்மார்த்த பூசைக்கு உரிய மூர்த்தி

தேவாரம் : கோயில்

தேவை : காரியம்;

தேன்பயில் போதும்பு : தேன் கூடுகட்டியிருக்கும் மரப் பொந்து

தேஜமானியம் : அஷ்டபோகம் உள்ளிட்ட நிலத்தின் பூர்ண உரிமை; தேஜஸ்வாமியம் எனவும் பெறும்

தைஞ்சை : தஞ்சை; தஞ்சாவூர்

தைப்புமுத்து : முத்து வகை

தைவியம் : தெய்வச்செயல்

தோக்கைக்குன்றி : சாகுபடி நஷ்டம்

தோடையல் : தோளில் அணியும் பூமாலை

தோண்டர்சீர் பரவுவார் : திருத்தொண்டத் தொகையின் ஆசிரியரான சுந்தரமூர்த்தி சுவாமிகள்; பெரிய புராண ஆசிரியரான சேக்கிழார்

தோண்டு : அடிமைத்தனம்

தோழிற்பட்டிகை : மகளிர் அரையில் அணியும் பட்டிகை என்னும் ஆபரண வகை, கடைசல் தொழில் கொண்டது

தோறு : அடிமையாள்

தோறு : பசுக்கூட்டம்

தோறுநிலை : பசுக்கள் கட்டும் கொட்டம்

தோட்டக்கூறு: தோட்டத்துக்குத் தகுதியான நிலம்

தோட்டப்புரவு: தோட்டக்கால் நிலத்தின்மீது இறுக்கும் வரி

தோட்டவாரியப் பெருமக்கள்: தோட்டங்களைக் கண்காணிக்கும் சபையினர்

தோணிக்கடமை: தோணிக்கு வாங்கும் வரி

தோரணக்கால்: திருவாசிக்கால்

தோரை: நான்கு விரல் உள்ள நீட்டல் அளவு

தோரணகாணிக்கை: வீதிகளில் தோரணமிட்டு அலங்கரிப்பதற்கான செலவு

தோலோட்டு: முன்னாள் வரிகை; உலர்ந்த தோல் பற்றியது போலும்

தோளாச்செவியர்: தோளில் இடிக்கும்படியாக வடிந்த காதையுடைய ஒருவகை மக்கள்; லம்பகர்ணர் என்பார் இவரே போலும்

நக்கன்: சிவன் கோயிலில் நாட்டியம் ஆடும் தேவரடியார் (நக்னமாக நடனம் செய்ய வேண்டியவள்)

நகரக்கல்: வியாபாரிகளின் சபையார் வைத்திருக்கும் எடைக்குச் சரியான எடைக்கல்

நகரங்களிலார்: வியாபாரிகளின் சபையைச் சேர்ந்தவர்கள்

நகரசுவாமி: வியாபாரிகள் தலைவன்; அவர்களுடைய சபைக்குத் தலைமைப் பதவி வகிப்பவன்

நகரத்தார்: வியாபாரிகள்; அவர்களுடைய சபையைச் சேர்ந்த நிர்வாகிகள்

நகரம்: வியாபாரிகளின் சபை

நகரவனுச்சை: நகரத்தாருடைய உத்தரவு

நங்கனை: ஒட்டியாணம் போன்ற ஆபரணத்தின் ஓர் உறுப்பு

நட்டவக்காணி: நட்டுவக்காணி பார்க்க

நட்டவம்: நட்டுவம் என்பதன் வேறு வடிவம்; மாணவர்களுக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்து அவர்கள் நடனமாடுவதை மேற்பார்த்தல்

நட்டுப் பாழ்: நாற்று நட்டபிறகு பயிர் பாழான நிலம்

நட்டுவக்காணி: கோயிலில் நட்டுவம் பார்ப்போருக்கு அளிக்கப்பெற்ற இறையிலி நிலம்

நட்டுவத் துரவு: நட்டுவத் தொழில்

நடவல்: பிடுங்கி நடப்பெற்ற நாற்று

நடை: கோயில்; கோயிலில் நடக்கும் தினசரி பூசை

நடைமாளிகை: கோயிற் பிராகாரம்; திருச்சுற்றாலை

நடைமாளிகை மண்டபம்: கோயிலிலே கர்ப்ப கிருகத்தைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள கட்டடம்

நத்தம் : கிராமத்தில் குடியிருப்புக்கான இடம்

நத்தப் பாழ் : மக்கள் குடியிருப்பு இல்லாத கிராமம்; குடியிருப்புப் பாழ் அடைந்த கிராமம்

நந்தாவிளக்கு : இடையறாமல் எப்போதும் எரியும் விளக்கு; நுந்தா விளக்கு, நொந்தா விளக்கு எனவும் பெறும்

நந்துதல் : பழுதடைதல்; அழிந்து போதல்; குறைவடைதல்

நம்பி : கோயில் பூசை செய்பவர்

நம்பிராட்டியார் : அரசன் தேவி

நம்பு : கோயிலில் பூசை செய்யும் தொழில்; ஆகவே நம்புசெய்வார் : கோயில் பூசை செய்பவர்

நமன மண்டபம், நபன மண்டபம் : (ஸ்நபன மண்டபம்) கோயிலில் அபிஷேக மண்டபம்; திருமஞ்சன சாலை

நயினார் : நாயனார்; பெரியோர்; மரியாதை தெரிவிக்கும் ஒரு சொல்

நரபதி : [மானிடர் தலைவன்] சோழ மன்னர்களும், விஜயநகர அரசர்களும் தரித்திருந்த விருது; அவர்களுடைய காலாட்படையின் பெருக்கத்தைக் குறிப்பதாக ஏற்பட்டது போலும் (அசுவபதி, கஜபதி என்பன போன்ற விருதுகளை ஒப்பு நோக்குக)

நரவாகன சக்கரவர்த்தி : விஜயநகர மன்னர்களின் விருதுகளுள் ஒன்று; நரபதி என்பதை ஒட்டி எழுந்தது போலும் (நரவாகனன் என்பான் உதயண குமாரனை ஒரு காவிய புருஷனும் ஆவான்)

நல்கிடா, நற்கிடா : கிராமத்திலே காட்சியாக வைக்கப்பட்டுள்ள கிடாவின் பராமரிப்புச் செலவுக்கான வரி

நல்பசு, நற்பசு : கிராமத்தில் காட்சியாக வைக்கப்பெற்றுள்ள பசுவின் பராமரிப்புக்கான வரி; நல்லாவு, நல்லா எனவும் பெறும்

நல்லெருது : கிராமத்தில் காட்சிக்காக வைத்திருந்த எருது; பொலி எருதாகவும் பயன்பட்டது போலும்; அதன் பராமரிப்புக்கான செலவு : அழகெருதுக் காசு, காட்சி எருதுக் காசு என்பனவும் இதுவே

நல்லெருமை : கிராமத்திலே காட்சியாக வைத்திருந்த எருமையின் பராமரிப்புச் செலவுக்கான வரி

நவகருமம் : ஜீர்ணோத்தாரணம்; புதுப்பித்தல்

நவரை, நவிரை : ஒருவகை நெல், ஆடிமாதத்தில் அறுவடையாவது போலும்; ஆடிநவிரை என்று காணப்படுவது

நாகு : பசு முதலியவற்றின் கிடாரிக்கன்று

நாட்டாமை, நாட்டாண்மை : தலைமைப் பதவி; நாட்டின் நிர்வாகத் தலைமை

நாட்டுக் கணக்கு வரி: நாடு என்னும் பகுதியின் தீர்வைக் கணக்குகளை எழுதுவதற்கான செலவுக்கு இறுக்கும் வரி; நாடு என்னும் பகுதிக் கெனக் கொள்ளாமல் இராஜ்யம் முழுவதுக்குமே கொள்வதும் உண்டு

நாட்டுக் காணிக்கை: நாடு என்னும் சபையாருக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை; அந்தச் சபையார் அரசாங்கத்தாருக்குச் செலுத்தும் காணிக்கையும் ஆகும்

நாட்டிருவமுது: (நாள் திருவமுது) கோயிலில் காலையில் நடக்கும் பூஜை நைவேத்தியம்

நாட்டு நீங்கல்: அரசாங்கத்தின் வரிப் புத்தகத்திலிருந்து நீக்கி நாடு என்னும் பிரிவுக்கான சபையாரின் வரிப் புத்தகத்துக்கு மாற்றப் பட்டது; அதனால் அந்த வரியை நாட்டுச் சபையார் உபயோகித்துக் கொள்ளலாம்

நாட்டுப் பண்டாரம்: ஜில்லா கஜானா

நாட்டுபாதி: (நாடு உபாதி) நாடு என்னும் பகுதிக்கு அமைந்த சபைக் குச் செலுத்தவேண்டிய கடமைகள்

நாட்டு வினியோகம்: நாடு என்னும் பிரிவின் சபையார் செலவுக்காக அந்தப் பகுதியில் வாழ்வோர் விகிதாசாரப்படி இறுக்கவேண்டிய தொகை

நாடன் மஞ்சள்: மஞ்சளில் ஒருவகை; சமையலுக்கு உபயோகப் படும் கறிமஞ்சள்

நாடாட்சி: நாட்டின் நிர்வாகம்

நாடு: இறந்தவர் பொருட்டு கல் நடுவது

நாடு: நாட்டின் ஒருபாகம், கோட்டம் கூற்றம் போன்றது; அதன் நிர்வாகத்தைக் கவனிப்பதற்காக அமைந்த சபையையும் குறிக்கும்

நாடு கண்காட்சி: நாடு என்னும் பிரிவின் நிர்வாகத்தைக் கண் காணித்தல்

நாடு காவல்: கிராமக் காவலினின்றும் வேறானதாக நாடு என்னும் பிரிவின் காவலை மேற்கொள்வது; அதற்கான வரியையும் குறிக்கும்

நாடுகூறு: நாட்டின் விளைநிலங்களைத் தரம் பிரித்து நிர்ணயிக்கும் அதிகாரி

நாடு தலையாரிக்கம்: நாடு காவல் என்பதே; நாடு என்னும் பிரிவின் காவலைச் செய்வதற்கான வரி

நாடுவகை: நாட்டை அளந்து வரி விதிப்பதற்காக அதில் உள்ள பயிரிடும் நிலங்களின் தரத்தை நிர்ணயித்தல்

நாடு வாரியம்: நாடு என்னும் பிரிவின் நிர்வாகத்தைக் கவனிக்க அமைக்கப்பெற்ற சபைக் குழு; நாட்டுவாரியம் எனவும் பெறும்

நாமடந்தை, நாமகள் : சரஸ்வதி தேவி

நாயகத்தனம்: நாட்டின் தலைமை நிர்வாகப் பதவி; அமரநாயகம் என்னும் பதவி; அமரம் என்பதும் இதுவே

நாராச நாழி: முன்னாளில் கோயிலில் வழங்கிவந்த அளவு நாழி; இரும்பால் செய்யப்பட்டது போலும்; நாராய நாழி எனவும் பெறும்

நாவிசம்: நாவிதத் தொழில்; ஆகவே நாவிசன் : நாவிதன்

நாளதினலே : அந்த நாளிலே

நாற்காலி: நான்கு கால்களைக் கொண்ட ஆசனம்

நானுதேசி : வியாபாரிகளின் பெரிய சங்கம்; அய்யாவழியைத் தலைமையிடமாகக் கொண்டு தென்னாடு முழுவதுமட்டு மல்லாமல் கடல் கடந்த பிரதேசங்களிலும் வாணிகம் செய்துவந்த கூட்டத்தார்

நிசதம், நிசதி : நாள்தோறும்

நிசீதிகை : சமண மதத்தார் பட்டினி நோன்பு பூண்டு உயிர் துறத்தல்; அத்தகையோருக்கு எழுப்பிய ஞாபகச் சின்னத்தையும் குறிக்கும்

நித்தநிமந்தம், நித்தநிவந்தம் : கோயிலில் நாள்தோறும் பூசை நடத்துவதற்கான திட்டம்

நித்தியல் : நாள்தோறும்

நிதி : அஷ்டபோகத்தில் ஒன்று; நிலத்தின் செல்வத்தை அநுபவிக்கும் உரிமை

நிமந்தக்காரர் : கோயில் ஊழியர்கள் ; உபயகாரரும் ஆவர்

நிமந்தப்புறம்; கோயிலில் குறிப்பிட்ட கட்டளையை நடத்துவதற்காக விட்ட நிலம் அல்லது கிராமம்

நிமந்தம், நிபந்தம், நிவந்தம் : கோயில் நிர்வாகத்திற்கான திட்டம்

நியதி : நிசதி என்பதன் வேறு வடிவம்; நாள்தோறும் ; சிற்சில சமயங்களில் எப்போதும் எனவும் பொருள்படும்

நியாயங்களிலார் : நியாய சபை உறுப்பினர்

நியாயத்தார் : நியாய சபையார்

நியாயத்தார் : நியாயம் வழங்கும் சபையார்

நியாயம் : ஒரே வகையான தொழிலை மேற்கொண்டவர்களுடைய சபை

நியோகம் : அரசன் உத்தரவு ; அதனைத் தாங்கிச்செல்லும் அதிகாரி

நிர்த்தமாராயன் : நடனத்தில் வல்லவனுக்கு முன்னுளில் அரசன் அளித்த பட்டம்

நிர்வாக சபை : காரியத்தை நடத்தும் குழுவினர்

நிருத்திய போகம் : கோயிலில் நடனமாடுவோருக்கு விட்ட மானிய நிலம்

நிருபச்சம்மாதம் : ஓலேச்சம்படம் பார்க்க

நிருபம் : ஓலே; அரசன் அல்லது அவன் அதிகாரியிடமிருந்து எழுத்து மூலம் வந்த உத்தரவு

நிலக்கூலி : சந்தையில் விற்பனைக்கு வரும் சரக்குகளுக்கு ஒவ்வொரு பொதிக்கும் வசூலிக்கும் அரிசி

நிலச்சீவிதம் : ஊழியர்களுக்குச் சம்பளத்துக்குப் பதிலாக ஜீவிதமாக அநுபோகத்துக்கு நிலம் அளித்தல்

நிலம் அளாவுபடிப் பெருமக்கள் : நிலம் அளவு செய்யும் (ஸர்வே செய்யும்) அதிகாரிகள்

நிலமகள், நிலமடந்தை, நிலமங்கை நாச்சியார் : பூமிதேவி

நிலமடக்குதல் : பயிரிடும் நிலத்தைத் தரவாரியாகப் பிரித்தல்

நிலமுதல் : பயிரிடும் நிலத்தைப் பற்றிய விவரம் அடங்கிய கணக்கு

நிலே : தூண் ; விளக்கின் தண்டு ; தீபக்கால்

நிலேக்களம் : வரி வசூல் செய்யும் கச்சேரி

நிலேப்படை : நிரந்தரமான, ஸ்திரமான சைனியம்

நிலேப்பந்தம் : தெருக்கோடி போன்ற குறிப்பிட்ட இடங்களில் இரவு நேரத்தில் வெளிச்சம் கொடுப்பதற்கென நிரந்தரமாக அமைக்கப் பட்ட பந்தம்

நிலேப்பொலியூட்டு : நிரந்தரமாகக் கிடைக்கும் வட்டி; நிலத்தின் மீது கடன் கொடுத்தோ ஆற்றுக்கால் தோண்டுவது போன்ற வேறு வேலே களில் செலவிட்டோ ஆண்டுதோறும் நிலேயான வருவாய் கிடைக்குமாறு முதலே உபயோகித்தல்

நிலேமைத்தீட்டு : அரசர்கள் செய்துகொள்ளும் ராஜீய உடன்படிக்கை

நிலேயாணி : ஆபரணத்தின் ஆணி ; ஓடாணியினின்றும் வேறுனது

நிலேயாள் : நிரந்தரமான சேவலேக்காரன்

நிலேயிறை : ஒரே விதமான மாருத வரி

நிவந்தம் : கோயில் ஊழியர்களில் அவர் அவர்க்கு உரிய பணி; கோயில் தினசரி செலவுத் திட்டமும் ஆகும்

நிறைச்சளாவு : குறைவில்லாமல் சரியாக நிறைந்த அளவு

நிறையெடுத்தல் : நிறுத்தல்

நின்றயம் : நிர்ணயம் என்பதன் வேறு வடிவம்
நின்ரு நாழி : நிர்ணய நாழி ; முத்திரை நாழி
நினைப்பு : ஞாபகக் குறிப்பு
நிக்ஷேபம் : அஷ்டபோகத்துள் ஒன்று ; புதையலை எடுத்து அனுபவிக்கும் உரிமை

நீங்கல் : பொதுவாக இறை நீக்குவதைக் குறிக்கும் ; எனினும் இது அரசாங்க வரிப்புத்தகத்திலிருந்து நீக்கப்பெறினும், நாடு போன்ற இதர ஸ்தாபனங்களின் வரிப் புத்தகத்துக்கு மாற்றப்பட்டதாகும் ; அவ்விதம் மாற்றல் பெற்ற ஸ்தாபனங்களின் செலவுக்குப் போவது
நீர்க்காணம் : பாசன நீருக்கான வரி ; நீர்விலை என்பதும் அதுவே போலும்
நீர்க்கோவை : நீர்க்கோப்பு ; ஏரிநீர்க்கோப்பு பார்க்க
நீர்தெளித்தல் : கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தல்
நீர் நிலம் : கொல்லை நிலத்தினின்றும் வேருனது ; நன்செய்ப் பயிர் செய்யும் நிலம்
நீர்நி(ை)லக்காசு : ஏரி குளம் போன்றவற்றின் பராமரிப்புக்கான வரி
நீராணிக்கம் : கிராமத்தில் பாசனத்துக்கு நீரை முறையாக விடும் பொறுப்பு ; அதை மேற்பார்வையிடும் அதிகாரி
நீராணிக்கவரி : நீராணிக்கத்துக்காக இறுக்கும் வரி ; நீராணி வரி எனவும் பெறும்
நீராவியார் : நானாதேசி என்னும் வியாபாரிகளில் ஒரு குழுவினர் ; ராஜராஜப்பெருநீராவியார் என்பது போன்ற பெயருடன் விளங்கியவர் ; கடல்கடந்து வியாபாரம் செய்தவர் போலும்
நீர்விலை : தண்ணீர் வரி

நூலாயம் : துணி நெய்வதற்கான நூல் மீது இறுக்கும் வரி
நூலேற்றம் : கோயிலில் நடக்கும் துவஜாரோஹணம்

நெட்டாள் : வெட்டி என்பதனோடு தொடர்பு கொண்டது ; கிராமப் பொது வேலைக்கு அது முடியும் வரையில் வறையறையில்லாமல் ஆள் அனுப்பி முடிக்கவேண்டிய கடமை ; அந்த ஆளுக்கான செலவும் ஆகும்
நெய் : நெய் வியாபாரிகள் இறுக்கும் வரி ; நெய்விலை என்பதும் இதுவே ; எண்ணெய் என்பதையும் பார்க்க
நெய்தாங்கி : தீபஸ்தம்பம்

நேய்யாடுதல் : கோயிலில் உள்ள விக்கிரகத்துக்கு நெய்க்காப்பு இடுதல்

நெல்முதல் : வரிக்காக இறுக்கப்பெறும் நெல்; அதன் விவரம் அடங்கிய கணக்கு; இன்னும் வட்டி பெறுவதற்கு நெல்லாக விடப் பெற்ற முதலையும் குறிக்கும்

நெல்லாயம் : நெல்லாகவே இறுக்கும் வரிவகை; நெற்கடமை எனவும் பெறும்

நெல்லிக்காய் முத்து : ஒருவகை மாலை

நெல்லூர் மாடை : முன்னாளில் நெல்லூரிலிருந்து வழங்கப்பெற்ற ஒரு நாணயம்; நெல்லூர்ப் புதுமாடை என்றும் காணப்பெறும்; கண்ட கோபாலன் மாடை என்பதும் இதுவேயாகும்

நெற்கூறுசாலை : நெல் குத்தும் இடம்

நெற்பொலிசை : நெல்லாக இறுக்கும் வட்டி

நொந்தா விளக்கு : நந்தா விளக்கு பார்க்க

நோக்கிமாடை : முன்னாளில் வழங்கிவந்த நாணயம்

நோக்குதல் : கண்காணித்தல்; மேற்பார்வை

நாயகவாடி : அரசாங்கத்தாராலோ, நிலத்தின் சொந்தக்காரராலோ அறுவடைக்குச் சிறிது முன்னதாகப் பயிரைக் காக்க அனுப்பப் பெறும் காவல்காரன்; அவனுக்குச் சம்பளமாக விடப்பெறும் நிலம் காக்குநாயக விளாகம் எனப்பெறும்

நடுவிருக்கை : அரசாங்கத்துக்கும் குடி மக்களுக்கும் நடுவில் இருந்து உதவிசெய்யும் அதிகாரிகள்; பொதுநலத்தொடர்பு அதிகாரிகள்; மத்தியஸ்தரும் ஆகும்

பக்க வாத்தியர் : வாய்ப்பாட்டுக்குத் துணையாக நிற்கும் இசைக்கருவியாளர்

பக்கிணம் : பக்ஷணம்; பணியாரம்

பக்கிழம் : பக்ஷம்; பட்சம்

பக்தாதாயம் : நெல்லாக இறுக்கும் தீர்வை; நெல் வருவாய்

பகலிருக்கை : நாளோலக்க மண்டபம்; அரசன் சபா மண்டபம்

பகுற்றுதல் : சமமாகப் பங்கிடுதல்; சரியாகப் பிரித்தல்

பங்களாப்படை : பதர்போன்ற கூட்டுப்படை, புதிதாக நிறுவியது

பச்சை : இனாம்; காணிக்கை; நன்கொடை; சாமான்களாகக் கொடுக்கப்பெறுவது

பச்சைப் பணம் : சாமான்களாகக் கொடுக்கும் பச்சையைப் பணமாக அளிப்பது; பச்சைப் பாட்டம் என்பதும் இதுவே

பசலை மரம் : பயன் தரும் மரம்

பசான், பசானம் : சித்திரை மாசம் அறுவடையாகும் நெல்; இவ்வகை நெல்லின் அறுவடைக் காலம்

பசித்து வாழ்தல் : ஏழையாக வாழ்க்கை நடத்தல்

பசுங்கூட்டு : சுண்ணாம்புச் சாந்து

பஞ்சக்கம் : ஐவர் கூடிச்செய்த முடிவு

பஞ்சகம்மாளர் : தட்டார், கன்னர், சிற்பி, தச்சர், கொல்லர் என்ற ஐவகைக் கம்மாளர்

பஞ்சகவ்வியம் : ஆனஞ்சு பார்க்க

பஞ்சபத்திரம் : சுவாமிக்குப் படைக்கும் நைவேத்திய வகை; பஞ்ச பக்ஷியம் என்பதே போலும்

பஞ்சமாசத்தம், பஞ்சமஹாசப்தம் : சிற்றரசர் போன்றவர்களுக்கு உரிமையுள்ள ஐவகைப் பறை. [செண்டை, திமிலை, சேகண்டி, கைத் தாளம், காளம் என்னும் ஐவகையாகக் கொள்வர். தத்தளி, மத் தளி, கரடிகை, தாளம், காஹளம் என்னும் ஐவகை என்பர் மற்றொரு சாரார்]

பஞ்ச திரவியம் : கோயிலில் அபிஷேகத்துக்கான ஐந்து பொருள்கள்

பஞ்சரம் : விமானத்தின் சுவரில் காணும் மாடம்; கூடு எனவும் பெறும்

பஞ்சரத் திருவிளக்கு : கோயிலில் ஏற்றும் விளக்கு வகை; பஞ்சரம் அல்லது கூடுபோல் அமைந்துள்ள சரவிளக்கு

பஞ்சவமுது : பஞ்சாமிர்தம்

பஞ்சவர் : பாண்டியர்

பஞ்சவாரம் : பஞ்சவாரவாரியம் எனவும் ஆகும்

பஞ்சவாரம் : அரசாங்கத்துக்குச் சேரவேண்டியதான, விளைவிலே ஐந் தில் ஒரு பங்கு எனவும் கொள்வர்

பஞ்சவாரவாரியம் : கிராம காரியத்தைக் கவனிக்கச் சபையால் நியமிக் கப்பெறும் ஐந்து குழு

பஞ்சவார வூரிடு வரி : கிராமச் சபையின் நிர்வாகக் குழுவான பஞ்ச வாரவாரியத்தாரால் விதிக்கப்பெற்ற கிராம வரி

பஞ்சாசாரியர் : சிவன் கோயிலில் பூசை செய்வோர்

பஞ்சாமிர்தம் : வாழைப்பழம், திராக்ஷை, சர்க்கரை, தேன், நெய் ஆகிய ஐந்தும் சேர்ந்த அபிஷேகப் பண்டம்

பஞ்சால அச்சு : முன்னாளில் வழங்கிய நாணயம்; பஞ்சாலத்தார் அடித்து வழங்கியது போலும் பஞ்ச சலாகை அச்சு என்று காணப் பெறுவதும் இதுவே

பஞ்சாளர், பஞ்சலத்தார், பஞ்சாளத்தார் : பஞ்ச கம்மாளர்

பஞ்சுப்பீலி: பஞ்சின்மீது இறுக்கும் வரி; பஞ்சுபிலி எனவும் பெறும்

பட்டசாலியன்: நெய்வோருள் ஒரு பிரிவினர்; பட்டு நெய்வோர் போலும்

பட்டடைவரி: நெல் பட்டடைக்காக, நெல் அடிக்கும் களத்துக்காக இறுக்கும் வரி

பட்டணஸ்வாமி: நானாதேசி எனப்படும் வியாபாரக் குழுவின் நகரத் தலைவன்; அவனுக்கு வழங்கிய பட்டப் பெயர்

பட்டப்பாழ்: சாகுபடியில்லாத நிலம்

பட்டம்: நெற்றியில் அணியும் பொன் தகடு

பட்டமார்: கோயில் பூசை செய்வோர்

பட்டயகாணிக்கை: தாமிர சாசனம் பெறுவதற்கு இறுக்கும் காணிக்கை

பட்டயம்: தாமிர சாசனம்

பட்டவிருத்தி: கல்வி வல்ல பிராமணர்க்கு இறையிலியாக விடப்பெற்ற நிலம்; பட்டவிருத்தி மானியம் எனவும் பெறும்

பட்டாடை ஆயம்: பட்டுத்துணியின்மீது இறுக்கும் வரி

பட்டாடை நூலாயம்: பட்டு நூலின்மீது இறுக்கும் வரி

பட்டாரகர்: கடவுள்; ஞான குரு

பட்டாரிகை: துர்க்கை

பட்டாவளப்பட்டு: பட்டுவகை

பட்டாவளி: பட்டம்பெற்ற குருமாரின் தலைமுறை வரிசை

பட்டிக்காடி: ஒரு பட்டி நிலத்துக்கு ஒரு காடி வீதம் இறுக்க வேண்டியது போலும்; பட்டிக்கால், பட்டிப்பொன் என்பனவும் இவ்விதமே ஆகும்போலும்

பட்டிகை: மேகலை

பட்டிகைக்காணம்: ஒரு பட்டிகைக்கு ஒரு காணம் வீதம் இறுப்பதாகலாம்; பட்டயக் காணிக்கை என்பதாகவும் கொள்ளலாம்

பட்டித்தண்டம்: கிராமத்தார் இறுக்கவேண்டிய தண்டப்பணம் போலும்

பட்டிறைப்படுதல்: வரிபோன்றவை செலுத்தப்படாமல் பாக்கி விழுதல்

பட்டோலைக் காசு: திருமுகக் காசு பார்க்க

படகம்: ஒரு நில அளவு

படங்கழி: முன்னாளில் வழங்கிய வரிவகை; எதைக் குறிப்பதென்பது தெரியவில்லை

படப்பு : வீட்டின் புழைக்கடை ; வீட்டின் பக்கத்துள்ள இடம் (மனையும் மனைப் படப்பும்)

படர் : சொந்தச் சேவகன் ; போர் வீரன்

படலிகை : ஓர் அளவு

படாகை : உட்கிடை கிராமம்

படிக்கம் : அபிஷேக நீர் முதலியவற்றை ஏந்தும் பாத்திரம்

படித்தரம், படித்தனம் : கோயிலின் தினசரி செலவுக் கட்டளை

படிவிஞ்சனம் : கோயில் நித்தியப் படித்தரத்தில் வியஞ்சனப்பொருள்

படுகலம் : கடன் பட்டதற்கு எழுதிக் கொடுக்கும் பத்திரம்

படைக்கலம் : போர் புரியும் ஆயுதங்கள்

படைநாயகம் : சேனைத் தலைமை

படை நிலை : படைகள் தங்கியிருக்கும் இடம்

படைப்பணம் : சேனையின் பராமரிப்புக்காக இறுக்கும் வரி ; தண்டமாக இறுப்பதுபோலும் ; போர்ப்படையினர் இறுப்பதாகவும் கொள்ளலாம் ;

படைப்பற்று : படையின் அனுபோகத்தில் உள்ள நிலம் ; பாளையம் ; நாட்டின் காவலுக்கான படைகள் தங்கியிருக்கும் இடமும் ஆகும்

படையழிவு : பயிர்களுக்குப் படைவீரர்களால் நேரிடும் சேதம்

பண் : வயல் ; பயிரிடும் நிலம்

பண்குறுணி : ஒரு வயலுக்குக் குறுணி வீதம் இறுக்கும் வரி

பண்ட வேட்டி : வெட்டி வகை ; கோயில் நிலத்துக்கானதுபோலும்

பண்டாடு பழநடை : நீண்ட காலமாக நடந்து வரும் வழக்கம்

பண்டாரக் கண்காணி : கஜானா அதிகாரி ; பொக்கிஷத்து அதிகாரி

பண்டாரக்கல் : அரசாங்கப் பொக்கிஷத்தில் உபயோகிக்கும் நிறை

பண்டாரவாடை : அரசனுக்குச் சொந்தமான கிராமம் அல்லது நிலம்

பண்டாரவாரியம் : கோயில் விசாரணைச் சபையார்

பண்டாரி : கஜானா அதிகாரி

பண்ணிக்கக் கூலி : செய்து முடித்த காரியத்துக்கான கூலி

பணம் : வீரபாஞ்சாலத்தார் என்னும் தொழிற் சபையின் உறுப்புக்களான தனிக் குழாம்

பணவர்க்கம் : காசாகச் செலுத்தவேண்டிய வரிகள்

பணவாசி : பணத்தின் தேய்வு கழிவுக்காக இறுப்பதுபோலும்

பணிக்கோத்து : கிராம ஊழியர்கள் ; அவர்களுக்காக வசூலிக்கும் வரி

படப்பு : வீட்டின் புழைக்கடை ; வீட்டின் பக்கத்துள்ள இடம் (மனை யும் மனைப் படப்பும்)

படர் : சொந்தச் சேவகன் ; போர் வீரன்

படலிகை : ஓர் அளவு

படாகை : உட்கிடை கிராமம்

படிக்கம் : அபிஷேக நீர் முதலியவற்றை ஏந்தும் பாத்திரம்

படித்தரம், படித்தனம் : கோயிலின் தினசரி செலவுக் கட்டளை

படிவிஞ்சனம் : கோயில் நித்தியப் படித்தரத்தில் வியஞ்சனப்பொருள்

படுகலம் : கடன் பட்டதற்கு எழுதிக் கொடுக்கும் பத்திரம்

படைக்கலம் : போர் புரியும் ஆயுதங்கள்

படைநாயகம் : சேனைத் தலைமை

படை நிலை : படைகள் தங்கியிருக்கும் இடம்

படைப்பணம் : சேனையின் பராமரிப்புக்காக இறுக்கும் வரி ; தண்ட மாக இறுப்பதுபோலும் ; போர்ப்படையினர் இறுப்பதாகவும் கொள்ளலாம் ;

படைப்பற்று : படையின் அனுபோகத்தில் உள்ள நிலம் ; பாளையம் ; நாட்டின் காவலுக்கான படைகள் தங்கியிருக்கும் இடமும் ஆகும்

படையழிவு : பயிர்களுக்குப் படைவீரர்களால் நேரிடும் சேதம்

பண் : வயல் ; பயிரிடும் நிலம்

பண்குறுணி : ஒரு வயலுக்குக் குறுணி வீதம் இறுக்கும் வரி

பண்ட வேட்டி : வெட்டி வகை ; கோயில் நிலத்துக்கானதுபோலும்

பண்டாடு பழநடை : நீண்ட காலமாக நடந்து வரும் வழக்கம்

பண்டாரக் கண்காணி : கஜானா அதிகாரி ; பொக்கிஷத்து அதிகாரி

பண்டாரக்கல் : அரசாங்கப் பொக்கிஷத்தில் உபயோகிக்கும் நிறை

பண்டாரவாடை : அரசனுக்குச் சொந்தமான கிராமம் அல்லது நிலம்

பண்டாரவாரியம் : கோயில் விசாரணைச் சபையார்

பண்டாரி : கஜானா அதிகாரி

பண்ணிக்கக் கூலி : செய்து முடித்த காரியத்துக்கான கூலி

பணம் : வீரபாஞ்சாலத்தார் என்னும் தொழிற் சபையின் உறுப்புக் களான தனிக் குழாம்

பணவர்க்கம் : காசாகச் செலுத்தவேண்டிய வரிகள்

பணவாசி : பணத்தின் தேய்வு கழிவுக்காக இறுப்பதுபோலும்

பணிக்கோத்து : கிராம ஊழியர்கள் ; அவர்களுக்காக வசூலிக்கும் வரி

பணிமகன் : வேலையாள்

பத்திரகடம் : பூர்ண கும்பம்

பத்தெட்டுக் குத்தரிசி : நன்கு குத்தித் தீட்டிய அரிசி

பதிபாதமூலம், பதிபாதமூலத்தார், பதிபாதமூலப்பட்டுடையார், பதிபாதமூலப்பஞ்சாசாரியர் : சிவன் கோயிலை நிர்வகிப்பதற்காகப் பூசை செய்வோரைக் கொண்ட சபை ; மூலபரிஷத் என்பதும் இதுவே போலும்

பதியார் : கோயிலைச் சேர்ந்த ஊழியர் ; பதியிலாரே போலும்

பதியிலார் : கோயிலைச்சேர்ந்த கணிகையர்

பதினறுமார் : பதினறு பேர் கொண்ட கோயில் விசாரணைச் சபை

பதுவாரம் : நிலப் பரிவர்த்தனைக்காக அளிக்கப்பெறும் வரி ; மாறுதலுக்கான வரி ; பதவாரம் எனவும் பெறும்

பயரப்பெறுதல் : அரசாங்கத்தாரால் திரும்ப எடுத்துக்கொள்ளப் பெறுதல்

பயிற்றுதல் : நிலத்தைச் சாகுபடிக்கு ஏற்பத் திருத்திப் பண்படுத்தல்

பயிரேற்றி : பயிர் செய்து; விளைவித்து

பரக்கூலி : சுமை கூலி

பரதேசி : வெளியார் ; வெளிநாட்டார் ; நானாதேசி என்னும் வியாபாரக் குழுவில் ஒரு பிரிவினர் ; வெளிநாட்டு வியாபாரம் செய்வோர்

பரப்பு : வரிக்கணக்கு ; பரம்பு எனவும் படும்

பரம்பர் : உழவர் குடிவகை

பரம்பு : வரிக் கணக்கு ; பரப்பு எனவும் படும்

பரமக்கன்கல் : உடன் கட்டை ஏறியவளுக்காக நட்ட கல்

பராவிவைத்தல் : நேர்த்திக் கடனாக அளித்தல்

பரிக்கிரகத்துப் பெண்டுகள் : கோயில் பணிப் பெண்கள்

பரிகரம் : உபகரணம் ; தேவையானவை ; பரிவாரம்

பரிகாரம், பரிஹாரம் : விலக்கு

பரிகாரன் : வேலைக்காரன்

பரிசட்டம் : பரிவட்டம் பார்க்க

பரிசு : வகை, விவரம் ; பரிது எனவும் பெறும்

பரிமாறுகிற : வழக்கில் இருக்கிற ; நடமாட்டத்தில் உள்ள (பணம்)

பரிவட்டம் : ஆடை ; விக்கிரகத்துக்குச் சாத்தும் கூறை ; கோயிலில் தரிசிப்போர் தலையில் மரியாதையாகக் கட்டும் கடவுள் ஆடை; பரியட்டம் எனவும் பெறும்

பரிவாரக் கொத்து, பரிவாரக் கோந்தம் : கோயிற் பணியாளர்கள்

பரும்புடவை: ஆடை வகை

பருமுளவராகன்: முன்னாளில் வழங்கிய நாணய வகை

பலகாயம்: மிளகு, கடுகு போன்று கறிக்கு உதவும் பண்டங்கள்

பலதளி: பல மூர்த்திகளுக்கும் சந்நிதிகள் கொண்ட கோயில்

பலவரவை: பல வழியில் சில்லறையாகச் சேர்ந்தது

பலி: கோயில் பூசையின்போது தீ வளர்த்துச் சோற்றை ஓமம் செய்வது

பலிசை: வட்டி; பொலிசை எனவும் காணப்பெறும்

பலித்தாலம்: ஸ்ரீபலி நடத்துவதற்கு உபயோகிக்கும் தட்டு

பவிழிய சரணத்தார்: ரிக் வேதத்தைச் சேர்ந்தவர்; பௌழிய சரணத்தார் எனவும் பெறுவர்

பவிஷ்யக்கிடைப்புறம்: ஒருவர் கிராமத்திலேயே வசித்துப் பாடம் சொல்லுவதற்காக வரியில்லாமல் அளிக்கப்பட்ட நிலம்

பழம்புள்ளி மாடை: முன்னாளில் வழங்கிவந்த நாணய வகை

பழமுதல் கண்காணி: கோயில் மேற்பார்வையாளன்

பள்ளி: சமணர் கோயில்; பௌத்தர் கோயில்

பள்ளிச் சந்தம்: சமணர் பௌத்தர் கோயில்களுக்காக வரியில்லாமல் விடப்பெற்ற நிலம் அல்லது கிராமம்

பள்ளித்தாமம், பல்ளித்தோங்கல்: கோயில் மூர்த்திக்கு அணிவிக்கும் பூமாலை

பள்ளிப்பீடம்: ஆசனம்; சிங்காதனம்

பள்ளிச் சிவிகை: கோயில் உற்சவத்தில் மூர்த்தி எழுந்தருளும் பல்லக்கு

பள்ளி விளாகம்: சமணர் பௌத்தர் கோயிலைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதி

பளிக்கு வயிரம்: வைர வகை; பளிங்கு என்பதே போலும்

பளிங்கு: புஷ்பராகம்

பற்றடை: தொழிற்சாலை

பற்றுமுறி: ரசீது; பெற்றுக்கொண்டதற்கு ஒப்பம்

பறைத்தறி: துணி செய்யும் தறிவகை; அதற்கான வரியையும் குறிக்கும்

பறைத்துடைவை: பறையர்க்கு விட்ட மானியம்; பறைமை என்பதும் இதுவே போலும்

பறையிறை: முன்னாளில் காசாக இறுத்து வந்த வரி; பறையரிடமிருந்து வசூலிக்கப்பெற்றதுபோலும்; அவர்களுக்காக இறுக்கப்பெற்றதாகவும் கொள்ளலாம்

பன்றியாழ்வார்: விஷ்ணுவின் வராஹாவதாரம்

பனம் பற்று: பனந் தோப்பு

பனிநீர்: பன்னீர்

பஸ்தி: சமணர் கோயில்; ஜைனர் ஆலயம்

பாக்கம்: சிறுமூட்டை

பாகவதநம்பி: வைஷ்ணவ அடியார்

பாகுவலயம்: தோள்வளை

பாசனம்: (பாஜனம்) சாப்பிடும் பாத்திரம்

பாசி: ஏரி, குளம் முதலிய நீர்நிலைகளிலிருந்து மீன் முதலிய வருவாய் வகைகள்; மச்ச மாசூல்

பாசிப்படை: திடீரென்று தாக்கும் பலம் வாய்ந்த சேனை

பாசிப்பாட்டம்: மீன் பிடிப்பதால் கிடைக்கும் வருவாய்; மீன்பாட்டம் எனவும் ஆகும்

பாட்டநெல்: ஒப்பந்தப்படி குத்தகைக்காரனால் சொந்தக்காரருக்கு அளக்கப்படவேண்டிய நெல்

பாட்டம்: வரி; தொழில் வரிபோலும்

பாட்டமாளன்: வரி வசூலிக்கும் அதிகாரி; உழவுப் பாத்தியதை உடையவன்

பாட்ட விருத்தி: பாட்டமீமாம்ஸையின் பிரவசனத்துக்காக விடப்பெற்ற நிலம்; பட்டவிருத்தி எனவும் கொள்வர்

பாட்டிமை: பிரதமை திதி

பாடகம்: மகளிர் காலில் இடும் ஆபரணம்

பாடகம்: வயலின் தளை; விளைநிலப் பகுதி

பாடவரி: உலோகத்தால் ஆன முகம் பார்க்கும் கண்ணாடிக்கு இறுக்கும் வரி

பாடவியம்: ஒருவகை வாத்தியம்

பாடன்: இரத்தினம், உலோகத்தகடு முதலியவற்றின் ஒளி

பாடி(க்)காவல்: கிராமக் காவல்; அதற்கான வரியையும் குறிக்கும்

பாடிவேட்டை: கோயில் உற்சவங்களுள் ஒன்று; பாரிவேட்டை எனவும் பெறும்

பாடு தாங்குதல்: துணை நிற்றல்

பாண்டிவரி : மாடு கட்டி ஓட்டும் வண்டிக்கான வரிபோலும்

பாணிச்சாய் : கள் போன்ற முத்து நிறம்

பாத சாலம் : காலணி வகை

பாதபாசம் : காலணி வகை

பாத புஷ்பம் : பாத காணிக்கை

பாதவக்காணி : கோயில் வேலைக்காரர்களுக்கு உரிய படித்தர நிலம்

பார்க்கோல் : கட்டியக்காரன் ஏந்திவரும் தடி ; கட்டியத் தடி

பார்ப்பனச் சேரி : பிராமணர் குடியிருப்புப் பகுதி

பாரக்கூலி : சாமானை எடுத்துப் போவதற்கான கூலி

பாரசிவன் : பாரசவன் என்பது போலும் ; ஆயுதம் தரித்தவன் ; போர்வீரன்

பாரதப்புறம், பாரதவிருத்தி : மகாபாரதம் படித்துக் கதை சொல்லு வதற்காக விட்ட நிலம்

பாரதவர் : மீன் பிடிப்போர் ; பரதவரே போலும்

பாரதாயன் : பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவன்

பாரிசஞ் செய்தல் : பொறுப்பாக்குதல் ; ஒப்படைத்தல்

பாருபத்தியம் : நிர்வாகம்

பாவாடை : திருப்பாவாடை பார்க்க

பாழி : ஜைனர் கோயில் ; பள்ளி ; மலைக்குகை

பாற்படுத்தல் : நேர்மையாக நடத்திவைத்தல் ; கிரமமாக நிர்வகித்தல்; ஒழுங்கு செய்தல்

பாறைக்காணம் : வண்ணான் தோய்க்கும் கல்லுக்காக இறுக்கும் வரி; வண்ணான்பாறை எனவும் பெறும் ; பாறையை உடைத்துச் சல் லிக்கல் செய்வதற்கான வரியாகவும் கொள்வர்

பாஷாணம் : அஷ்டபோகத்துள் ஒன்று ; பாறை நிலமும் அதனால் கிடைக்கும் பொருளும் ஆகும்

பாஷிய விருத்தி : ஸ்ரீபாஷ்யம் எனப்படுவதும் வேதாந்த சூத்திரத் துக்கு இராமாநுஜர் எழுதியதுமான விசிஷ்டாத்துவைத பாஷியம் விளக்கிச் சொல்லுவாருக்கு விட்ட மானிய நிலம்

பிங்காளம் : உலோகத்தால் ஆன ஒருவகைப் பாத்திரம்

பிஞ்சு : ஆபரணத்தில் பிஞ்சுபோன்ற உருவத்தில் அமைந்துள்ள உறுப்பு

பிச்சதேவர் : சிவபெருமான் ; பிக்ஷாடன மூர்த்தி ஆகும் ; பித்தன் எனவும் கொள்ளலாம்

பிடாகை : படாகை ; உட்கிடை கிராமம்

பிடாநாழி : புதாநாழி பார்க்க

பிடாரர் : பட்டாரகர் ; சிவபெருமான் ; குருவையும் குறிக்கும்

பிடாரிப்பட்டி : பிடாரி கோயிலுக்காக விடப்பட்ட நிலம் ; பிடாரி விளாகம் எனவும் குறிக்கப்பெறும்

பிடி சூழ்ந்து : பெண் யானை சுற்றி வர ; தானம் அளிக்கப்பெற்ற கிராமம் அல்லது நிலத்தின் எல்லையைச் சுற்றி வந்து நிர்ணயிப்பது

பிடிபாடு : ஆதாரச் சீட்டு ; ஆதரவு

பிடிவிளக்கு : கைப்பிடி கொண்ட தீபம்

பியர் : பெயர் என்பதன் வேறு வடிவம்

பிரசண்ட காணிக்கை : (பிரசண்டம்—கடுமையான, பயங்கரமான) படைப் பணம் என்பதனுடன் சேர்ந்து காணப்படுகிறது ; படை வரியில் ஒரு வகை

பிரசத்தி : பிரசித்தி ; பிரகடனம் செய்தல் ; பறையறைந்து அறிவித்தல்

பிரசாதப்படுதல் : அனுக்கிரஹம் செய்ததைப் பெற்றுக்கொள்ளுதல் ; அளித்ததை ஏற்றல் ; அரசன் ஆணையை ஏற்றல்

பிரசாதம் செய்தல் : அனுக்கிரகித்தல் ; அளித்தல் ; அரசாணை

பிரசிஷ்யன் : சிஷ்யனுடைய சிஷ்யன் ; சிஷ்ய பரம்பரையையும் குறிக்கும்

பிரட்டன் : பிரஷ்டன் ; நெறியினின்றும் வழுவியவன்

பிரதானி ஜோடி : குறைந்த விகிதத் தீர்வையில் மந்திரிகளுக்கு அளிக்கப்பெற்ற இனாம் கிராமம்

பிரதிகிரகம் : தானம் அளிப்பதை ஏற்றுக்கொள்வது

பிரபாவளி, பிரபை : திருவாசி

பிரமதானம் : பிராமணர்களுக்கு வழங்கிய தானம்

பிரமதேயம் : பிராமணர்களுக்குத் தானமாக வழங்கப்பெற்ற கிராமம் ; அகரப்பிரமதேயம் எனவும் பெறும் (அகரம்—வரியில்லாதது)

பிரமதேயக் கிழவர் : பிரமதேயக் கிராமங்களின் சொந்தக்காரர் ; அத்தகைய கிராமங்களின் அதிகாரி எனச் சிலர் கொள்வர்

பிரம மாராயன் : பிராமண மந்திரிக்கு அளிக்கப்பெற்ற பட்டப்பெயர்

பிரம மேதம் : புனிதமானவர்களுக்கு நடைபெறும் ஈமச்சடங்கு வகை

பிரமாணம் : பத்திரம் ; ஆதாவுச்சீட்டு

பிரமாதம் விளைதல் : உயிர் போதல் ; இறத்தல்

பிரம்மாதி ராஜர், பிரம்மாதி ராயர், பிரம்மராயர்: மந்திரிகளிலே பிராமணர்களாக உள்ளவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த சிறப்புப் பெயர்

பிரவேசகம்: நுழைவு

பிரஹாரம்: மாணிக்கக் குற்றங்களுள் ஒன்று

பிராணாந்திகம்: ஆயுள் முடியும் வரையில்

பிராப்தி: அடைவது; பேறு; பிராத்தி, ப்ராப்தி எனவும் காணப் பெறும்

பிராமண ராசக்காணம்: பிராமண புரோகிதர்கள் அரசருக்கு இறுக்க வேண்டிய வரி;

பிரீதிப் பிரமாணம்: அன்பினால் அளிக்கும் நிலத்துக்கு உரிய பத்திரம்

பிரும்மத்தானம், பிரம ஸ்தானம்: ஊரில் பிராமணர்கள் குடியிருக்கும் பகுதி; ஊர்ச்சபை கூடும் இடம்

பிரும்மபுரி, பிரமபுரி: அகரப் பிரமதேயமே போலும்

பிள்ளைகள் தனம்: இராஜ குடும்பத்து இளைய பரம்பரையைச்சேர்ந்தவர்களைக் கொண்டு உருவாகிய அதிகார வர்க்கம்

பிள்ளையார் நோன்பு: விநாயக சதுர்த்தி; கோயிலில் அந்த உற்சவத்தை நடத்தி வைப்பதற்காக விடப்பெற்ற மானியம் அல்லது இறுக்கப்பெறும் பணம்; பிள்ளையார் நோன்புத் தேவை, பிள்ளையார் நோன்புப்பச்சை எனவும் குறிக்கப்பெறும்

பிள்ளை வரி: குமாரர் அல்லது பிள்ளைகள் (இராஜகுமாரர்) என்று குறிக்கப்பெறும் சிற்றரசர் (அதிகாரி) வர்க்கத்தாருக்காக இறுக்கும் வரி; குமார கச்சாணம் என்பதும் இதுவே போலும்; (கல்யாணபுரத்திலிருந்து அரசாண்ட மேலைச் சாளுக்கிய சாசனங்களில் காணும் குமார விருத்தி என்பதை ஒப்பிட்டுக் காண்க)

பிற்கூறுதல்: முற்கூறியதை ஏற்றுச்சொல்லுதல்; ஆமோதித்தல்; ஒப்புக்கொண்டதைத் தெரிவித்தல்

பின்தோன்றல்: தம்பி

பீடிலிகைவாரி: கோயில் அதிகாரிகளுள் ஒருவர்; நிர்மாலியத்தை அகற்றும் பொறுப்பு வாய்ந்தவர் போலும்

புக்தி: அனுபவித்தல்; புத்தி எனவும் எழுதப்பெறும்

புட்டகம்: ஆடை, சீலை

புட்டக வரி: சீலை விற்போர் செலுத்தவேண்டிய வரி

புடவை, புடைவை : ஆடை; துணி

புண்ணிய கணப்பெருமக்கள் : தர்மங்களையும் அவற்றின் நிலங்களை யும் நிர்வகிக்கும் சபையார்

புணை : பிணை; ஆள் ஜாமீன்

புநாழி : புதாநாழி பார்க்க

புதாநாழி : முன்னாளில் வழங்கிவந்த வரி வகை; ஒவ்வொரு வீட்டு வாசல் நிலையைக் கணக்கிட்டு நாழிநெல்லாக வசூலிக்கப்பெற்றது போலும்

புதியது, புதியிது : அறுவடையானதும் புதுநெல்லைக் கடவுளுக்குப் படைப்பது

பதுவது : புதியது

புதுவரி : புதியதாக ஏற்படுத்தப்பெற்ற வரி

புரட்டன் : ஏமாற்றுபவன்; பொய்யன்

புரவரியார் : அரசிறைக் கணக்கர்

புரவு : நிலவரி; அரசிறை; இக் கணக்கு அடங்கிய புத்தகம்

புரவுவரி, புரவரி : அரசாங்கத்து வரிக்கணக்கு; அதை நிர்வகிக்கும் அதிகாரி

புரவு நெல் : நெல்லாக இறுக்கும் வரிவகை; அவ்விதம் வசூலிக்கப் பெற்ற நெல்லையும் குறிக்கும்

புரவு பொன் : பொன்னாக இறுக்கும் வரி; அவ்விதம் வசூலித்த பொன் னையும் குறிக்கும்

புருஷாகாரம் : மானிட உருவம்

புரையிடம் : தோப்பு

புரோகிதக்காணியாட்சி : புரோகிதராக இருக்கும் பரம்பரை உரிமை

புல்லந்தி : மேய்ச்சல் தரையில் மேயும் மாடுகளைப் பற்றியதுபோலும்; திருட்டு மேய்ச்சலுக்கு வசூலிக்கும் தண்டமாக இருக்கலாம்

புலவரி : (புலம் + வரி) நிலத்தின் வரி எனப் பொருள்படும்; ஆயினும் புல்வரி என்றே வாசிக்க வேண்டும் எனத் தோன்றுகிறது

புலிமானியம் : புலியைக்கொன்ற ஒருவனுக்கு விட்ட மானிய நிலம்

புழுகு கடமை : கோயில் மூர்த்திக்குப் புனுகுசட்டம் இடுவதற்காகும் செலவுக்கு இறுக்கும் பணம்; புழுகுவரி எனவும் பெறும்

புழுதிபாடு : தரிசு நிலம்

புள்ளடிக்கல் : எல்லைக்கல்

புள்ளி : நபர்; குறிப்பிட்டவன்

புள்ளிக்குறிகை வராகன் : முன்னாளில் வழங்கிய நாணய வகை

புள்ளிச்சோறு : சோறு ஊட்டவேண்டிய கடமை

புளியிட்டடும் கறி : புளிங்கறி ; புளி சேர்த்துச் செய்யும் கறி

புறக்கடமை : தர்மத்துக்காக விடப்பட்ட நிலங்களின் மீது இறுக்கும் வரி ; உள்வரியினின்றும் வேறானது ; புறவரி எனவும் ஆகும்

புறக்கடித்தல் : வெளியேற்றுதல்

புறக்கலனையார் : வேறு கிராமத்தில் தொழில் நடத்துவார்

புறக்கழனியார் : வெளியூரில் நிலம் உள்ளவர்; உழுது பயிரிடும் நிலம் ஓர் ஊரில் இருக்க வேறு ஊரில் வாழ்வார்

புறக்குடி : பண்ணையாள் அல்லாத குடியானவன் ; தர்மத்துக்கான நிலத்தைப் பயிரிடுபவன் ; வெளியூர் சென்று சாகுபடி செய்பவன்

புறக்கோடை : கோயிலின் வெளிப்புறம்

புறக்கோயில் : வெளியே உள்ள கோயில் ; பரிவார தேவதைகளின் ஆலயம் ; சுற்றுக்கோயில்

புறணி நாடு : எல்லைப்புறமாக உள்ள நாடு

புறத்தடியார் : (அகத்தடியாரினின்றும் வேறானவர்) கோயில் முதலியவற்றின் அடியார் ; தேவரடியார்

புறம் : ஒரு குறிப்பிட்ட தர்மத்துக்காகப் பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பட்ட நிலம் அல்லது கிராமம்

புறம்படி : நகரின் புறப்பகுதி

புறம்பு : புறக்கடமையே போலும்

புறவாயம் : புறவரி ; பெரும்பாலும் காசாக இறுக்கப்படுவது

புறவெட்டி : கிராமத்து நலனுக்காக அதன் எல்லைக்குவெளியே செய்ய வேண்டிய பொது மராமத்து வெட்டி வேலை

புன்பயிர் : புன்செய் நிலத்தில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற பயிர் ; நெல் நீங்கலாக மற்றவகைப் பயிர்

புன்னீர் : கழிவு நீர்

புனக்குளம் : மழைத் தண்ணீர் தேங்கி நிற்கும் குட்டை

புஷ்கரப்பத்திமடல் : திருநீறு வைக்கும் மடல்

புஷ்பத் தளிகை : கோயில் வழிபாட்டில் மலரைச் சமர்ப்பித்தல் ; மலர்த்தட்டம்

புஷ்யராகம் : புஷ்பராகக் கல்

பூச்சியாளுதல் : இலை முதலியவற்றை அரிக்கும் பூச்சிகள் மிகுத்திருத்தல்

பூசகன் : பூஜகன் ; கோயில் பூசை செய்வோன்

பூட்சி : வரி

பூட்டைக்கிணறு : நீர் பாய்ச்சுவதற்கான ஏற்றம் அமைத்த கிணறு

பூமகள் : லக்ஷ்மி ; பூமிதேவி

பூமிப்பிராட்டி : பூமிதேவி

பூமிபுத்திரர் : வேளாண் மக்கள் ; சித்திரமேழிப் பெரிய நாட்டவர் என்னும் சபையைச் சேர்ந்தவர்

பூர்வாசாரம் : முன்னுள் வழக்கம்

பூரிக்குத்தலரிசி : நன்கு குற்றித் தீட்டிய அரிசி

பூரிச்சேரல் : நெல் வகை ; பூரிநெல் என்பதும் இதுவே போலும்

பூவிடுவான் : கோயிலுக்குப் பூப்பறித்துக் கொடுப்பவன்

பூஜாவிருத்தி : கோயில் பூசை செலவுக்காக மானியமாக விடப்பட்ட நிலம்

பெண்டாட்டி : பெண்மகள் ; ஸ்திரீ ; வேலைக்காரி

பெண்டுகள் : பெண்மக்கள்

பெண்பள்ளி : பெண்துறவிகள் தங்குமிடம்

பெத்திரி வீடு : பண்டகசாலை, கிடங்கு (தொழிற்சாலை என்று பொருள் படும் Factory என்பதன் வேற்று வடிவம் போலும் : உலாந்தாக் காரருக்குத் தஞ்சை மன்னன் எக்கோஜி அளித்த செப்புப்பட்டயம்)

பெரிய தேவர் : சோழர் ஆட்சியில் இறந்துபோன அரசரை அவருக்குப் பின் வந்தவர்கள் இவ்விதம் குறிப்பது வழக்கம் ; பெரிய பெருமாள் எனவும் பெறுவர்

பெரிய பெருமாள் : பெரியதேவர் பார்க்க ; அரசர்களுக்கு மேல் அரச னை பேர் அரசன் அல்லது சக்கரவர்த்தியாகவும் கொள்வர்

பெருங்குறி, பெருங்குறிச் சபை, பெருங்குறி மகாசபை : அகரப்பிரம தேயக் கிராமத்துச் சபையின் பொதுக்கூட்டம்; மகாஜன சபை என்னலாம்

பெருந்தரம், பெருந்தனம் : அரசாங்க அதிகாரங்களில் உயர்ந்த தரத்தார் ; சிறுதரம் பார்க்க

பெருந்திணை : நல்ல வமிசத்தில் பிறந்தவர் ; சோழர்கள் ஆட்சியில் நாட்டின் பிரமுகர்களுக்கு அரசன் வழங்கிய பட்டப்பெயர்

பெருந்திருவமிர்து : கடவுளுக்குப் பெரிய அளவில் படைக்கும் நிவே தனம்

பெருநகரத்தார் : வணிகர்

பெருநான்கெல்லை : கிராமம் அல்லது பெரிய நிலத்தாக்கின் எல்லை ; சிறுநான்கெல்லையினின்றும் வேறானது

பெரும்படி : உத்தேசமாக இடும் மதிப்பு

பெரும்பத்து, பெரும்பற்று : சர்க்காருக்கு உரிமையான நிலம்

பெரும் பாடிகாவல் : (சிறு பாடிகாவலினின்றும் வேறானது) நாடு முதலிய பெரிய பகுதியின் காவல்

பெரும்பூ : முக்கியமான பயிர்; பெரும் போகம்; அதனின்று கிடைக்கும் வருமானம்

பெருமக்கள் : முதியோர்; ஒரு சபை அல்லது நிர்வாகக் குழுவின் உறுப்பினர்கள்

பெருமானடிகள் : முன்னாளிலே தெய்வத்தையும் அரசரையும் குறித்து வந்த மரியாதைச் சொல்

பெருமுதியன் : கோயில் அதிகாரிகளுள் ஒருவன்

பெருவளவாய் : நீர்பாயும் பெரிய ஆற்றுக்கால்

பெருவாயன் : கூடை

பெருவாயில் : பிரதானவாசல்; கோபுரம்

பெருமுறி : சம்பளம்

பேதை பாதம் : விக்கிரகத்தின் காலில் அணியும் ஆபரணம்

பேர்க்கடமை : தலைவரிபோலும்; ஆள்வரி, பேர்வாசி என்பனவும் இதுவே

பேரப்பன் : பெரிய தகப்பன்; தகப்பனுக்கு அண்ணன்

பேரி : முரசு, நகரா போன்ற பறை வாத்தியம்

பேரிளமையார் : நானாதேசி வியாபாரக் குழுவினரில் ஒரு சாரார்; கோயிலில் தேவகாரியம் பார்க்கும் மகளிர்; தேவரடியார்

பேறு : பதவிக்கு உரிய காணிக்கைபோன்ற வருவாய்; சம்பளத்துக்குப் பதிலாக அளிக்கப்பெறும் நிலம்

பைங்கிணறு : குட்டை

பைசாரம் : பிரதேசம்

போக்கிசம் : கஜானா; கோயில் பொக்கிஷத்து அதிகாரி

போத்ரகம் : புத்தகம்; வரிப்புத்தகம்; வரிக்கணக்கு

போதிகூலி : தலைச்சுமை எடுத்துவரும் கூலி

போதுவாள் : கோயில் நிர்வாகம் செய்பவன்

போல்லாப்பு : ஆக்ஷேபணை; எதிரிடை

போலிகை, போலிசை : பலிசை, வட்டி

போலிசையூட்டு : வட்டிக்கு விடுதல், வட்டி கொடுத்தல்; பொலியூட்டு பார்க்க

போலிமுறை நாகு: சினைப்படுவதற்கு ஏற்ற நிலையில் உள்ள கிடாரிக் கன்று

போலியூட்டு: பொலிசையூட்டு; நிரந்தரமான வருவாயை அளிப்பதற்காக ஸ்தாவர சொத்துக்கள் மீது கடன் கொடுத்தோ, வாய்க்கால் குளம் போன்ற நீர்நிலைகளைச் செப்பனிட்டோ முதலை வட்டிக்கு விடுவது

போற்பூ: ஸ்வர்ண புஷ்பம்; சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில் பள்ளி மாணவர்கள் தேர்ச்சி பெற்றதைக் குறிக்க அளிப்பது; கோயில் பூசையிலும் உபயோகிப்பது

போற்றை: சிறுமலை; கற்பாறை; சிறுகாடு; புதர்

போன்: முன்னாளில் வழங்கிய தங்க நாணயம்; மாடை எனவும் பெறும்; கழஞ்சு என்பதும் இதுவே என்பர்

போன்பண்டாரம்: கோயிலில் நகை முதலியவற்றைப் பாதுகாக்கும் கஜானா

போன்பண்டாரவாசல்: கஜானா

போன்மாளிகை: அரசன் வாசம் செய்யும் அரண்மனை; முக்கியமாகக் காஞ்சிபுரத்தில் இருந்த அரண்மனை

போன்வர்க்கம்: பொன்னாக, காசாக இறுக்கவேண்டிய வரிவகை

போன்வரி: பொன்னாக இறுக்கும் வரி; பொன்னை நாணயமாக அச்சிடுவதற்கான வரியும் ஆகும்; போன்வரி மாடை என்பதும் இதுவே

போன்னூல்: பொன்னாலாகிய நூல்; விக்கிரகத்துக்கு இடும் பொன்னால் ஆன பூணூல் போலும்

போகஆயகம்: அனுபோகத்துடன் கூடிய நில அடைமானம்

போகபத்திரம்: அனுபோக அடைமான பத்திரம்; அது தீர்ந்த பிறகு விடுதலை எழுதிக்கொடுப்பதும் ஆகும்

போகம்: குறிப்பிட்ட சில ஊழியம் செய்வோருக்குச் சம்பளத்திற்குப் பதிலாக அனுபோகத்துக்கு அளிக்கும் நில மானியம்

போகியார்: காதற்கிழத்தி; (மனைவியைக் குறிப்பதாகவும் கொள்வர்)

போசர்: (போஜகர்) அனுபோக உரிமை வாய்ந்தவர்; சொந்தக்காரர்

போதுதல், போதுகிறது: போதல், போகிறது என்பவற்றின் பழைய வடிவங்கள்

போர்த்தனிப்பாவை: போர்ச் சயப்பாவை; போர்மகள்; வீரலக்ஷ்மி, விஜயலக்ஷ்மி

போனகக் குருத்து: கடவுளுக்குப் படைக்கும் நிவேதனத்துக்கு இடும் வாழை நுனி இலை; தலைவாழையிலை

போனகம்: கடவுளுக்குப் படைக்கும் உணவு

மக்கட் சேவகம்: ஊழியம்; அதைச் செய்வோன் மக்கட்சேவகன்; அவனுக்கு அளிக்கப்பட்ட மானிய நிலம் மக்கட் சேவகப் பேறு எனப்பெறும்

மக்கட்பேறு: புத்திரரைப் பெறுதல்; அதற்கான வரியையும் குறிக்கும்; குடிமக்கள் என்ற நிலையின் கடமையைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்; மக்கட் சேவகப்பேறு எனவும் ஆகும் போலும்

மக்கணாயனார்: (மக்கள் நாயனார்) அரசனுடைய மகன்

மகதாகம்: மிகுந்த தாகம்; இறந்தபின் ஆன்மா கடந்து செல்ல வேண்டிய நரகவகைகளுள் ஒன்று

மகப்படி: கோயில் செலவுத் திட்டத்தில் ஒன்று; மக நக்ஷத்திரத்தில் நடத்தும் உற்சவச் செலவுபோலும்

மகமை, மகன்மை, மகண்மை: வியாபாரச் சரக்குகளின் விலை அளவு ஆகியவற்றுக்கு ஒரு விகிதாசாரம் வைத்து வியாபாரிகள் தாமாகவே கோயில் சத்திரம் போன்ற தர்ம ஸ்தாபனங்களின் செலவுக்காக அளிக்கும் வரி

மகரசங்கிரமணம், மகரசங்கிராந்தி: தைமாதப் பிறப்பு

மகரம்: மகர வடிவில் உள்ள குழை; காதணி; மகர குண்டலம்

மகன்மை: ஆண்மக்கள் வரி

மகாசபை: கிராமத்தின் எல்லா மக்களும் சேர்ந்து நடத்தும் கூட்டம்; மஹாஜன சபை

மகாசாகை: மரத்தின் முக்கியமான கிளை

மகாசாமந்தன்: சிற்றரசுப்பதவியில் உள்ள மந்திரி

மகாதந்திரம்: சேனையின் நிர்வாக சபை

மகாதேவி: பட்டத்தரசி

மகாதோரணம்: கோயிலில் அலங்காரமாக ஏற்றும் தீபவகை; மகர தோரணம் என்பதே போலும்

மகாநகரம்: பெரிய வியாபார ஸ்தலம்; அவ்வூரின் வியாபாரிகள் சபை

மகாநாடு: வியாபாரிகளின் கூட்டம்

மகாநியோகம்: அரசன் ஆணை; அதனைத் தாங்கிச்செல்லும் அதிகாரி

மகாப்பிரதானன்: பிரதானிகளின் தலைவன்; சேனைத்தலைவன்; மஹாப் பிரதானி எனவும் குறிக்கப் பெறுவன்

மகாப்பிரபு: பெரிய தனவந்தன்; வியாபாரிகளின் தலைவன்

மகாபாரதவிருத்தி: மகாபாரதம் வாசித்து விளக்கிக் கூறுபவர் அனுபவிக்க விட்ட மானியம்

மகாபூதகடதானம்: தானவகையில் ஒன்று

மகாமண்டபம்: கோயிலில் அர்த்த மண்டபத்தை யடுத்துள்ள பெரிய மண்டபம்

மகாமண்டலேச்வரன்: ராஜ்யப் பகுதியை நிர்வகிக்கும் சிற்றரசன்; மகாமண்டலிகன் எனவும் பெறுவன்

மகாமாத்திரர்: முதன் மந்திரி

மகாவட்டவியவஹாரி: வியாபாரிகள் தலைவன்; பண லேவாதேவிக்காரன்; வட்டிக்குப் பணம் கொடுப்போர் தலைவன்

மகாவிரதன், மகாவிரதி, மாவிரதி: சைவசமயத்துள் ஒரு பிரிவான மாவிரதம் என்பதைச் சார்ந்த அடியார்

மகாவிவஸ்தை: மகாசபை செய்த விவஸ்தைபோலும்,

மகாஜனம்: கிராம மக்கள் அனைவரும் சேர்ந்த கூட்டம்

மகேச்வரர், மாஹேச்வரர்: சிவனடியார்; கோயில் நிர்வாகத்தில் பொறுப்புள்ள சிவனடியார் சபை

மகேச்வரபெருந்தனத்தார்: சிவனடியார்; பாசுபதர்போலும்

மங்கலம்: சதுர்வேதி மங்கலம் என்பதன் குறுகிய வடிவம்; பிராமணர் குடியிருப்புக்காகப் பெரும்பாலும் வரியில்லாமல் விடப்பெற்றகிராமம்

மங்கிலியம்: தாலி

மச்சாழ்வி: மைத்துனன் என்பதன் வேறு வடிவம்; மனைவியின் சகோதரன்; சகோதரி கணவனும் ஆகும்

மஞ்சள்காப்பு: கோயில் மூர்த்திகளுக்கு மஞ்சளை அரைத்து விழுதைச் சாத்துவது

மஞ்சாடி: இரண்டு குன்றுமணிகள் கொண்ட எடை; அந்த எடையுள்ள பொன்

மஞ்சிக்கம்: ஊர்ப்பொதுவில் பயிரிடாமல் உள்ள தரிசு நிலம்

மட்டத்தாரை: கூர்மையில்லாத விளம்பு கொண்டது

மட்டத்தாரைச்சப்படி: மழுங்கிய விளிம்புகொண்ட தட்டை வைரம்; மட்டத்தாரைச் சவக்கம் என்பதும் இதுவேபோலும்

மட்டம்: சிறியது

மட்டப்பூ: அணி உறுப்புகளுள் ஒன்று, தொங்கும் வகை

மடப்புறம்: மடத்துக்கு விடப்பெற்ற இறையிலி நிலம்

மடம்: பிரமசாரிகளும் துறவிகளும் வாழும் இடம்; துறவிகளுக்கும் தவசிகளுக்கும் உணவு இடும் சத்திரம்

மடவளாகம், மடைவிளாகம் : கோயிலைச் சூழ்ந்துள்ளதும், கோயில் பரிவாரத்தார் குடியிருப்பதுமான இடம்

மடாபத்தியம் : மடத்தின் அதிபதிப் பொறுப்பு ; மடத்தின் நிர்வாகம்

மடை : சமைத்த சோறு ; நைவேத்தியம்

மடைப்பள்ளி : கோயிலில் சமையல் செய்யும் இடம்

மடைப்பள்ளிப் புறம் : கோயில் அடுக்களைச் செலவுக்காக விடப்பெற்ற நிலம் அல்லது கிராமம்

மடைப்போக்கு : மதகிலிருந்து நீர் பாய்வது

மண்டகம் : மண்டபம்

மண்டபக்கோத்து : கோயில் பரிவார வகை

மண்டலம் : நாட்டின் பெரும்பகுதி (சோழமண்டலம்)

மண்டலமுதன்மை : மண்டல நிர்வாகத்தின் தலைமைப்பதவி ; அதை வகிப்பவர் மண்டல முதலியார் எனப்பெறுவர்

மண்டல முதன்மைப்பேறு : மண்டலாதிபதியின் அநுபோகத்துக்கு விடும் நிலம், அல்லது அவனுக்காக இறுக்கும் வரி

மண்டலிகன் : மண்டலத்தை ஆளுவோன் ; மண்டலேச்வரன் எனவும் பெறுவன்

மண்டையவியன் : மாண்டவிய கோத்திரத்தைச் சேர்ந்தவன்

மண்ணன் : ஹரிஜனங்களின் வண்ணான்

மண்பாடு : மண்ணால் எழுப்பிய வரம்பு ; மண்ணால் ஆன கரை

மண்மதில் : மண்ணால் எழுப்பிய கோட்டைச்சுவர் ; அதன் பாதுகாப்புக்காக இறுக்கும் வரியும் ஆகும்

மணவாட்டி : மனைவி

மணாட்டி : மாணவி ; பெண் சிஷ்யை

மணிக்கலம் : கல் வைத்து இழைத்த ஆபரணம்

மணிக்கிராமம் : வியாபாரிகளின் குழுவில் ஒருவகை; அவர்கள் வாழும் நகரம்

மணியம்பலம் : ஓலக்க மண்டபம் ; ராஜ சபை

மத்தியக்கன், மத்தியஸ்தன் : நடுநிலை வகிப்பவன் ; பெரும்பாலும் கிராமத்தலைவன்

மதலை : மகன்

மந்தவாடை : இளவாடைக் காற்று

மந்திர போனகம் : நிவேதன உணவு

மந்தைகண்டேற்றம் : மந்தையின் மேய்ச்சலுக்கான பூமியும் அதனைச் சார்ந்த இடமும் ; அவற்றை உண்டாக்குவது போலும்

மந்தைப் பணம் : கிராமங்களில் கால்நடைகளின் மேய்ச்சல் பூமிக்காக இறுக்கும் வரி

மயிலாப்பில், மயிலார்ப்பில் : மயிலாப்பூரின் பழைய பெயர்

மரக்கடமை : மரங்களின் மீது இறுக்கும் வரி

மரமச்சாதி விலை : மரம், மீன் முதலியவற்றால் கிடைக்கும் வருவாய்

மரமஞ்சாடி : பயன்தரும் மரத்துக்கு மஞ்சாடி வீதம் இறுப்பது

மரவடை : பயன் தரும் மரங்கள் ; அவற்றை அனுபவிக்கும் உரிமை; மரவிடை எனவும் பெறும்

மரியாதி : எல்லை ; வரம்பு ; வீதம்; மர்ஜாதி, மரிசாதி, மருசாதி என்பன போன்ற வடிவங்களிலும் காணப்படும்

மரு : மருக்கொழுந்து ; கொழுந்து எனவும் பெறும்

மருத்துவப்பேறு : கிராம வைத்தியனுக்கு வரியில்லாமல் விட்ட மானிய நிலம்

மல்லாயி மகமை : முன்னாளில் வழங்கி வந்த வரிவகை ; பொருள் விளங்கவில்லை ; சந்தை மகமை போலும்

மலர் : ஆயுதம் முதலியவற்றின் தலையில் உள்ள குமிழ்

மலைகுனிய நின்றான் : திருப்பதியில் உள்ள வேங்கடேசப்பெருமான்; அவன் கோயிலில் வழங்கும் எடை அளவு முதலியன

மலையாண் விளக்கு : கோயிலில் ஏற்றும் விளக்கு வகை

மலையாள முதலி : மலைவாழ் மக்கள் தலைவன்

மழு : பழுக்கக் காய்ச்சிய இரும்பை ஏந்தி நிரூபிக்கும் முறை

மறமாணிக்கர் : பொன் அமராவதியைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் வாழும் வீரர் வகுப்பார்

மறு, மறுவு : இரண்டாம் போகம் ; மறுபடியும் சாகுபடி செய்வது

மறுகால் தலை : வடிகால் மதகு

மன்றம் : மன்று பார்க்க

மன்றாடி : இடையர்

மன்றாடி வாரியம் : கோயில் காரியங்களை நிர்வகிக்கும் சபை (மன்றாடி-அம்பலக்கூத்தாடும் சிவபெருமான்)

மன்று : சபை ; நியாய சபை ; ஊர்ப்பொதுவிடம்

மன்றுதல் : தண்டம் விதித்தல்

மன்றுபாடு : நியாய விசாரணை சபைக்கு இறுக்கும் அபராதப் பணம்

மன்னனார் : விஷ்ணு

மனிச்சம் : மனிதன்

மனைக்கடையான் : மனையிலேயே கடை வைத்து வியாபாரம் செய்பவன

மனைப்படப்பு : மனையைச் சுற்றியுள்ள இடம் ; மனைப்படப்பை எனவும் பெறும்
மனைப்பணம் : வீட்டு வரி ; மனைவரி எனவும் படும்
மனையிறை : வீட்டு வரி
மனைவாணீளம் : மனையின் நீண்ட வால் வீச்சு
மனுவாறு : மனுநீதி வழியே

மா : இருபதில் ஒரு பாகம் ; நில அளவு, நிறுத்தல் அளவு
மாங்காய் நாண் : மாங்காய் மாலை
மாசாத்துநாயன் : வியாபாரிகள் தலைவன் ; முன்னாளில் வெளிநாட்டு வியாபாரம் செய்துவந்த பெரிய வியாபாரிகளுக்கு அரசன் அளித்த பட்டப்பெயர்
மாசுமறு : குற்றம் ; மாசும் மறுவும்
மாட்டறிதல் : கையெழுத்துக்குச் சாட்சி போடுதல்
மாட்டு : இணைந்த, உரிய, சேர்ந்த
மாட்டுக்கறை : மாடுகள் மீது இறுக்கும் வரிபோலும்
மாடக்கோயில் : மேட்டிடம், கட்டுமலை, உயர்ந்த உபபீடம் ஆகியவற்றின் மீது கட்டப்பெற்ற சிவன் கோயில் ; ஒன்றுக்கு மேற்பட்ட தளங்களையுடையதாகவும், குறுகிய வழியுள்ளதாகவும் இருக்கும் எனக் கொள்வர்
மாடவீதி : கோயிலைச் சுற்றியுள்ள வீதி
மாடாபத்தியம் : மடாபத்தியம் பார்க்க
மாடுகாணிக்கை : ஊருக்கு விஜயம் செய்யும் அதிகாரிகள் முதலானோர் உபயோகத்துக்கு மாடு அளிக்கும் கடமை
மாடை : முன்னாளில் வழங்கிய பொன் நாணயம் ; கழஞ்சு எனவாம்
மாடைக்கூலி : பொன்னை நாணயமாக அச்சடிப்பதற்கான கூலி
மாணி : மாணவன் ; பிரமசாரி ; கோயில் காரியம் பார்க்கும் பிரமசாரி
மாணிக்கத்தார் : கோயிலைச்சேர்ந்த பெண்கள் ; தேவரடியார்
மாணிக்கப்பண்டாரம் காப்பான் : கோயிலின் ரத்தினம், நகை முதலியவற்றைக் காக்கும் அதிகாரி
மாத்தால் : மா ஒன்றுக்கு இவ்வளவு என்று
மாதப்படி : மாத மாதம் இறுக்கும் வரிவகை ; மாதம், மாதாரிக்கம் மாதாரிக்கை எனவும் பெறும் ; திங்கள்சோறு பார்க்க
மாந்தோட்டுப் பச்சை : பச்சைக்கல் வகை

மாப்பட்டை : முன்னாளில் வழங்கிவந்த காசாய வகை; கிராமங்களில் மங்கைக்கான வரியாக இருக்கலாம்; மரப்பட்டை எனக் கொண்டால் மரங்களை விற்கும் தொழிற்சாலையாகக் கொள்ளலாம்

மாப்பணம் : முன்னாளில் வழங்கிய ஒரு நாணயம்; மாவுக்குப் பணம் வீதம் அளிப்பதையும் குறிக்கும்

மாப்பதக்கு : மாவுக்குப் பதக்கு வீதம் அளிப்பது

மாமகம் : முன்னாளில் வழங்கிவந்த வரிவகை; மகாமகவரி எனக் கொள்வர்; மார்க்கம் என்பதே தவறாக எழுதப்பட்டிருப்பது போலும்

மாமடி : மாமனைக் குறிக்கும் மரியாதைச் சொல்

மாமூலாதாயம் : மாமூலாக அடையவேண்டிய வருவாய்

மாயிலட்டி : சோழர் ஆட்சியிலே அந்தப்புரப் பெண்களுக்கு வழங்கிய மரியாதைச் சொல்

மார்க்காதாயம் : சாலைவழியே செல்லும் சரக்குக்கு இறுக்கும் சுங்கம்; வழி ஆயம் எனவும் படும்

மாராயன் : தலைவன் என்பதைக் குறிக்க முன்னாளில் அரசன் வழங்கிய பட்டப்பெயர்

மாவடை, மாவிடை : கிராமத்தில் கால்நடை அடையும் இடம்; அதனை உபயோகிக்கும் உரிமை

மாவிறை : அரசனுக்கு உரிய வரி; மாவிந்தக்கடமை என்பதும் இதுவேபோலும்

மாளிகைக்கோல் : அரண்மனை அங்கீகாரம் பெற்ற அளவுகோல்

மாளிகை நாயகம் : அரண்மனை விசாரணை உத்தியோகத் தலைமை

மாற்றம் : பதில்; உத்தரவு; தீர்மானம் (சபாமாற்றம்)

மாறி : பொன் மாற்று

மானதண்டம் : மானதண்டு; அளவைக்கோல்

மானபோகம் : மானிய நிலங்களை அனுபவித்தல்

மானவட்டில் : முகத்தல் அளவுக்கான பாத்திரம்

மிலாடு : மலையமான் நாடு; மலாடு எனவும் பெறும்

மிளகுத்தாரகு : மிளகு வியாபாரத்தின் தாரகாக இறுக்கும் வரி

மீகை : (மேல்கை) மேலோங்கியகை; மேலெடுத்தகை

மீயாட்சி : நிலம் முதலியவற்றின் மேல் அதிகாரம்; மேல்வார உரிமை; காராண்மையினின்றும் வேறானது

மீயாளுங்கணம்: மேலதிகாரம் செய்யும் குழு; அதன் உறுப்பினர் மீயாளுங்கணத்தார் எனப்பெறுவர்

மீன்கடமை: மீன் பிடித்தற்கு உரிய வரி; மீன்பாட்டம் எனவும் பெறும்

மீன்பயில் பள்ளம்: மீன் உள்ள தான நீர்நிலை

முக்கால்வட்டம்: கோயில்

முக்குடைக்கல்: சமணர் ஆலயத்துக்குச் சொந்தமான நிலத்தின் எல்லையைக் குறிக்க நடும் மூன்று குடையின் உருவம் பொறித்த எல்லைக்கல்

முக்கை: மூன்றுகை; அரிமுக்கை என்பதுபோல் வருவதைக் காண்க

முக்தியார்: பிறருக்காகக் காரியங்களை நிர்வகிப்பவன்; காரியகர்த்தா

முககட்டணம்: கட்டட முகப்பு

முகட்டுக்கால்: மேட்டுமடையின் கால்

முகந்துடைத்தல்: முகத்தை க்ஷவரம் செய்தல்

முகம்பார்வை: கண்ணாடி; அதற்காக இறுக்கும் வரி

முகமண்டபம்: முன்மண்டபம்; கோயிலின் முன் மண்டபம்

முகவெட்டி: சோழர் ஆட்சிக்காலத்திலே அரசாங்கத்துறைத் தலைவன்; அந்த அந்தத் துறையின் ஓலைகளை நிர்வகிப்பவன் போலும்

முட்டாவாள்: இடையறுமல் தொடர்ந்து பொதுவேலை நடப்பதற்கு ஆள் அளிக்கும் கடமை; அதற்கான செலவையும் குறிக்கும்

முட்டி: முட்டாவாள் என்பதே போலும்

முட்டி: முஷ்டி; கைப்பிடியில் அடங்குவது; பிச்சை; கைபேற்பு என்பதே போலும்; விஷம் தீர்க்கும் மந்திர சிகிச்சை வகையும் ஆகும்

முட்டுதல்: தடைப்படுதல்

முட்டையாள்: முட்டாவாள் பார்க்க

முடங்கு: நிலத்தின் ஒரு மூலையில் நீண்டிருக்கும் பாகம்

முத்தாவணம்: முன்னாள் விற்பனை வரி

முத்திராவதாரம்: காதில் இடும் ஆபரணவகை

முத்திரை கர்த்தா: அரசாங்கம் அல்லது கோயில் முத்திரை வைத்திருக்கும் அதிகாரி; காரியகர்த்தா; நிர்வாகி

முத்திரைச் சங்கு: சங்கின்வகை; முத்திரை பொறிக்கப்பட்ட சங்கு

முத்திரைவாங்கி: முத்திரைகளைப் பரிசோதிப்பவன்; நிலவரி இலாகாவில் எல்லைக் கற்களைப் பரிசோதிக்கும் ஓர் அதிகாரி

முத்துவட்டம்: உருண்டையான முத்துவகை

முதல்: பத்திரம்; ஆதாரவுச் சீட்டு

முதல்: மூலதனம்; வட்டியை மட்டும் உபயோகித்துக் கொள்வதற்காக இட்ட பொருள்; சேமிக்கும் பொருள்

முதல்தீர்த்தம்: கோயிலில் சேவிப்போர் கோஷ்டியில் முதல் முதலாகத் தீர்த்தம் பெறும் மரியாதை உரிமை

முதல் பாவாடை: வெளியே செல்லும்போது முன்னே துணிவிரித்துச் செய்யும் மரியாதை; அதைச் செய்யும் வேலைக்காரத் தலைவன்

முதல் மரியாதை: கோஷ்டியினரில் முதலில் மரியாதை பெறும் உரிமை; முன்மரியாதை எனவும் பெறும்

முதலி(யார்): தலைவன்; பெரியோர்

முதலிப்பிள்ளை: தலைமை முதலிப்பதவியில் உள்ளவனுக்கு அடுத்த படியாக உள்ளவன் போலும்

முதற்படைக் கலனையார்: நானாதேசி என்னும் வியாபாரக்குழுவினரின் ஒருவகையார்; வியாபாரப் பண்டங்களைக் காக்கச்செல்லும் படையினர், அதிலும் முன்னணிப் படையைச் சேர்ந்தவர் போலும்

முதற்பாவாடை: தலைமை வேலைக்காரன்; முதல்பாவாடை பார்க்க

முதற்றிரமம்: (முதல்திரமம்); காசாக இறுக்க வேண்டிய வரிவகை; எதைக் குறிப்பதென்று விளங்கவில்லை; திரமம் என்பது ஒரு நாணயவகை

முதுக்கள்: முன்னோர்

முதுகண்: காப்பாளன்; பாதுகாப்பு அளிப்பவன்

முதுத்தறை: பாழ் நிலம்; அனாதி தரிசு

முப்பாடு வட்டம்: முக்கால் வட்டமே போலும்

முலைவிலை: பரிசப்பணம்; மணப் பெண்ணுக்குக் குழந்தைப் பருவத்திலே தாய்ப்பாலூட்டி வளர்த்ததற்காகத் திருமணத்தின் போது அவள் தாய்க்கு மணமகன் கொடுக்கும் பணம்

முழவரிசை: முழு விகிதம்

முள்ளாடி சின்னம்: முன்னாளில் வழங்கிவந்த வரிவகை; துப்புக் கொடுப்பதற்காக அளிப்பது போலும்

முளைப்பயறு: முளையுடன் கூடிய பயறு; ஒருவகைப் பணிகாரம்

முற்காவலுடைய பாடிகாப்பான்: காவல்புரிவோருள் ஓர் அதிகாரி

முற்கூறுதல்: முதலில் சொல்லுதல்; விலையை நிச்சயித்துக் கூறுதல்; பிரேரணை செய்தல்

முற்றூட்டு: ஸர்வ மானியம்; எந்தவரியும் இல்லாமல் அளிக்கப்பட்டது

முறி: பத்திரம்; கையெழுத் திட்ட சீட்டு

முறிவு: வைக் குற்றத்துள் ஒன்று

முன்பிலாண்டு: முன் சென்ற வருஷம்; கடந்த ஆண்டு

முன்மாலை: கோஷ்டியில் முதல்மாலை அணிவிக்கும் மரியாதைக்கான உரிமை

முன்னிடும் பணம்: பின்னால் வசூல் செய்துகொள்வதாக முதலில் கொடுக்கும் பணம்; முன்பணம்

முனைவீரக்கோடியார்: நானாதேசிகளுள் ஒருவகையார்; போர்த் தொழிலைக் கொண்டவர்; வியாபாரப் பண்டங்களைக் காக்கச்செல்லும் படைப்பகுதியினர்

முன்னோடுக்கு: முன்னாலே செலுத்தியது

மூக்கு: பாத்திரத்தின் வாயில் மூக்குப்போல் உள்ள உறுப்பு

மூக்குவட்டகை: மூக்குப்போன்ற விளிம்பு கொண்ட கிண்ணம்

மூங்கில்வரி: மூங்கில்மீது இறுக்கும் வரி

மூத்ததிகாரம்: தலைமை அதிகாரம்

மூலத்தானம்: கோயில் கர்ப்ப கிருகம்

மூலபருடை, மூலபரிஷத்: சிவன் கோயில் நிர்வாகத்தை நடத்தி வந்த முக்கிய சபை; மூலபரடை, மூலபருஷை, மூலபரிஷை எனப் பல விதமாக எழுதப்பெறும்

மூலபிருத்தியர்: சிவபெருமானுடைய முக்கிய ஊழியரான ஆதிசண்டேசுவரர்; சண்டேசுர நாயனார்

மூலம்: ஆதாரபத்திரம்; ஆதாரவுச் சீட்டு

மெய்க்காட்டு: நேரில் வந்திருத்தல்

மெய்காவல்: பாதுகாப்பாளன்

மெய்தாங்கி: ஆசனம்

மெய்மட்டு: நட்டுவத்துக்கு மிருதங்கம் அடிக்கும் உரிமை; மெய் மட்டுக் காணி எனவும் பெறும்

மெய்யாட்சி: மீயாட்சி என்பதன் வேறு வடிவம்

மெய்வேறு: தனித்தனியாய்

மெழுக்கடிகள்: கோயிலை மெழுகிச் சுத்தம் செய்யும் அடியார்

மெழுக்கு: கோயிலை மெழுகிச் சுத்தம் செய்தல்; கோயில் மூர்த்திக்குச் சந்தனம் புனுகு முதலியவற்றைச் சாத்துதல்

மெழுக்குப்புறம்: கோயில் மூர்த்திக்குப் புனுகுசட்டம் சாத்தும் செலவுக்காக விட்ட மானியம்; கோயிலை மெழுகுவதற்கு விடப் பெற்ற இறையிலி நிலம் எனவும் கொள்வர்

மேட்டுநிலம் : உயர்வான பூமி; மேடேற்றம் என்பதும் இதுவே

மேடுகல்லுதல் : மேட்டு நிலத்தை வெட்டிச் சமமாக்குதல்

மேய்ப்பான் : அடக்கியாளுபவன்; கண்காணிப்பவர் போலும்; மனை மேய்ப்பான் கோள்ளும் இறை என்பது கட்டடங்களைப் பார்வையிடும் அதிகாரிக்கான வரி அல்லது உரிமை என ஆகும்

மேர்வை : மேரை பார்க்க

மேராழி : முன்னாளில் வழங்கிய வரிவகை; மேரை என்பதேபோலும்

மேரை : அறுவடையான மாசூலில் கிராம அதிகாரி ஊழியர்களுக்காகக் களத்தில் பிரித்துக்கொடுக்கும் பங்கு

மேல்சாந்தி : கோயிலின் தலைமைப் பூஜகர்

மேல்வாரம் : நிலத்தின் விளைவில் சொந்தக்காரனுக்கு உரிய பங்கு

மேல்வெட்டப்பேறு : பல கிராமங்கள் கொண்டதான நாட்டின் பெரும் பகுதிக்கு வேண்டிய பொது வேலைகளின் செலவுக்காக விடப்பெற்ற மானிய நிலம் அல்லது கிராமம்

மேலடி : தானியமாகச் செலுத்தும் இறை

மேலெழுத்து : தலைமை ராயச அதிகாரி; கீழ் அதிகாரியின் உத்தரவை அங்கீகரித்து மேல் அதிகாரி இடும் கையெழுத்து; தலைமைக் கணக்கர்; தணிக்கையிடும் அதிகாரி

மேலோடி : மேல் வாரம்

மேற்கோயில் : ஊருக்கு மேற்கே அமைந்திருக்கும் கோயில் ஆன விஷ்ணு கோயில்

மேற்பாடிகாவல் : பாடிகாவலுக்கு மேற்பட்டதான நாடு காவல்; பாடிகாவலின் தலைமை அதிகாரி

மேற்பாதி : மேல்வாரம்

மேனடைநீர் : அதிகப்படியாக உள்ள நீர்

மேனிப்போன் : ஆள் வரி போலும்

மேனீர் : மழைத் தண்ணீர்

மைச்சுனன் : மைத்துனன் என்பதன் வேறு வடிவம்

மோக்கிழம் : மோட்சம்

மோர்வியம் : முகவீணை

மோனம்பாட்டம் : முன்னாளில் வழங்கி வந்த வரி வகை; எது என்ற விவரம் தெரியவில்லை

யக்கிஅச்சு : பழைய நாளிலே கொங்கு நாட்டில் வழங்கிய நாணயம்; யக்ஷியின் உருவம் கொண்டதுபோலும்; ஸ்ரீயக்கி பழஞ்சலாகை யச்சு என்பதுபோன்ற பலவிதமான பெயர்களில் குறிப்பிடப்படும்

யச்கிப்பட்டி : யக்ஷி தேவதையின் வழிபாட்டுக்காக இறையிலியாக அளிக்கப்பட்ட நிலம்; பள்ளிச்சந்தவகை

யந்திரம் : அணைகட்டி நீரைத் திருப்புவது போன்றவற்றுக்கு அமைக்கும் சாதனம்

யாகசாலை, யாகமண்டபம் : கோயிலில் வேள்வி நடத்தும் மண்டபம்

யாத்திராதானம் : அரசன் போர்மீது செல்வதற்குமுன் வெற்றி கிட்ட வேண்டி அளிக்கும் தானம்

யாதவராயன்பணம் : முன்னாளில் வழங்கிவந்த நாணயம்; யாதவராய வமிசத்தார் அச்சிட்டது

யாழ்வல்லான் : யாழ் என்னும் இசைக் கருவியில் வல்லவனுக்கு முன்னாளில் அரசர் வழங்கிய பட்டப்பெயர்

யாளிக்கால் : யாளி உருவத்தில் அமைத்த பாத்திரத்தின் பாதம்

யானைச்சாலை : யானைகட்டும் இடம்; அதன் பராமரிப்புக்கான செலவுக்கு இறுக்கும் வரி; ஆனைச்சாலை பார்க்க

ரங்கமண்டபம் : கோயிலின் உள் மண்டபம்

ரத்தக்காணிக்கை : இரத்தக்காணிக்கை பார்க்க

ரத்தமானியம் : இரத்தமானியம் பார்க்க

ரதகாரர் : சிற்பாசாரிகள்; அவர்களுடைய சபையும் ஆகும்

ரக்ஷகர் : பாதுகாவலர்; ஊர்க்காவலர்

ரக்ஷாபோகம் : விளைவிலிருந்து ஊர்க்காவலுக்காகக் கொடுக்கவேண்டிய பங்கு

ராகுத்தராயன் : குதிரை வீரர்களின் தலைவன்

ராசகர உபாதி : அரண்மனைக்கு இறுக்க வேண்டியவை

ராசகரம், ராஜகரம் : இராசகரம் பார்க்க

ராசகரமிறை முறைமை : அரசாங்கத்துக்குச் செலுத்தவேண்டிய பல வகை வரிகள்

ராசகாரியபண்டாரம் : ராஜ்ய நிர்வாகச் செலவுக்கான கஜானா; ராஜ்ய நிர்வாகத்துக்கான சபையாகவும் கொள்வர்

ராசகாரியம் : அரசாங்க ஊழியம்

ராசகுலம் காணிப்பற்று : ராஜகுடும்பத்தைச் சேர்ந்தோர் அனுபோகத்தில் உள்ள நிலம் அல்லது கிராமம் (தேவதானம், பிரமதேயம், பள்ளிச்சந்தம் ஆகியவற்றுடன் சேர்ந்து காணப்படுவது)

ராசிப்பொன் : கலப்பற்ற சுத்தமான தங்கம்

ராமாநுஜ கூடம் : வைஷ்ணவ யாத்திரிகர்கள் தங்கும் சாவடி

ராயசம்: எழுதுவது; ஆணைப்பத்திரம்; இராயச வேலையைக் கவனிக்கும் ஓலை நாயகம் போன்ற அரசாங்க அதிகாரி
ராயசஸ்வாமி: இராயசர்களின் தலைவன்
ராயசவர்த்தனை: இராயச அதிகாரிக்கான வர்த்தனை
ராஜ்யம்: மண்டலம்போன்ற நிலப்பகுதி
ராஜத்ரோஹம்: அரசாங்கத்துக்கு விரோதமாக நடக்கும் குற்றம்
ராஜபண்டாரம்: அரசாங்கத்தின் கஜானா
ராஜவேச்யபுஜங்கர்: எதிரிகளின் நாட்டைக் கைப்பற்றிய அரசன் கொண்ட விருது
ராஜன்யர்: அரசாங்க அதிகாரிகள்
ராஜஸ்வம்: அரசனுக்கு உரியது
ராஜாவர்த்தம்: ஒருவகை ரத்தினம்

ரிஷபத்தளியிலார்: சிவன் கோயில் தேவரடியாருள் ஒரு பிரிவினர்
ரிஷிசமுதாய(த்தார்): சமணர்களிலே துறவிகளாக உள்ளோர்

ருத்திரகணம்: உருத்திரகணம் பார்க்க
ருத்திரகணிகை: சிவன்கோயில் தேவரடியார்; உருத்திர கணிகை பார்க்க
ருத்திரமாகேச்வரர்: ருத்திரர் மாஹேச்வரர் என்று குறிக்கப் பெறும் இருவகைச் சிவனடியார்கள்; சிவன் கோயில் நிர்வாகத்தைக் கண் காணிக்கும் குழுவினர்
ருத்திரர்: உருத்திரர் பார்க்க

ரேகை: முன்னாளில் வழக்கில் இருந்த பொன் நாணயம்
ரேகைப்பொன்: சுத்தமான தங்கம்

லட்சணம்: பத்திரம்

லாஞ்சினைப்பேறு: இலாஞ்சனைப்பேறு பார்க்க

வக்காணிக்கு மண்டபம்: சாஸ்திரம் புராணம் முதலியவை விரித்து உரைக்கப்படும் மண்டபம்
வக்காணித்தல்: சாஸ்திரம், புராணம் முதலியவற்றை விரித்து உரைத் தல்
வகை செய்கிறவர், வகை செய்வார்: நிலத்தின் தரம் அளவு முதலியவற்றை ஒழுங்கு செய்து தீர்வை விதிக்கும் அதிகாரி

வகைசெய்தல்: நிலத்தின் தரத்தை நிர்ணயித்து வரி விதித்தல்

வகைந்த காசு: நிலத்தை வகைசெய்வதற்கான தீர்வை; நிலத்தைப் பிரித்து அளவிடுவதற்கான வரி; வழக்கு முடிப்பதற்கான கட்டணமும் ஆகும்

வகைப் பேறு: நிலம்வகை செய்வார்க்குக் கொடுக்கவேண்டியவை

வகையறுத்தல்: வழக்குத் தீர்த்தல்; நிலத்தின் தரத்தை அறுதியிடுதல்

வங்கிசம், வங்கிஷம்: வம்சம்; வங்சம் எனவும் காணப்பெறும்

வச்சிரப்படை: கோபுரத்தின் அடிநிலைக் கட்டடம்

வசந்த மண்டபம்: தோட்டத்தின் நடுவில் உள்ள மண்டபம்; வஸந்த உற்சவம் கொண்டாடும் இடம்

வட்டம், வட்டன்: தோறும் (ஆட்டை வட்டம்: ஆண்டுதோறும்)

வட்டம்: முத்துவகை, உருண்டையாக உள்ளது; ஓர் ஆபரணம்

வட்டம்: நாணயமாற்றம் செய்வதற்குக் கூலி; தரகு தள்ளுபடி

வட்ட வியவஹாரி: நானாதேசிக் குழுவின் முக்கியஸ்தன்; பணத்தை வட்டிக்குக் கொடுப்பவன்; ரொக்க லேவாதேவிக்காரன்; நாணய செட்டி

வட்டிநாழி: முன்னாளில் வழங்கிவந்த வரிவகை; நாழிகை வட்டில் எனக் கொள்ளமுடியுமா? நிலத்துக்கு நீர் பாய்வதற்கான நாழிகையைக் கணக்கிட்டு அதன்படி செய்வதற்குக் கொடுக்கும் வரியாக இருக்கலாம்

வடக்குவாசல் செல்வி: ஊரின் வடபுறத்து எல்லைத் தெய்வமான காளி

வடம்: மாலையின் சரம்; மணிவடம்; தேர் இழுக்கும் கயிறு

வடுகவழி, வடுகப்பெருவழி: ஆந்திர தேசம்; ஆந்திராபதம் என்பதன் மொழி பெயர்ப்பு; வடக்கு நோக்கிச் செல்லும் சாலையாகக் கொள்வர் (தக்ஷிணாபதம், உத்தராபதம் என்பவை நோக்குக)

வடுகவாளி: காதில் அணியும் ஆபரணம்

வண்ணாரப்பாறை, வண்ணான்வரி: துணி வெளுப்போர் இறுக்கும் வரி

வண்ணானைக்கும்பிட்டார்: சேரமான் பெருமாள் நாயனார்

வணிதம்: கூற்றம், நாடுபோன்ற ராஜ்யப் பிரிவு (விஜய நகர ஆட்சியில் வழக்கில் இருந்தது); வளிதம் எனவும் காணப்பெறும்

வத்தன், வத்தராயன்: வத்ஸராஜன்

வத்தினை: வர்த்தனையின் வேறு வடிவம்

வதி : வழி, வீதி

வயக்கால் : ஆற்றுக்காலிலிருந்து வயலுக்கு நீர் பாயும் சிறு கால்

வயிராவி, வயிராகி : சிவன்கோயிலில் ஊழியம் புரியும் துறவி (காலக் கிரமத்தில் சிவன்கோயில் காவலாளனைக் குறிப்பது)

வயித்தியவிருத்தி : வைத்தியனுக்கு விட்ட மானிய நிலம்

வர்த்தனை : குறிப்பிட்ட அதிகாரிகள் ஊழியர் முதலியோருக்கு மானியமாக அளிக்கப் பெறுவது

வரகிராமம் : கோயில், மடம், பிராமணர் முதலியோருக்குத் தர்மத்துக் காக அளிக்கப்பெற்ற கிராமம்

வரக்கூலி : நெல் முதலியவற்றை எடுத்து வருவதற்கான வண்டிச் சத்தம், சுமைகூலி

வரத்து : எல்லை

வரத்து : எழுதிவந்த ஓலை ; உத்தரவு

வரத்து : வருவாய்; வரிமுதலியவை தண்டல்

வரணம் : சபையின் உறுப்பினராக நியமனம் ; தேர்ந்தெடுத்தல்

வரவை : வசூல் செய்தது ; வரி ; வருவாய்

வராகப்பணம் : வராக உருவம் பொறித்த பணம்

வராஹன்புள்ளிக்குளிகை : முன்னாளில் வழங்கிய நாணயம்

வராகமுத்திரை : அரசாங்கச் சின்னமான வராஹம் (பன்றி) உருவம் பொறித்த எல்லைக்கல்

வராகன் : முன்னாளில் வழங்கிய பொன் நாணயம்; வராஹ உருவம் பொறித்தது

வராச்சின்னம் : ஒரு பின்ன அளவு

வரி : தீர்வை ; அரசிறை; தீர்வைக் கணக்கு; தீர்வை நிர்ணயித்து எழுதிவரும் ஓலை

வரிக்கற்றை : கூரை வேய்வதற்கு உதவும் புல், வைக்கோல் கற்றை

வரிக்கூறுசெய்வார், வரிக்குக்கூறுசெய்வார் : தீர்வையை நிர்ணயித்து விதிக்கும் அதிகாரிகள்

வரிக்கோலம் : கோயிலில் ஆடும் ஒருவகைக் கூத்து (மகளிர் மார்பில் சந்தனத்தால் இடும் கோலமான தொய்யிலின் பகுதி; மகளிரை அழகுபடுத்துவதை நடனமாடி எடுத்துக் காட்டுவதாக இருக்கலாம்)

வரிசை : ராஜசபை, கோயில் முதலிய இடங்களில் அளிக்கப்பெறும் சிறப்பு ; மரியாதை

வரிசை : நிலத்தைப் பயிரிடும் குடிகளுக்கு உரிய பங்கு

வரிசை : கிராம சபை முதலியவற்றின் கட்டணம் ; தீர்வைக் கணக்கு

வரிசையிலிட்டபடி : வரிக்கணக்கில் கண்டபடி; தீர்வைத் தாரத்தின் பிரகாரம்

வரிசோறு : சோறிடும் கடமை

வரிப்பாடு : வரிவிதித்தல்; தீர்வைகள்

வரிப்புள்ளி : வரிக்கணக்கு வகை

வரிப்போத்தக நாயகம் : அரசாங்க வரிக்கணக்கை நிர்வகிக்கும் துறை; அதன் தலைமை அதிகாரி

வரிப்போத்தகம் : அரசிறைக் கணக்கு; அதை எழுதும் அதிகாரி

வரியிலார் : வரிக் கூறுசெய்வார் பார்க்க

வரியிலிடுதல் : அரசிறைக் கணக்கில் எழுதுதல்

வரியிலீடு : அரசிறைக் கணக்கில் ஏற்றுதல்

வரியோலை : தீர்வையை நிர்ணயித்து இடும் ஓலை; செலுத்த வேண்டிய தீர்வைக்கு அனுப்பும் ஓலை; ஒப்பந்தச் சீட்டு

வருஷகாணிக்கை : ஆண்டுதோறும் செலுத்த வேண்டிய காணிக்கை

வரூதினி : சேனை

வரை : முத்துக் குற்றங்களுள் ஒன்று; கோடு விழுந்தது

வலங்கை : வலங்கைச் சாதியார்

வலங்கை இடங்கை மகன்மை : வலங்கை இடங்கைச் சாதியார் கொடுக்கவேண்டிய தீர்வை; அவர்களில் படைக்கலம் ஏந்தக்கூடிய ஒவ்வொர் ஆண்மகனும் செலுத்தவேண்டியது போலும்

வலத்துக்கை : வலங்கைச் சாதியார்

வழக்குமூறி : பிராது

வழிக்கண்ணார் : வழிவந்தோர்; சந்ததியார்

வழிச்செவ்வை : சாலை; நன்றாக உள்ள பாதை

